# செயலே விளைவு

(சிறுகதைகள்)

பானுகுமார்

## ஒழுக்கம்

எண்ணம், சொல், செயல் இவைகளின் விளைவாக தனக்கோ, பிறர்க்கோ, இன்றோ, பின்னோ, உடலுக்கோ, அறிவிற்கோ துன்பம் தோன்றாது இருக்கும் வகையில் ஆற்றும் செயல்முறை ஒழுக்கம் எனப்படும்.

## பண்பாடு

நான் எனது வாழ்நாளில் யாருடைய உடலுக்கும் மனதுக்கும் துன்பம் தரமாட்டேன்.

துன்பப்படும் உயிர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.

என்றும் பயன் தரும்

இந்த இனிய,

நூலை பரிசாக

வழங்குவதில்

பெரு மகிழ்வுகொள்ளும்-

தங்கள்

அன்புள்ள,

.................... 

# செயலே விளைவு

## (சிறுகதைகள்)

### பானுகுமார்

B1A, முதல் குறுக்குத் தெரு,
அண்ணா நகர்,
செங்கல்பட்டு - 603 001.

# நூற் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | செயலே விளைவு |
| ஆசிரியர் | : | பானுகுமார் |
| பதிப்பாசிரியர் | : | பி. ராமலிங்கம் |
| பொருள் | : | சிறுகதைகள் |
| முதல் பதிப்பு | : | 2005 நவம்பர் |
| மொழி | : | தமிழ் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| நூலின் அளவு | : | 1/8 கிரவுன் |
| மொத்தப் படிகள் | : | 1000 |
| மொத்தப் பக்கங்கள் | : | 128 |
| தாளின் தன்மை | : | வெண்மை |
| கட்டுமானம் | : | சாதாரணக் கட்டு |
| நூல் வெளியீடு | : | B1A, முதல் குறுக்குத் தெரு,<br>அண்ணா நகர்,<br>செங்கல்பட்டு - 603 001. |
| ஒளி அச்சு | : | Prompt Offset Printers, Chennai |
| அச்சிட்டோர் | : | 34, திப்பு தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை. |
| விலை | : | ரூ. **40/-** |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அணிந்துரை | 4 |
| | என்னுரை | 8 |
| 1. | உடல் உயிர் தெய்வம் | 12 |
| 2. | அப்பா | 21 |
| 3. | உயிர் இரக்கம் | 35 |
| 4. | ஓர் ஊரின் கதை | 40 |
| 5. | மூத்தப் பிள்ளை | 45 |
| 6. | வேப்பமரம் | 51 |
| 7. | செயலே விளைவு | 63 |
| 8. | குடும்பம் | 81 |
| 9. | வீட்டைக் கட்டிப்பார் | 86 |
| 10. | பியூன் பரமசிவம் | 95 |
| 11. | ஊருக்கு உபதேசம் | 108 |
| 12. | அந்த நாட்கள் | 121 |

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!

சீனி. சுந்தரராஜன்,
சீனிவாசம்.

27, A சாயிநகர்,
மெயின்ரோடு,
விருகம்பாக்கம்,
சென்னை 600 092.

# அணிந்துரை

மரக்கோணலை பஞ்சு நூல் மாற்றும்!
மணக்கோணலை அறிவு நூல் மாற்றும்!!

என்பது ஆன்றோர் வாக்கு. நாம் சொந்தமாக ஒரு வீடு கட்ட வேண்டுமென்று முடிவு செய்கின்றோம். வீடு கட்டுவதற்குக் கதவு, நிலை, ஜன்னல் சட்டங்கள் ஆகியன தேவைப்படுகின்றன. அதற்கென தோட்டத்திலிருந்து பூவரச மரம் ஒன்று வெட்டப்படுகிறது. அம்மரம் ஒழுங்கின்றி முற்றிலும் கோணலாக இருக்கின்றது.

இம்மரத்திலிருந்து ஒரே சீராகவும், நேராகவும் தேவையான பலகைகளை அறுத்தெடுக்க வேண்டும். அதற்கு கருப்புச் சாயம் பூசிய பஞ்சு நூலை உபயோகித்து கோணலான மரத்தின் மீது கோடிட்டு, அக்கோட்டின் மீது இரும்பு வாளைக் கொண்டு மரப்பலகையை அறுத்தெடுப்பர். இப்பலகைகள் நாம் விரும்பிய

வண்ணம் நேராகவும், சீராகவும் இருக்கும். அதே போன்று கோணல் புத்தி கொண்ட கொடிய மனதையும் செம்மைப்படுத்தக் கூடிய ஆற்றல் அறிவு நூல்களுக்கு உண்டு. இதன் காரணமாகத்தான் மனமது செம்மையானால் மந்திரங்கள் ஜெபிக்க வேண்டாம்! என்பர் பெரியோர்.

சிந்தைக்கு விருந்தளித்து, மனம் செம்மை யடையவும், மேன்மை பெறவும் ஒவ்வொருவரும் அறிவு நூல்களைப் படிக்க வேண்டும். அது இலக்கியம், இதிகாசம், காப்பியம், கதை, கவிதை என எவ்வகை நூலாகவும் இருக்கலாம். ஆனால் இந்நூல்களின் மூலம் மனம் செம்மையடைய வேண்டும். அது ஒன்றே தலையாய இலட்சியமாக இருக்க வேண்டும்.

இலக்கியத்தின் ஒரு பகுதிதான் சிறுகதை என்பது. அப்படியானால் இலக்கியம் என்றால் என்ன? இலக்கு + இயம் = இலக்கியமாகும். LIterature is the records of best thoughts என்பாரும் உண்டு. படைப்புத் திறன் கொண்ட படைப்பாளி ஒருவன் மக்களுக்கும் சமுதாயத்திற்கும், என்னவிதமான இலக்கினை, அதாவது இலட்சியத்தை எடுத்துச் சொல்ல விரும்புகின்றானோ அதுவே இலக்கியமாகும். அவ்விலக்கியத்தின் ஒரு பகுதியான சிறுகதைத் தொகுப்பே இன்று செயலே விளைவு! என்ற புத்தகமாக உங்களின் கைகளிலே தவழ்கிறது.

நாம் சொல்ல விரும்புகின்ற கருத்துக்கள் மக்களிடம் எளிதில் சென்றடைய பெரிதும் உதவுபவை கதைகள்தான். நம் சிறுவயதில் ஒற்றுமையின் மேன்மையை விளக்கிட சொல்லப்பட்ட வேடன் புறாக்கள், சிங்கம் எருதுகள் கதைகளும், கிட்டாததை வெட்டன மற என்பதை எடுத்து இயம்பிய நரியும், திராட்சைக் கதையும், தீயதைப் பாராதே! தீயதைப் பேசாதே!! தீயதைக் கேளாதே! என்பதை எடுத்துச் சொல்லும் மூன்று குரங்குகள் கதையும், இப்படி எண்ணற்ற பல நல்ல செய்திகள் கதைகள் மூலம் நம் மனதில் நீங்கா இடம் பெற்ற செய்தியினை நாம் அறிவோம். அவ்வகையிலே நல்ல கருத்துக்களைக் கதைகள் மூலம் எடுத்துச் சொன்னால், அது மிக எளிதில் மனதில் பதியும், அதனால் தான் நமது தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா ஆகியோர் நல்ல பல கருத்துக்களைக் கதைகள் வாயிலாக இளம்வயது முதலே எடுத்துச் சொல்லிவருகின்றனர்.

அருமை நண்பர் திரு. பானுகுமார் அவர்களின் செயலே விளைவு! என்ற சிறுகதைத் தொகுப்பு சிந்தைக்கு விருந்தளிப்பதாக உள்ளது. "அப்பா" என்ற கதையில் "உயர்ந்த இடத்தில் வளமாக இருந்தால்தான் உறவுகள் ஒட்டிக்கொள்ளும். வறுமையில் இருந்தால் உறவுகள் உதறிக்கொள்ளும். இது உலக இயல்பு" என்று

உறவினர்களைப் பற்றியும், குடும்ப பாரத்தைச் சுமக்கின்ற தலைமகனின் தவிப்பினை "மூத்த பிள்ளை" என்ற கதையின் வாயிலாகவும், வாழ்வில் நம்பினார் கெடுவதில்லை என்பதை "வீ ட்டைக் கட்டிப்பார்" என்ற சிறுகதையிலும் அழகாக எடுத்துச் சொல்லியியுள்ளார். இளம் வயதின் நினைவுகள் எல்லாம் எளிதில் மறந்து போய்விடக் கூடிய கனவல்ல. அது காலத்தால் அழித்திட முடியாதகாவியம் போன்றதாகும். நெஞ்சிருக்கும் வரை நிலைத்து நிற்கக் கூடிய நீங்காத நினைவுகள்தான் இளம்வயதின் நினைவுகள் என்பதை எடுத்துச் சொல்லும் "அந்தநாட்கள்" கதையும் என்றென்றும் நினைவில் நிலைத்து நிற்கக்கூடியதென்று சொன்னால் அதில் மிகையேதுமில்லை.

திரு. பானுகுமார் அவர்களின் எழுத்துப்பணி என்றென்றும் தொடர வேண்டுமென்று நான் வணங்கும் நற்றமிழைத் தொழுது வாழ்த்துக்கின்றேன்.

அன்புடன்,

***சீனி. சீனிவாசன்.***

# என்னுரை

"மக்கள் விரும்புகின்றவற்றை எழுதுகிறவர்கள் எழுத்தாளர் களுமல்ல; வெளியிடுபவர்கள் பத்திரிக்கைக்காரர்களுமல்ல; மக்களுக்கு எது தேவை என்று எழுத்தாளன் நினைக்கிறானோ, அதை மக்கள் விரும்பும் முறையில் கொடுப்பவனே எழுத்தாளன், பத்திரிக்கையாளன்." - அகிலன்.

இது என்னுடைய இரண்டாவது சிறுகதைத் தொகுதி. இலக்கியத்தின் ஒரு பகுதி சிறுகதை. இலக்கியம் ஒரு கலை. கலையைப் படைப்பது படைப்புத்திறன்.

என்னுடைய வாழ்க்கையில் ஒரு அர்த்தத்தைத் தேடிக் கொள்வதற்காகப் படிப்பதையும், எழுதுவதையும் ஒரு நோக்கமாக ஏற்படுத்திக் கொண்டேன்.

கட்டுரைகள் எழுதித்தான் எழுத்துலகில் புகுந்தேன். என்னுடைய புகழ்பெற்ற கட்டுரைத் தொகுதி ஒன்றை முதுபெரும் எழுத்தாள நண்பர் ஒருவரிடம் கொடுத்தேன். பாராட்டுவார் என எதிர்பார்த்தேன்.

"என்னங்க, அவுங்க சொன்னதையும், இவுங்க சொன்னதையும் எழுதியிருக்கீங்க. அவுங்க போட்ட சக்கையை நீங்கள் ஏன் மீண்டும் துப்புகிறீர்கள். உங்கள் இளமையையும், அறிவையும் உங்கள் முகத்தில் பார்க்கிறேன். படைப்புக் கலையில் ஈடுபடுங்கள். வெற்றி கிடைக்கும்" என்றார்.

இந்த நிகழ்ச்சிதான் சிறுகதை இலக்கியத்தில் புகுவதற்கு வழியைக் கொடுத்தது. சிறுகதை எழுதுவது

என்பது மிகமிக சுலபமே இல்லை. பயிற்சியும் முயற்சியும் இருந்தால்தான் படைப்பாளியாகலாம்.

நாவல் எழுதுவதைவிட சிறுகதை எழுதுவது கடினம் என்பதை ஆங்கில எழுத்தாளர் ஹென்றி வாரன் சொல்லியதை படித்தபோது ஒன்றும் புரியவில்லை. நடைமுறைப்படுத்தும் போது தான் அவரின் அனுபவம் விளங்கிற்று.

சிறுகதையை சில மணித்துளிகளில் படித்து முடிக்க வேண்டும். வேகமாக ஓடும் பரபரப்பான உலகில் மக்கள் படிப்பது அரிது. அப்படி படிப்பவர்களும் காலத்தை கருதி சில நிமிடங்களில் புரட்டுகின்றனர். அந்த நிமிடங்களில் கதையின் கருத்தை உணர்த்த வேண்டும். எவ்வளவு பெரிய அற்புதமான கலையை செய்து கொண்டிருக்கிறோம் என்பது எழுத எழுத தான் உணர முடிந்தது.

"ஓர் எழுத்தாளன் ஆத்மசத்தியோடு எழுதுகிறானே **அது ஒரு தவம்.** நீங்கள் கதை என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே அது ஒரு காலத்தின், ஒரு **வாழ்க்கை சாஸனம்"** ஜெயகாந்தனின் அனுபவம் உண்மையே.

கம்பனே ஆசைபற்றிதான் ராமன் கதையை எழுதினார். வேறு எந்த பலனையும் அவர் எதிர்பார்க்கவில்லை. எனது கதைகளும் சமுதாயத்திற்கு படைக்கப்பட்டனவேயன்றி எந்த பிரதி பிரயோசனத்தை நான் எதிர்பார்க்கவே இல்லை. ஆசை, படிப்பு, அனுபவம், ரசனை, கற்பனை, எழுதும் உத்தி இவையே கதை எழுத மூலதனம்.

இலக்கிய உலகிற்கு பயன்படும் விதத்தில் என்னுடைய கதைகளில் ஒரு புதுக் கருத்தையும், ஒரு புது விளக்கத்தையும் ஒரு புதிய அழுத்தத்துடன் ஒரு புதிய பார்வையில் புதிய அம்சங்களோடு சிறுகதை படைப்பதை நோக்கமாகக் கொண்டு எழுதிய கதைகள் தான் இத்தொகுப்பில் உள்ளன.

எனக்கு எழுதுவது தான் பெருமையே தவிர எந்தப் பத்திரிக்கையில் வருகிறது என்பது நோக்கமல்ல.

படைப்பாளியின் நிஜத்தை அந்த படைப்புக்குள் இருக்கும் உள்ளார்ந்த ஒளியில் கண்டு பிடித்து விடலாம்.

ஒரு பிடி சோற்றில் சமூக உழைப்பு இருப்பதையும் நான் அணிந்துள்ள ஆடைகளில் பலரது உழைப்பு உள்ளது என்பதையும், நான் சுகமாக வாழ்வதில் பலரது உழைப்பும் உள்ளது என்பதை ஒவ்வொரு நிமிடமும் உணர்ந்து நன்றி செலுத்தி வருகிறேன். சமுதாயத்திற்கு எழுத்துக்களின் மூலம் என் நன்றியை செலுத்துவது என்ற நோக்கத்தில் சமூகப் பார்வையுடன் எழுதிவருகிறேன்.

இந்த யாகத்தில் நான் எந்த அளவுக்கு வெற்றியைப் பெற்றேன் என்பது எனக்குத் தெரியாது. சமுதாயத்திற்கு பட்டக் கடனை திருப்பி அளிக்கிறேன் என்ற மனநிறைவு எனக்குள்ளது.

காயப்படுத்தப்படும் மானுடத்திற்காக என் கண்களில் கசிந்த நீர்கள் கதைகளாயின. பாத்திரங்கள் கதைக்காக உயிர்பெற்றவை அல்ல. நான் பார்த்த, பழகிய அனுபவித்த பிறர் சொல்ல கேட்ட பாத்திரங்கள்.

எந்தக் கலைப் பொருளாகட்டும் குறையே இல்லாத நிறையுடன் படைப்பது சாத்தியமன்று. பெரிய பெரிய எழுத்தாளர்கள் விஷயத்திலே அப்படி என்றால் என்னைப் போன்றவர்கள் விஷயத்தில் என்ன சொல்வது? இதில் உள்ள குறைகள் மட்டும் என்னுடையது.

இக்கதை தொகுப்பில் உள்ள சில கதைகளை வெளியிட்ட இதழ்களுக்கும், அணிந்துரை வழங்கிய நண்பர் அவர்களுக்கும் அச்சிட்டோர், பதிப்பகத்தார் அனைவருக்கும் நன்றி, பிறந்தது முதல் இந்த நிமிடம் வரை எனக்கு உதவி செய்துவரும் மானுடத்திற்கும் நன்றி. என்னுடைய இயக்குநர் வாழ்க்கைத் துணைக்கும் நன்றி.

இக்கதை தொகுப்பை படிக்கும் நீங்களும் உங்கள் அன்புக் குடும்பமும் உடல்நலம், நீளாயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெஞ்ஞானம் பெற எல்லாம் வல்ல இறையாற்றலிடம் பிரார்த்திக்கிறேன்.

வாழ்த்துக்கள்.

25-10-2005,
மன்னார்குடி.

என்றும் உங்கள்,
பானுகுமார்.

# 1. உடல் உயிர் தெய்வம்

இராமகிருஷ்ண பரமஹம்சருக்கு இறைவன் ஒரு தோதாபுரியை அனுப்பி ஞானங்களை வழங்கியது போல எனக்கும் ஒரு அம்மையாரை அனுப்பி இறைவன் ஞானங்களை வழங்கினார்.

தமிழ்நாடு எக்ஸ்பிரஸில் புதுதில்லிக்கு பயணித்துக் கொண்டிருந்தபோது சந்தித்த அந்த அம்மையார்தான் இக்கதையைச் சொன்னார்.

பௌதீகத்தில் ஆராய்ச்சிப் பட்டம் பெற்ற நான் உலக விஞ்ஞானிகள் கருத்தரங்கிற்கு தமிழ்நாடு சார்பாக ஒரே பெண் பிரதிநிதியாக புதுதில்லி சென்று கொண்டிருந்தேன்.

விஞ்ஞானியான எனக்கு அடிக்கடி மனதை அரிக்கும் குழப்பம் அம்மையாரிடம் இல்லை. உடல் உயிர் தெய்வம் பற்றித்தான் அவருக்கு எத்தனை ஞானம், தெளிவு. எத்தனை ஆண்டுகள் பாடுபட்டு சேகரித்த அனுபவமோ! அவரது ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு முத்துக்குச் சமம். அவர் சொன்ன கதை என்னை மெய்ஞ்ஞானியாகவும் மாற்றிய பிரமிப்பு இன்னும் என்னை விட்டு அகலவில்லை.

வாழ்க்கை ஓட்டத்தில் எனக்கு ஒரு புதிய பிரவாகத்தை முதன் முதலில் காட்டியதும் பாலைவெளிகளில் திரிந்த எனக்கு ரிஷிகளின் வனாந்திரத்தை அறிமும் செய்ததும், புராண இதிகாச

புருஷர்களையெல்லாம் எனக்குச் சொந்தக்காரர்கள் என்று காட்டியதும் அந்த ரயில் சிநேக அம்மையார்தான்.

இந்தக் கதையை என் கணவரிடம் முதலில் சொன்னேன். ஆச்சரியப்பட்ட கணவர், தன் மனதில் இவை டார்ச் அடித்ததாகச் சொன்னார்.

முழுக்க முழுக்க அவர் பேசியது உடல் உயிர் தெய்வத்தைப் பற்றித்தான்.

அதிகாலையில் ஏ.சி. கோச்சில் சன்னலோரமாக திரைச் சீலையை விலக்கி அமர்ந்தேன். ஓடும் ரயிலில் சன்னல் இருக்கையில் அமர்வதில் ஒரு தனியான சுகம்தான்.

திரைப்படத்தில் வேகமாக மாறும் காட்சிகளைப் போல மடமடவென்று வேகமாக மாறும் அதிசியத்தைக் காணக் கோடிக் கண்கள் வேண்டும். அன்றும் அப்படித்தான் வேடிக்கைப் பார்த்தபடி இருந்தேன். வேகவேகமாக ஓடும் மரங்கள் என் எண்ணத்தையும் வேகமாக ஓட்டிக் கொண்டிருந்தன.

சிறிது நேரம் கழித்துப் பையிலிருந்த அரவிந்தரது புத்தகத்தை கையிலெடுத்துப் பிரித்தேன். அரவிந்தர் படத்தையும் அன்னையின் படத்தையும் பார்க்கும்போது ஒரு உந்துதல் ஏற்படும். அது மகான்கள் தரும் ஆற்றல்.

அப்போதுதான் எதிரே இருந்த அம்மையார் என்னை கவனித்திருக்க வேண்டும். என்னைத் தொட்டு "அரவிந்தர் புத்தகமா?" என்று கேட்டார்.

எதிரே இருக்கையில் இருந்த அவர் மீது என் பார்வையைச் செலுத்தினேன். அவர் கண்கள் என்னைக் கவர்ந்தன. அவர் முகம் பேசியது. அவரிடம் பேச வேண்டும் என்ற உந்துதல். அம்மையாரின் பார்வையிலும் முகத்திலும், பேச்சிலும் ஒரு மயக்கம் உண்டாக்கும் ஆற்றல் இருந்தன. ஒரு வினாடியிலேயே கண்களால் கட்டுப்பட வைக்கும் பேராற்றல். எனக்கு வேதாத்திரி மகரிஷியின் ஞானப் பார்வைதான் நினைவுக்கு வந்தது.

மடை திறந்த வெள்ளம் போல் அம்மையார் என்னிடம் ஞானத்தை வழங்கினார்.

"அண்டத்தில் உள்ளதுதான் பிண்டத்தில் உள்ளது என்று சும்மா சொல்லவில்லை மாணிக்கவாசகர். அண்டங்கள் அனைத்தும் பஞ்சபூதங்களின் கூட்டு. அதே பஞ்ச பூதங்கள் தான் நம் உடலாய் உருவெடுத்துள்ளது."

அண்டத்திற்கெல்லாம் மூலம் சுத்தவெளி. இது பேராற்றல் கொண்டது. எப்படித் தெரியுமா? நாம் வாழும் பூமிப்பந்தை மணிக்கு ஆயிரம் மைல் வேகத்தில் ஓடவைத்து ஆண்டுக்கு ஒருமுறை சூரியனை சுற்ற வைப்பதுதான் சுத்தவெளி.

பூமி, சந்திரன், கோள்கள் அனைத்தையும் துல்லியமாக காலந்தவறாமல் இயக்குவது ஒரு மாபெரும் கம்ப்யூட்டர். மாபெரும் ஆற்றல் கொண்ட இந்தக் கம்ப்யூட்டரைத்தான் வெட்டவெளி என்றும் சுத்தவெளி என்றும் சிவன் என்றும் சொல்கிறோம்.

மாபெரும் ஆற்றல் தன்னிறுக்க ஆற்றலினால் விண் என்ற சக்தியை உண்டு பண்ணியது. இதைத்தான் சக்தி என்றும் பார்வதி என்றும் சொல்கிறோம்.

சிவனும் சக்தியும் ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தில் சேர்ந்ததுதான் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்று உருவாகியது. பஞ்சபூதத்தை வழிபட கருதிய முன்னோர்கள் ஐந்து கரம் கொண்ட யானை முகம் வைத்தப் பிள்ளையாரை வணங்கி வந்தனர்.

அதே பஞ்சபூதம் தான் நம் உடலாய் வந்துள்ளது. எப்படி? நிலத்துக்கு உரியதாய் உடம்பு. நீருக்கு இரத்தம். நெருப்புக்கு உஷ்ணம். காற்றுக்கு பிராண வாயு. விண் உயிராய் வந்துள்ளது.

உயிர் எப்படித் தெரியுமா உடலில் குடி கொண்டுள்ளது? உலக விஞ்ஞானிகள் எல்லாம் கண்டுபிடிக்க முடியாததை திருமூலர் அறிந்து உணர்ந்து சொல்லி வைத்துள்ளார். பசுவின் ரோமத்தின் பருமன் அளவில் நூறில் ஒரு ஆயிரம் அளவுடையது உயிர். அணுவுக்கு அணுவாய் உள்ளது உயிர்.

சுத்தவெளியாகிய சிவனும், சக்தியான விஷ்ணும் உராயும் போது ஏற்படுவது காந்தம். ஆகாயத்தில் வான் காந்தமாயுள்ளது. நம் உடலில் ஜீவ காந்தமாயுள்ளது.

ஒவ்வொரு உயிருக்கும் ஒரு நடுமையம் உண்டு. மனிதராகிய நமக்கு மூலாதாரம் தான் மையம். ஆசன வாய்க்கு மேலே ஒரு அங்குலத்திலும் முதுகுத் தண்டின் கீழேயேயும் இருப்பது மூலாதாரம்.

நாம் சாப்பிடும் உணவானது இரசம், இரத்தம், சதை, கொழுப்பு, எலும்பு, மஞ்சை, சுக்கிலம் என ஏழு தாது ஆகிறது. ஏழாவது தாதுவாகிய விந்து, டார்ச்

லைட்டுக்குப் பேட்டரி போல் நம் உடலின் இயக்கத்தில் அடிப்படையாய் உள்ளது.

மூலாதாரத்தில் விந்துவும், உயிரும், காந்தமும் குடிகொண்டுள்ளன. உடலில் ஓடிக் கொண்டு இருக்கும் ஜீவகாந்தமானது மூலாதாரத்தில் உள்ள சக்தியை டிப் செய்து ஓடிக் கொண்டிருக்கிறது.

நம் உடலில் உயிரும் காந்தமும் இருக்கிறது. காந்தமானது பஞ்ச தன் மாத்திரைகளாக மாற்றம் பெற்று அழுத்தமாக, ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக மாறி நம் உடல் இயக்கத்தை நடத்திக் காட்டுகிறது.

காந்தமானது தன் மாற்றம் பெற்று கடைசியாக ஆறாவதாக மனித மனமாகச் செயல்படுகிறது. இந்த காந்த தன் மாற்றத்தை கந்தனாக்கி, ஆறுமுகத்தை உண்டாக்கி கந்தனாக வழிபடுகிறோம். காந்தத்தை மறந்து போனோம்?

காந்தமானது பஞ்ச தன் மாத்திரைகளாக மாறுவதால் தான் நாம் பார்க்கிறோம், ரசிக்கிறோம், சுவைக்கிறோம், நுகர்கிறோம் செயல்படுகிறோம்.

இந்த உடம்பை பேணுவது ஓர் உன்னதமான கலை என்பதை நம் சமுதாயம் முழுவதும் கண்டு கொள்ளவில்லை. உடம்பினை ஓம்புதல் என்பது வாழ்க்கையின் பாகம் என்பதை ஒடிக் கொண்டிருக்கும் மனிதக் கூட்டம் இன்னும் உணரவில்லை.

உடலுக்கும் உயிருக்கும் ஒத்த உறவு இருந்தால் ஆரோக்யமாக இருப்போம். உடலுக்கும் உயிருக்கும்

சண்டை வந்தால் நோயுறுவோம். சண்டை நீண்ட நாட்கள் நீடித்தால் தீராத நோய்க்கு ஆளாவோம். இரண்டுக்கும் மனமுறிவு ஏற்பட்டால் மரணம்தான்.

உடலுக்கும் உயிருக்கும் ஒத்த உறவு ஏற்பட, வாத, பித்த சிலேத்துமத்தை, அதாவது ரத்த ஓட்டம், காற்று ஓட்டம், வெப்ப ஓட்டம் ஆகிய மூன்று ஓட்டங்கள் சீர்கெடாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த ஓட்டத்தை சீராக்க உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

இதையெல்லாம் கேட்க கேட்க எனக்கு வியப்பாகவும் உபயோகமாகவும் இருந்தது. அவரது பேச்சில் எனக்கு இதுவரை தெரியாத உண்மைகள் இருந்தன. நீ என்ன பெரிய விஞ்ஞானி? உனக்கு தெரியாததை எல்லாம் நான் சொல்லுகிறேன் என்று என் தன் முனைப்பை இறைவன் தடுத்து கற்றுக் கொடுக்கிறான் என்று கருதினேன்.

இதுவரை உடல் உயிர் என்றால் விஞ்ஞான ரீதியாக ஏதோ என்று முடிவு செய்திருந்தேன். மீண்டும் அவர் பேச ஆரம்பித்ததார்.

இரண்டு கைகள் சேர்த்து தட்டினால் சத்தம் வரும். அதுபோல உடலும் உயிரும் இயங்கும்போது மனம் உண்டாகிறது.

மனதுக்கும் உயிருக்கும், உடலுக்கும் உயிருக்கும் உள்ள அறிவை அறிந்து கொள்ளுதல்- உயிர் காட்சி பெறுதல் - இதுதான் ஆத்ம சாட்ச்சாரம். முதலில் உயிரை உணர்ந்தால்தான் உயிரின் மூலமான தெய்வத்தை உணர முடியும்.

உயிர் உணர்வு பெறாமல் தெய்வத்தை உணர்வது வேதாந்தம். உயிர் உணர்வு பெற்று தெய்வத்தை அறிவது சித்தாந்தம்.

பேரியக்க மண்டலத்தில் மூன்று மறை பொருட்களாக அமைந்து உள்ளன. அதுதான் சுத்தவெளியான தெய்வம், உயிர், காந்தம். உயிர்தான் சுழற்சியில் மனித மனமாக செயல்படுகிறது.

மூன்று மறைபொருட்களையும் மனிதன் உணர்ந்தால்தான் ஆறாவது அறிவாகிய சிறப்பறிவு, முழுமைபெறும்.

ஒருவிதையில் மரம் எப்படி அடங்கியிருக்கிறதோ, அதே போல் உடல் இயக்கத்தில் அணு முதற்கொண்டு எல்லா உலகங்களும் அடங்கியுள்ளன. பிரபஞ்சத்திலும் அடங்கியுள்ளன.

முழுமுதற் பொருளாக உள்ள இறையாற்றலே தன் மாற்றம் பெற்று அணுவாகி, அணு முதற்கொண்டு எல்லா உலகங்களும், இந்த பிரபஞ்சமாகி உள்ளது.

மாபெரும் ஆற்றல் கொண்ட சுத்தவெளியின் குழந்தைகளே, பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து உயிர்களும்.

இறைவன் என்று சொல்லப்படுபவர் எல்லாப் பொருட்களிலும் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருக்கிறார். எனவே, உனக்கும் இறைவனுக்கு ஒரு சங்கிலிப் பிணைப்பு இருக்கிறது. அதன் ஒரு முனை நீ. மறுமுனை இறைவன். இதனால் தான் "யாதும் ஊரே

யாவரும் கேளீர்." "காக்கை குருவிகள் எங்கள் ஜாதியடி" என்று சொல்லி வைத்தார்கள்.

இறைவன் என்ற சங்கிலியின் ஒரு முனையைக் கீழே போட்டுவிட்டு எங்கே போய் தேடினால் அவர் கிடைப்பார்.

உலக உயிரினங்கள் எல்லாம் பிரம்மம். சுத்தவெளி. எல்லாவற்றிலும் இறைவனைக் காண்பதே பிரம்ம ஞானம்.

தெய்வமே ஒவ்வொரு உயிரிடமும் குடி கொண்டுள்ளான். நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டு. நம்மிடமே தெய்வீக நீதிமன்றம் உள்ளது.

பிறப்பு, இறப்பு இந்த இரண்டைப் பற்றிய நினைவு இருந்தால் அதுதான் பிரம்மஞானம். மறந்தால் அது உலக ஞானம். பிரம்ம ஞானம் பெற்று விட்டால் பின் ஒவ்வொரு நிமிடமும் இன்பமான நிமிடம்தான்.

அம்மையார் என்னிடம் பேசும்போது என் கைகள் ஒன்றையொன்று பிசைந்து கொள்வதையும், என் கண்கள் அகமலர்ந்து சன்னல் வழியாக வெட்ட வெளிகளை வெறிப்பதையும், என் நரம்புகள் நாணேற்றிக் கொள்வதையும், என் ரத்தம் சுடுவதையும் நான் புதிய ஞானப் பாதையை உணர்ந்த ஜீவனாக உடைந்து உருமாறுவதையும் என்னால் உணர முடிந்தது.

நாக்பூர் ஸ்டேசன் நெருங்கிக் கொண்டிருந்தது. தன் உடமைகளையெல்லாம் எடுத்து அழகாகப் பெட்டிக்குள் அடுக்கினார்.

அவர் இன்னும் பேசமாட்டாரா என்ற ஆசையில் ஆவலுடன் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

புகை வண்டி நின்றபின் புறப்படத் தயாராய் எழுந்து நின்ற அம்மையார், கடைசி முறையாக என்னைப்பார்த்து "விஞ்ஞானிகளாயினும் உடல் உயிர் தெய்வம் என்ற உண்மைகளை உணர்ந்தால்தான் பிறப்பின் நோக்கத்தை எய்தமுடியும். இதையெல்லாம் உணராவிட்டால் மிருகங்களைப் போல் வந்து இருந்து மடிந்து போவதுபோல் தான். வரட்டுமா?" என்று விடை பெற்றார்.

மீண்டும் கண்களினால் அருள் தீட்சை வழங்கிப் போனார். உறைந்து போன நிலையில் இருந்த நான் அவர் போன திசையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். புகைவண்டி புதுதில்லியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. என் மனமோ மெய்ஞ்ஞானம் பெற்ற மகிழ்ச்சியில் புதிய வழியில் வந்து கொண்டிருந்தது.

என் கண்களில் ஆயிரம் மின்னல்களை அடிக்க வைத்ததும், தரிசாக கிடந்த என் மனதை உழுது போட்டதும், எனக்குள் என் நரம்புகளைத் திரியாக்கி உரமேற்றியதும் அம்மையாரின் போதனைகள் தான். அம்மையாரை மனசுக்குள் கோயில்கட்டி மௌன ஆராதனை செய்து வருகிறேன். அவரின் பேச்சு என் மனசின் கரைகளுக்கு ஆயிரமாயிரம் ஆனந்த அலைகளை இன்னும் அனுப்பிக் கொண்டிருக்கிறது.

# 2. அப்பா

இன்று அப்பாவின் திவசம்.

ஆண்டுக்கு ஒருமுறை வரும் அப்பாவின் திவசம் என்றால் வீட்டில் திருவிழா மாதிரி களை கட்டிவிடும்.

என் வீட்டில் மட்டுமல்ல. தம்பிகள் வீட்டிலும்தான். சாஸ்திரிகள் வந்து விட்டார். யாகம் வளர்க்கிறார். மந்திரங்கள் ஓதி முடிந்தவுடன் ஏழைகளுக்கு வேட்டி சட்டையுடன் அன்னதானம்.

முதல் நாள் இரவு ஒருவேளை. மறுநாள் காலை திவசம் முடியும்வரை தண்ணீர் கூட கிடையாது.

அப்பா மீது அவ்வளவு பக்தி. இன்றைய தினத்தில் அனாதை ஆசிரமங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியவற்றில் அப்பாவின் பெயரில் அன்னதானம்.

மன்னார்குடி, திருவாரூர், திருச்செந்தூர், பழனி, திருவண்ணாமலை போன்ற பெரிய கோயில்களில் எல்லாம் அப்பாவின் பெயரில் அர்ச்சனை. பிரசாதம் விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

வீட்டின் ஹாலில் அப்பாவின் பெரிய புகைப்படம். மாலைகளும், மலர்களும் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. வீடே மந்திரங்களாலும், யாகப் புகையினாலும், ஏழைகளின் நன்றியுணர்வாலும் நிரம்பி இருக்கின்றன.

என் கைகளிலிருக்கும் எள்ளுக்கு மனைவி நீர் வார்க்கிறாள். அப்பாவின் படத்தின் முன் வணங்குகிறோம்.

அப்பா அமைதியா ஆசிர்வதிக்கிறார். அப்பா, அப்பா.... என் கண்கள் கலங்குகின்றன. நம் குடும்பம் இன்று இருக்கும் நிலையைப் பார்த்து அனுபவிக்க கொடுத்து வைக்காத அப்பா....

அன்று ஞாயிற்றுக்கிழமை. காலையிலிருந்தே அப்பா ஒன்றும் சாப்பிடவில்லை. கண்கள் மூடியபடியே அசைவற்றுக் கிடந்தார். அடிக்கடி வரும் வயிற்றுவலி அவரை வாட்டியது. வேளாவேளைக்கு குளுகோசும் பழச்சாறும் கொடுத்தார்கள். அதையும் வாந்தி எடுத்துவிட்டார். மாலையில் நிலைமை மோசமானது. சிறுநீர் பிரியவில்லை. மூச்சு மெதுவாக ஓடியது. டாக்டர் வந்து இன்ஜெக்ஷன் செய்துவிட்டுச் சென்றார்.

அருகிலேயே அம்மாவும் நானும் இருந்தோம். தம்பி தங்கை எல்லாம் ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்தனர். மயான அமைதி. அம்மாவின் கண்களில் தாரை தாரையாக கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

அப்பா என்னைப் பார்த்துக் கொண்டே இருந்தார். அவரால் பேச முடியவில்லை. கண்கள் என்ன பேசின என்பதை உணர முடியவில்லை. மாலை 5.30. மெல்ல மெல்ல அவர் உயிர் பிரிந்தது. ஓவென்ற கதறல்கள். செய்வதறியாது திகைத்து நின்றேன். அப்பாவின் கைகளை பிடித்து கதறி அழுதேன்.

அப்பா வழியில் நெருங்கிய உறவுகள் அதிகம் இல்லை. அப்பா ஒரே பிள்ளை. அம்மா வழியில் உறவினர்கள் அதிகம். அம்மாவின் அக்காவின் கணவர் தான், அம்மாவை அப்பாவுக்கு திருமணம் செய்து வைத்தார்களாம்.

ஒரே பிள்ளை. வீடு வாசல் இருக்கிறது. கறுப்பாக இருந்தாலும் அழகாக இருக்கிறான். பிழைத்துக் கொள்வான் என்று, தன் விதவை மாமியாரின் சம்மதம் பெற்று அம்மாவின் திருமணத்தை நடத்தி வைத்தாராம், இதனால் தனது சகலை மீது அப்பாவுக்கு மதிப்பும் பிரியமும் அதிகம்.

பெரியப்பா குடும்பம் பெரியது. எட்டு குழந்தைகள். சென்னையில் பெரிய இங்கிலிஷ்காரன் கம்பெனியில் வேலை. அதனால் இங்கிலிஷ்காரன் மாதிரியே பாவணைகள்.

அநேகமாக வருடத்திற்கு ஒருமுறை பெரியப்பா எங்கள் வீட்டுக்கு வருவார்கள். நான் சின்னக் குழந்தை. விவரம் தெரியவில்லை. அம்மா சொல்லித்தான் தெரியும். பெரியப்பா வரப் போகும் கடிதம் வந்ததும் வீடே மாறிப் போய்விடுமாம்.

பெரியப்பாவுக்கு மிகவும் பிடிக்கும் கயிற்றுக் கட்டில் தயார் நிலையில் இருக்கும். பெரியப்பா வருமுன் ஆட்டுக்கறியில் மஞ்சள் தடவி ஊசியால் சணலில் கோத்து வெயிலில் காயும். உப்பு கண்டம் டின் டின்னாக பதப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும். நாட்டு மீன் குழம்பும் கருவாடும் இல்லாமல் சாப்பிட மாட்டார். தலைவாழை

கட்டு கட்டாக கட்டி இருக்கும். கொதிக்க கொதிக்க வெந்நீரில் குளிப்பார்.

அவர் வரும் நேரம் பசு கன்று ஈன்றிருக்கும். பால் எப்போதும் சொம்பு சொம்பாக இருக்கும். பசும்பால் யோகமும் அவருக்கு உண்டு. பனை விசிறியை அப்பா வாங்கி வந்துவிடுவார். மதியானம் சாப்பிட்டுவிட்டு நார்க் கட்டிலில் படுத்து ரெஸ்ட் எடுப்பார். நான்தான் விசிறியால் விசுறத் தெரியாமல் விசுறுவேனாம்.

அப்பாவும், பெரியப்பாவும் நாள் முழுவதும் விடிய விடிய பேசுவார்களாம். திரும்பவும் அதிகாலை எழுந்து பேசுவார்களாம்.

பெரியப்பா ஊர் கிளம்பினால் "போகலாம் என்ன அவசரம்" என்று அப்பா சொல்லி தங்க வைத்து விடுவாராம். இருவரும் நாட்டு நிலைமைகளை அலசி அலசி பேசுவதை படிக்காத அம்மா ரசிக்க முடியாமல் திணறுவாராம்.

பெரியப்பாவின் முதல் பையன் எல்லா லீவுக்கும் வந்துவிடுவான். அப்பா அவனுக்கு கறியும், மீனும், பாலும் ஊட்டி வளர்ப்பார்கள். பெரியம்மாவின் இரண்டாவது பிரசவம் எங்கள் வீட்டிலேயே வைத்து கொண்டார்கள். இதனால் பெரியப்பாவின் இரண்டாவது பிள்ளைக்கு எங்கள் ஊர் பெருமாள் பெயரை வைத்து விட்டார்கள்.

கொழுந்தியா டெலிவரிக்கு வந்தபோது, அப்பா அம்மாவை விட அதிகம் கவனித்துக் கொண்டார். ஒருமுறை, ஆற்றுக்கு பெரியம்மாவும் அம்மாவும் குளிக்கப்போய்விட்டார்கள். பகல் வெயில் அதிகமாய்

இருந்தது. பிள்ளைப்பெற்ற உடம்புக்காரி செருப்பில்லாமல் சென்று விட்டாரே என்று அப்பாவே செருப்பை எடுத்துக்கொண்டு ஆற்றங்கரை போய் கொடுத்து வந்தாராம். உறவுகளை உபசரிப்பதில் அப்பாவுக்கு இரக்கம் அதிகம்.

அப்பாவின் வியாபாரம் நாளடைவில் சுருங்கியது. குடும்பமோ விரிந்தது. ஆறு பிள்ளைகள், வியாபார நஷ்டம், குடும்பத்தில் செலவுகள் அதிகம். இதனை உணர்ந்து கொண்ட பெரியப்பா குடும்பம் எங்களை விட்டு ஒதுங்கியது.

வேதங்களும், உபநிடதங்களும் ஈகை பற்றி என்ன குறிப்பிட்டுள்ளது. நமது வருமானத்தில் பத்து சதவீதம் உறவினர்களுக்கும் பத்து சதவீதம் சமுதாயத்திற்கும் செலவு செய்யச் சொல்லியுள்ளது. தற்கால உறவுகள் பிறரிடம் எதிர்பார்க்கும் உறவுகள் தானே?

சென்னையில் உறவினர் திருமணம். ஒரு நல்ல சட்டையை டோபியிடம் வாடகைக்கு எடுத்து எனக்கு மாற்றி விட்டு என்னையும் திருமணத்திற்கு அழைத்துச் சென்றார். வறுமையில் இருக்கும் தனக்கும் தன் பிள்ளைக்கும் பெரியப்பா வீட்டில் ஆறுதல் கிடைக்கும் என்று போனார். இரண்டு நாள் இருந்து வரலாம் என்று சென்ற அப்பாவுக்கு ஏமாற்றம். அப்போது எனக்கு வயது பத்து. நன்றாக நினைவில் உள்ளது.

உறவினர் திருமணம் முடிந்தது. பெரியப்பா வீட்டுக்குச் சென்றோம். பெரியம்மா ஒரு ஓரத்தில் தனியாக உட்கார்ந்திருந்தார்கள். பெரியப்பா குழந்தைகள் எல்லாம்

வண்ண வண்ண உடை அணிந்து அவரவர் வேலையில் மூழ்கி இருந்தனர். "உடம்பு சரியில்லை. நீயும், அப்பாவும் ஊருக்குப் போங்கள்" என்று பெரியம்மா எட்டணா நாணயம் ஒன்றைக் கொடுத்தார். "போகும் வழியில் டிபன் சாப்பிட்டுக் கொள்ளுங்கள்" என்று அனுப்பினாள்.

அன்று உடைந்து போன அப்பாவின் மனம், பிறகு பெரியப்பாவின் குடும்பத்தின் மீது ஒட்டவேயில்லை. கடைசி வரை அவர்கள் பக்கம் தலை காட்டாமல்தான் இருந்தார் அப்பா. பெரியப்பா நோயால் அவதிப்பட்டு கடைசி காலத்தில் மரணப் படுக்கையில் இருந்தார். அம்மாவின் வேண்டுகோளுக்கிணங்க ஒருமுறை போய் பார்த்து வந்தார்.

உயர்ந்த இடத்தில் வளமாக இருந்தால்தான் உறவுகள் ஒட்டிக்கொள்ளும். வறுமையில் இருந்தால் உறவுகள் உதறிக் கொள்ளும். இது உலக இயல்பு.

ஆறு குழந்தைகளுடன் அப்பாவும் அம்மாவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். வறுமையில் எங்களை அப்பா நன்கு படிக்க வைத்துக் கொண்டு இருந்தார். பிச்சை புகினும் கற்கை நன்றல்லவா?

"சாப்பாட்டுக்கே வழி இல்லை. இன்னும் என்ன குழந்தை பெத்துக்கறது" ஆறாவது குழந்தை பிறந்த போது பெரியம்மாவின் விமர்சனம்.

"கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது குழந்தை களுக்குப் படிப்பு எதற்கு? புள்ளைகளை கடைகளில்

வேலைக்குச் சேர்த்து விடவேண்டியது தானே!" பெரியப்பாவின் அறிவுரைகள். விமர்சனங்களைக் கேட்டு அப்பாவும் அம்மாவும் துடித்துப் போனார்களாம். உதவ முடியவில்லை. பரவாயில்லை, ஆறுதல் வார்த்தைகள் கூறலாம். அதுவும் இல்லை. வறுமையில் உள்ளவர்களுக்கு ஆசாபாசங்கள் கிடையாதா? படிக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாதா? உறவுகளின் இலட்சணம் இதுதானா?

"அப்பா! நமக்கு மட்டும் சொந்தக்காரங்களே இல்லை. நாளைக்கு ஸ்கூல் திறந்ததும் மத்த பசங்கள் எல்லாம் லீவிலே அங்கே போனேன். இங்கே போனேன் என்று சொல்லுவாங்க"

"அப்பா! பக்கத்து வீட்டு ராணியை அவுங்க மீசை வைச்ச மாமா தினமும் சைக்களில் உட்கார வைச்சு ஸ்கூலிலே விடுறாங்க. எனக்கு மாமா இல்லையா அப்பா?".

அப்பா என் கேள்விகளுக்கெல்லாம் மௌனத்தை பதிலாக அளிப்பார்.

ஆற்றங்கரை பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது முடித்தேன். ஆரம்ப பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் உயர்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு சேர எனக்கு முதலில் இடம் கிடைக்கவில்லை.

"எங்க ஸ்கூல்லே படிச்சு பாஸ் ஆன பிள்ளைகளுக்கு இடம் கொடுத்தது போக மீதியுள்ள ஐந்து சீட்டுகளை நிரம்பியாச்சு. உங்க பையனுக்கு அட்மிஷன் கிடையாது" இயந்திரமாக பேசினார் பிரின்ஸ்பால்.

இவரோட வாதாட இது நேரமில்லை என்று அப்பாவுக்கு தோன்றிற்று. அவசர அவசரமாக என்னை அழைத்துக்கொண்டு "பிஷப் ஹவுஸ்" போனார். அப்பாவை பார்த்த பிஷப் கைகுலுக்கி வரவேற்றார். ஆம். பிஷப்தாமஸ் அப்பாவின் பள்ளி நண்பர். அரசு அனுமதியுடன் புதிதாக ஒரு சீட் ஏற்படுத்தி பள்ளியில் என்னைச் சேர்த்தார் பிஷப்தாமஸ்.

"அப்பா எனக்கு ஒரு பழைய சைக்கிள் வாங்கி கொடுங்கப்பா. ஸ்கூலுக்கு எல்லா பசங்களும் சைக்கிளில் வருகிறார்கள்."

அப்பா தன் இயலாமையை பற்றாக்குறையை எண்ணி சோகமடைந்திருப்பார். என்னால் அந்த வயதில் எப்படி புரிந்து கொள்ள முடியும்?

அப்பா தான் என்னுடைய முதல் ஆசிரியர். முதல் தோழன். விளையாட்டு நுணுக்கங்களை சொல்லித் தருவார். பூமி சுழல்வதையும், மழை வருவதையும், பருவகாலங்கள் மாறுவதையும், புயல் அடிப்பதையும் சின்ன வயசிலேயே சொல்லிக்கொடுத்தார்.

அலெக்சாண்டரையும், நெப்போலியனையும், தாகூரையும், காந்தியையும். வ.ஊ.சி.யையும், பட்டேலையும், பாரதியையும் அப்பாதான் எனக்கு சிநேகமாக்கினார்கள்.

பருவ வயதில் எனக்கு உடலில் மாறுதல்கள். எனக்குள் இன்னதென்ற குறுகுறுப்பை ஏற்படுத்திய போது ஒரு நண்பனுக்கு சொல்வதுபோல் உடம்பின்

வளர்ச்சிகளை காஷிவலாக சொல்லிவிடுவார். உடற்கூறு, ஹார்மோன்கள் பற்றியெல்லாம் கதைபோல் சொல்லி புரிய வைத்துவிடுவார்.

என் நண்பர்களை தெரிந்தெடுப்பதில் அப்படி கவனமாக இருப்பார். பொருள் வறுமை ஒரு பக்கமிருந்தாலும், அறிவு புகட்டுவதில் அப்பாவிடம் வறுமையே கிடையாது.

எஸ்.எஸ்.எல்.சி படித்தபோது குடும்ப வறுமை ஓரளவு நீங்கியது. அப்பாவுக்கு மீண்டும் வியாபாரம் சூடு பிடித்தது. செல்வந்தர் வீட்டு பிள்ளைகளைப் போல் எல்லா வசதிககளையும் எனக்குச் செய்து கொடுத்தார் அப்பா.

ஸ்கூல் முடிந்ததும் மாலையில் உடுப்பி ஓட்டலில் டிபன் சாப்பிட வசதி செய்து கொடுத்தார்.

பள்ளிக்கூடம் விட்டதும் நேராக ஓட்டலில் டிபன் சாப்பிட்டு விட்டுத்தான் வீட்டிற்கு வந்து படிப்பேன். இந்த டிபன் விவகாரம் அம்மாவுக்கும், தம்பிகளுக்கும் தெரியாது. தெரிந்தால் அம்மா சத்தம் போடுவாள். அந்த காசில் வீட்டில் எல்லோரும் டிபன் சாப்பிடலாம் என்பது அம்மாவின் வாதமாக இருக்கும். அப்பா என் கல்விக்காக செய்த முயற்சிகள் அதிகம். இன்னும் மறக்க முடியலை.

எம்.பி.ஏ. படிக்க வைத்தார் அப்பா. வேலைக்காக முயற்சி செய்து கொண்டிருக்கும் வேலையில் அப்பாவின் மரணம்.

தெருக்காரர்கள், ஊர்க்காரர்கள் எல்லாரும் அப்பாவின் மரணச் செய்தி கேட்டு ஓடி வந்தனர்.

ஐம்பத்திநான்கு வயதில் மரணம். "படிக்க வச்சப் பிள்ளை வேலைக்குப் போய் சம்பாதிப்பதைப் பாக்கலையே" ஊர்க்காரர்களின் கதறல்கள், வருத்தங்கள்.

உறவுக்காரர்கள் ஒவ்வொருவராக வந்தனர். இரவு முழுவதும் சங்கொலி. அழுகைச் சத்தம்.

மறுநாள் காலையில் பூச்சரங்கள் தொங்கும் அப்பாவின் கடைசி பயணத்துக்கு வாகனம் தயாராவதை பார்த்தேன். மனம் இறுகியது.

அப்பாவின் இறுதி குளியல் நடைபெற்றது. நாள்தோறும் ஆற்றுக்கு எங்களை அழைத்துச் சென்று குளிப்பாட்டி அழைத்து வரும் அப்பாவுக்கு இறுதிக் குளியல் நடைபெறுகிறது. நாள்தோறும் எங்களை அழுக்குத் தேய்த்து குளிப்பாட்டிய அப்பாவுக்கு இறுதி குளியல். ஒரு நாள் குளிக்கும்போது "அப்பா! நீ வேணா நானே குளிச்சுக்கிறேன்" என்றேன். வயதானதால் ஏற்பட்ட கூச்சம் ஒரு பக்கம், விளையாடப் போக வேண்டும் என்று அவசரம் ஒரு பக்கம். ஓடிவிட்டேன்.

மறுநாள் அப்பா விடவில்லை. சிறுநீர் பிரியும் இடத்தில் அழுக்குகளைக் கழுவி விடுவார். உடம்புன்னா என்ன... அதை எப்படி பத்திரமாக பாதுகாக்கனும்... சுத்தமா எப்படி வச்சிக்கனும் என்பதெல்லாம் பொறுமையாக விளக்கினார்.

அப்பா அழுக்குத் தேய்க்கும் முறை, சோப்பு போடும் அழகு, குளித்தவுடன் ஈரத்தை துண்டால் துடைத்துவிடும் நேர்த்தி. எல்லாவற்றிலும் ஒழுங்கு, சிக்கனம், அழகு இவற்றையெல்லாம் கற்பித்துப் போன அப்பா.

பூப்பல்லக்கில் அப்பாவின் உடல். என்னால் துயரத்தையும், துக்கத்தையும் தாளமுடியவில்லை. பல்லக்கு ஊர்வலத்தில் கடைசியாகச் சென்றேன். நண்பர்கள் கைத்தாங்கலாக அழைத்துச் சென்றனர். தேம்பித் தேம்பி அழுதுகொண்டே சென்றேன்.

தாமதமாக வந்த பெரியம்மா அலறி அடித்துக் கொண்டு ரிக்ஷாவில் வந்திறங்கி பல்லக்கை இடை மறித்தார். பல்லக்கை கீழிறக்கி அப்பாவின் முகத்தை பெரியம்மாவிடம் காட்டினார்கள். சாவில்தான் உறவினர்களிடம் பாசம் பொங்கும்.

இடுகாட்டில் தோளில் பானைத் தண்ணீரை வைத்துக்கொண்டு மூன்றுமுறை வலம் வந்து கொண்டிருந்தேன். எனக்கு முடிவெட்டும் அப்பாவின் நண்பர், அழுத முகத்தோடு ஒவ்வொரு சுற்றிலும் பானையை அரிவாளால் ஒரு பொத்தல் போட்டார்.

அப்பாதான் பாமர மக்களிடமும் எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்பதை வெட்டியான், சலவைத் தொழிலாளி ஆகிய தொழிலாளர்கள் அழுததிலிருந்து தெரிந்து கொண்டேன்.

அப்பாவின் உடல் நன்கு வெந்துவிட்டது என்று மறுநாள் காலை வெட்டியான் வந்து சொன்னான்.

அவனுக்குப் பணம் தரணும் போலிருக்கிறது. எனக்குத் தெரியாது. நின்று கொண்டே இருந்தான்.

வீட்டில் உறவினர்கள் சொல்லித்தான் அவனுக்கு பணம் கொடுத்து அனுப்பினேன்.

அப்பாவின் பால் தெளியல் சடங்கிற்கு மீண்டும் இடுகாட்டுக்குச் சென்றேன்.

ஊர் பெரியவர்கள் அப்பாவின் எலும்புகளை எல்லாம் சேகரித்து வேகாத மண் பாண்டத்தில் வைத்தனர்.

ஆறு ஒளி பெற்றிருந்தது. அலை அடித்தபோது கண்கள் கூசின. எனக்கு மிகவும் பரிச்சயமான காவிரி ஆறு. என் இளம் வயது தோழி. மழையில் அவளுடைய துள்ளல். இரவில் அவளது மௌனம். பனி பெய்யும் காலையில் அவளது நாணம். எத்தனை நெருக்கமானவள் என் ஆறு.

இன்று எனக்கு ஆறு பழக்கமே இல்லாத புதிய இடம் போல தோன்றுகிறது.

இடுப்பளவு ஆழம் கூட இல்லாத ஆற்றுக்கு ஆயிரம் அடி ஆழமிருப்பதாக நினைத்தேன். ஒரு நிமிஷம் உடம்பு நடுங்கிச் சிலிர்த்தது.

ஆற்றில் இறங்கி இடுப்பளவு நீரில் நின்று கொண்டேன். அப்பாவின் முகம் பானையில் தெரிந்தது.

“பானையை பின்பக்கம் வழியா போட்டுவிட்டு திரும்பிப் பாராமல் போ” பெரியவர்கள் சொன்னார்கள். பானையை நழுவ விட்டபின் மூழ்கினேன். திரும்பிப் பார்க்கவில்லை.

பானை மூழ்கியது. பூக்களில் ரத்தச் சிவப்பில் செம்பருத்தியும், அரளியும், வெள்ளை நந்தியா வட்டையும், பழுப்பு நிற செண்பகமும் மெதுவாக மிதந்து சுழித்து ஓடி அவை மறைந்தன.

புதிய வேட்டியை உடுத்திக் கொண்டேன்.

அப்பா மறைந்து முப்பது வருடங்கள் ஆகிவிட்டன.

உயர்ந்த பதவியில் நானும், தம்பிகளும். பேரன் பேத்தி என்று ஆல்போல் தழைத்து இன்று இருபத்து ஐந்து பேர்கள்.

அம்மா அப்பாவின் தியாகத்தைச் தனது பேர பிள்ளைகளிடம் கதையாகச் சொல்லி அழுவார்.

தனது சக்திக்கு அதிகமாக, ஒரு உயர்ந்த மனிதனாக இன்றைக்கு உயர்புகழோடு மெய்ஞ்ஞானம் பெற்றவனாக இருப்பதற்கு அப்பாதான் காரணம். வறுமையிலும் உயர்கல்வி புகட்டி அறிவுக் கண் திறந்தவரும் அப்பாவே. என் நம்பிக்கையின் சிநேகிதனும் அப்பாவே! என் துணிச்சலுக்கு துணைவனும் அப்பாவே! நினைக்க நினைக்க எனக்கு மலைப்பாக இருக்கிறது.

அப்பா எனக்கு நண்பனாக, தோழனாக தனியொருவராய் என்னை வளர்த்து இந்த நிலைக்கு கொண்டுவர ஒவ்வொரு நிமிஷமும் உழைச்சு ஓடானவர்.

எரியும் மெழுகு வர்த்தியாய் இருந்து ஆறுபிள்ளைகளை வளர்த்து ஆளாக்கிய அப்பா, பிள்ளைகள் புகழுடன் செல்வந்தர்களாக வாழும் நிலைமையைக் காணவில்லையே என்று அம்மா வருத்தப்படாத நாட்கள் இல்லை.

பிள்ளைகளது எல்லோர் வீட்டின் முகப்பிலும் அப்பா படத்தில் சந்தன மாலையுடன் அணையாத மின் விளக்குடன் அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்.

அப்பா புன்சிரிப்புடன் எங்களை இன்றும் ஆசிர்வதித்துக் கொண்டிருக்கிறார்.

ஆம்! அப்பா ஒரு மெழுகுவர்த்தி தான்.



# 3. உயிர் இரக்கம்

ரவியும் குருவும் ஒரே அலுவலகத்தில் பணிபுரியும் நண்பர்கள்.

ரவி வீட்டுக்கு மூத்த பிள்ளை. நாச்சியார் கோயிலில் வறுமையில் இருக்கும் வயதான தாய் தந்தை. பின் பிறந்த இரண்டு தங்கைகள். குடும்ப வறுமையைப் போக்க சென்னை வந்தவன். முதலில் வி.ஜி.பி.யில் நூறு ரூபாய் சம்பளத்துக்கு சேர்ந்தான். குடும்ப வறுமையை போக்க வி.ஜி.பி. சகோதரர்களைப் போலவே தனது விடா முயற்சியாலும் ஊக்கத்தாலும் படிப்படியாக உயர்ந்தவன்.

இப்போது அரசுத் துறை அலுவலகத்தில் பொறுப்பான பதவியில் இருக்கிறான். தங்கைகளை இப்போது படிக்க வைத்து கொண்டிருக்கின்றான். இவனது சம்பளத்திலேயே குடும்பம் முன்னேறிக் கொண்டு வருகிறது.

ரவி இயல்பாகவே வள்ளலாரின் பக்தன்.

பாரதியின் பாடலை இரசிப்பவன்.

"காக்கை குருவி எங்கள் சாதி, நீள் கடலும்
மலையும் எங்கள் கூட்டம்"

என்ற பாரதியின் பாட்டை அடிக்கடி முணுமுணுப்பான்.

"வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று மரம், செடி, கொடி மனிதர்கள் பலரும் படும் துன்பங்களை கண்டால் தானும் வருத்தமுறும் இயல்பினன். கடையெழு வள்ளல்களில் முல்லைக்கு

தேர் கொடுத்த பாரியினை ரவிக்குப் பிடிக்கும். அவனது முகத்திலே முப்பது வயதுக்குப் பொருந்ததாத முதிர்ச்சி.

ஆபீசில் ரவியின் சீட்டில் எப்போதும் கூட்டம் இருக்கும். அடுத்தவர்களுக்கு உதவி புரிவதென்றால் ஓடி ஓடி செய்வான். அலுவலகம் வரும் மனிதர்களும் நேராக ரவியிடம் தான் செல்வார்கள். சக பணியாளர்களும் தங்களது சந்தேகங்களை ரவியிடம் கேட்பார்கள். மேலாளரும் ரவியிடம் பொறுப்பான வேலைகளை கொடுப்பார். தன்னால் இயன்றவரை உடலால் உதவி செய்யும் கடமையில் இருந்து ரவி தவறமாட்டான். மானுடக் கடமையை உணர்ந்தவன்.

குருவோ இதற்கு நேர் எதிர். தான் உண்டு. தன் வேலையுண்டு. மற்றவர்களைப் பற்றி கவலைப் படுவதில்லை. மற்றவர்களின் அருமை பெருமைகளை உணராதவன் என்று இவனைப் பற்றிய விமர்சனமும் உண்டு.

ஆனால் ரவியும் குருவும் அலுவலகத்தில் மட்டும் இணைபிரியாத நண்பர்கள். வெளியில் டீ சாப்பிடும் போதும், மதியம் உண்பதற்கு ஹோட்டலுக்கு செல்லும் போதும் இணைந்தே செல்வார்கள்.

குரு ஒரே பிள்ளை. திண்டுக்கல்லில் அப்பா பெரிய அரிசி வியாபாரி. அம்மா மாதர் சங்கத் தலைவி. வாழ்க்கையை இரசிப்பான். தனது சம்பளத்தை தானே செலவு செய்து கொள்வான். தனக்கு மட்டும் வேண்டியதை வாங்கிக் கொள்வான். அடுத்தவர்களுக்கு கடனோ தர்மகாரியங்களோ என்பது அவனது சிந்தனையில் துளியும் கிடையாது.

ஆபீஸ் முடிந்ததும், பீச், சினிமா, நாடகம், டான்ஸ் என்று சுற்றுவான். ஆபீசில் மட்டும்தான் ரவிக்கு நண்பன், மற்ற இடங்களுக்கு ரவியை அழைத்துச் செல்லமாட்டான்.

விடுமுறை நாட்களில் ஒரு ரூபாய் கடலையுடன் பீச்சில் பொழுதை கழித்து வருபவன் ரவி. குருவோ விடுமுறையில் காசுகளை தன் சுகத்திற்காக ஊதாரித்தனமாகச் செலவிடுவான்.

அலுவலகத்தில் கடிகாரம் மணி ஒன்று அடித்தது. பணியாளர்கள் அனைவரும் மதிய உணவிற்காகப் புறப்பட்டனர்.

சிலர் தங்கள் கொண்டு வந்த கேரியரைத் திறந்தனர்.

பெண் பணியாளர்கள் கூட்டமாக மேசையைச் சுற்றி அமர்ந்து சாப்பிடத் தொடங்கினர்.

பேச்சிலர்களான ரவியும், குருவும் வழக்கமாக ஓட்டலுக்குச் சென்றனர்.

குரு எப்போதும் லிமிடெட் மீல்ஸ் டோக்கன் வாங்குவான்.

ரவி அன்லிமிடெட் மீல்ஸ் டோக்கன் வாங்குவான். இருவரும் தனித்தனியான மேஜைகளில் சாப்பிடுவது வழக்கம்.

ரவி சாப்பாட்டு ராமன் என்பது குருவின் நினைப்பு.

இத்தனைக்கும் குருவை விட ரவியின் குடும்பம் பெரியது. மூத்தப்பிள்ளையானதால் சம்பளப் பணத்தில் பெரும்பகுதியை அப்பாவுக்கு அனுப்பி வைப்பான்.

குருவோ ஒரே பிள்ளை. சம்பளத்தில் மீதமுள்ள பணத்தை தனது பெயரில் வங்கியில் சேமிப்பான்.

இளமையின் இன்பத்திற்கு தாராளமாக செலவு செய்து இரசிப்பான் குரு. ரவியோ சாப்பாடு விஷயத்தில் மட்டும் தாராளமாக இருப்பான்.

ரவி தினமும் அன்லிமிடெட் மில்ஸ் சாப்பாடு சாப்பிடுகிறானே? எவ்வளவுதான் சாப்பிடுவான் என்று பார்க்க குரு ஆசைப்பட்டான்.

தன் ஆசையை நிறைவேற்ற அன்று மதியம், அன்லிமிடெட் மீல்ஸ் டோக்கன் வாங்கி, ரவியுடன் சாப்பிட அமர்ந்தான்.

இலையில் கையை வைச்ச குரு பக்கத்தில் ரவியின் செய்கையைப் பார்த்து திடுக்கிட்டான்.

வைத்திருந்த பதார்த்த வகைகளில் ஒவ்வொன்றிலும் பாதி பாதி எடுத்து இலையின் ஓரத்தில் வைத்துவிட்டு மீதியைச் சாப்பிட்டான் ரவி.

மொத்தத்தில் குரு சாப்பிடும் அளவே சாப்பிட்ட ரவி, மீதி பெரும்பகுதி உணவை அப்படியே மூடிவிட்டு எழுந்தான்.

இருவரும் எழுந்து கைகழுவ வாஷ் பேஷன் சென்றனர். ரவியின் செய்கை குருவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

"குடும்ப வறுமையில் இருக்கும் ரவி, அதிகமாகப் பணம் கொடுத்து அன்லிமிடெட் டோக்கன் வாங்கி,

அளவுடன் சாப்பிட்டுவிட்டு மீதியை வேஸ்ட் பண்றானே பாவி" என்று குரு நினைத்தான்.

ஒட்டலை விட்டு இருவரும் வெளியே வந்தனர்.

சாப்பிட்ட பின்பு இலைகளை ஒரு கூடையில் கொண்டு வந்து வெளியே கொட்டினார்கள். எப்போது இலை கூடை வரும் என்று பிச்சைக்காரன் ஒருவனும், நாய்களும், காக்கைகளும் காத்திருந்தன.

ஒவ்வொரு இலையாக பார்த்து வீசி எறிந்துவிட்டு, சாதத்துடன் பல பதார்த்தங்கள் இருந்த ஒரு இலையை மட்டும் எடுத்தான் அந்தப் பிச்சைக்காரன்.

"எந்தப் புண்ணியவானோ எனக்கு தினமும் படி அளக்கிறான். இதில் பாதி எனக்கு, மீதி பாதியை நாய்களுக்கும், காக்கைகளுக்கும் போடுகிறேன்," என்று சொல்லிக் கொண்டே எச்சில் இலையில் பாதியை தனக்கு எடுத்துக் கொண்டு மீதி பாதியில் நாய்களுக்கு ஒரு பங்கும், காக்கைகளுக்கு ஒரு பங்கும் தனித்தனியே வைத்து, இரண்டுக்கும் சண்டை வராமல் காவலும் காத்தான்.

இந்தக் காட்சியைக் கண்ட ரவியின் முகத்தில் பத்து விளக்குகள் ஒரே நேரத்தில் சுடர் தெறிந்தன. ரவிக்கு பெருமையாக இருந்தது. மனம் நிறைவாக இருந்தது. சந்தோஷமாக இருந்தது.

தன் செய்கையை எண்ணி அவமானத்தால் குரு தலை குனிந்தவாறே ரவியுடன் அலுவலகம் சென்று கொண்டிருந்தான்.

"உயிரினங்கள் ஒன்றையொன்று வாழ்த்திடும் போது - அதனை உள்ளிருந்து வாழ்த்துவதும் உயிர் இரக்கமன்றே."

# 4. ஓர் ஊரின் கதை

**எ**ன்னடா மரத்துக் கதையைச் சொன்னாங்க. மனுஷ கதையை மறந்தாங்க. இப்ப ஊர் கதை வேறா? என்ன கதை உடப்போறீங்களா? நீங்க கேக்கறது எனக்குப் புரியுதுங்க. சத்தியமாச் சொல்றேனுங்க. இது ஊர் வாசிகளின் கதை இல்லிங்க. ஒரு ஊரான அசல் கதைங்க. என் சுய சரிதையுங்க.

என் வரலாற்றையும், பெருமையையும் தானுங்க கூறப் போறேன். கருவுற்ற கதை, பிறந்த கதை, வளர்ந்த கதை என்று வரலாறு முழுசும் சொல்லி உங்களைத் தொந்தரவு செய்யமாட்டேன்.

இந்த காலத்து சிறுகதை மாதிரி கச்சிதமா முக்கியமா சொல்ல வேண்டிய தகவல்களை மட்டும் சொல்றேன். எனக்கு என்னைப் பற்றி என்னவெல்லாம் ஞாபகம் வருதோ, அதைச் சொல்றேன். நூறு வயசைத் தாண்டிய அனுபவத்தை சொல்ற கிழம்னு நினைச்சிக் காதீங்க. நான் மனசாலே இளமை. வயசாலே முதுமை.

பொறந்தா ராஜ வம்சத்திலே பொறக்கணும்னு சொல்லுவாங்க. ராஜாக்கள் அதாவது மன்னருக்கு குடியிருந்த இடம் தாங்க என் பேரு. அட ! இன்னுமா புரியலை. அதாங்க மன்னார்குடி. இதுதான் என்னுடைய ஒரிஜினல் பெயர்.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னாலே என்னை "மன்னார் கோயிலு"ன்னு அழைச்சாங்க. கோயில்னா தெலுங்கில் "குடி"ன்னு பொருள். நாயக்க மன்னருங்க

ஆட்சிக்கு வந்தாங்கள்ளே! அப்ப "மன்னார் கோயிலை" மன்னார்குடின்னு மாத்திட்டாங்க.

என்னிடம் இருந்த மன்னர்கள் எல்லாம் அவுங்க அவுங்களுக்குப் பிடிச்சுப் போன செல்லபேராலே வேறு என்னை கூப்பிடுவாங்க. ராஜமன்னார்குடி, குலோத்துங்க சோழ விண்ணகரம், வண்துலாரபதி, செண்பகராண்ய ஷேத்திரம், ராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம். தென்னகத்து துவாரகை. ஆறு பேருதாங்க எனக்கு ஞாபகமிருக்கு. என்னைப் பற்றிய பழமொழி சொல்ல மறந்திட்டேனே. மன்னார்குடி மதில் அழகு, கோயில் பாதி குளம் பாதி, மண்ணில் மிக்கது மன்னார்குடி மறையோர் மிகுந்தது மன்னார்குடி, சொல்லிக்கிட்டே போகலாம். போதுங்க.

காட்டையெல்லாம் அழிச்சு ஊராக்க முற்பட்ட போது பிறந்தவன். நான் பொறந்தப்ப ராஜாதிராஜ சோழன் தானுங்க என்னை உருவாக்கினாரு. பொறந்தப்ப வைச்சப் பேரு, ராஜாதிராஜ சதுர்வேதி மங்கலம். இதை நான் சொன்னா நம்பமாட்டாங்க. முதல் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 1070 - 1125) கல்வெட்லேயே இருக்குதுங்க.

இப்ப இங்க இருக்கு பாருங்க ஸ்ரீ கைலாச நாதர் கோயில், ஜெயங்கொண்டநாதர் கோயில், ராஜ கோபாலசாமி கோயில் மூணும் ராஜாதிராஜன் பேராலேதான் கட்டப்பட்டன.

என்னுட்ட இருந்த மற்ற மன்னர்களை எல்லாம் சொல்லட்டுமா. மூன்றாம் குலோத்துங்கன். இவருதாங்க செங்கல்லா இருந்த பெரிய கோயிலை கல்கோயிலா கட்னாரு. அச்சுதப்ப நாயக்கர், அவரது மகன் ரகுநாத

நாயக்கர், அவரது மகன் விஜயராகவ நாயக்கர், அவரது மகன் மன்னாருதேவன் எல்லோரும் பெரிய கோயிலை விரிவாக்கம் செய்தவங்க. மராட்டிய மன்னரு, சகஜி மன்னரு, ஸ்ரீராஜ கோபாலன் மீது, பாடல்களே எழுதியுள்ளாரு.

எனக்கு ஒரு வரலாற்று சிறப்பு உண்டுங்க. சுதந்திரப் போராட்டத்திலே நான் பங்கேற்றதுக்காக, என்னை "தென்னாட்டு பர்தோலி" என அழைப்பார்கள்.

எனது பருமன் 11.55 சதுர மீட்டருங்க. இந்த பரப்பளவில் 190 தெருக்களில் வாழ்கிறேன். இப்ப 33 வார்டு இருக்குங்க. என்னுடைய சிறப்பான வடிவத்தைக் கண்டு, ஆங்கிலேயரான சர் பிரடெரிக் ஜெட்டினில், **"நம் மாநிலத்திலேயே மிகவும் அழகாக நிர்மானிக்கப்பட்ட நகரம்"** எனப் பாராட்டியிருக்காங்க. நூற்றாண்டுகளை கடந்தது என்ற பெருமை உடையதுங்க என் நகராட்சி.

ஒரு ஊரிலே வடக்கே ஆறு ஓடுவது விசேஷமுங்க. அப்படித்தான் வடக்கு பக்கம் பாமினி ஆறு எனக்கு மாலையாக இருந்து அணி செய்யுதுங்க. என்னூடே 64 குளங்கள் இருக்கு. என்ன ஆச்சரியப்படுகிறீர்கள்? இதில் பத்து புண்ணிய தீர்த்தமும் இருக்கு. ஹரித்திராநதி, துருவாச சமுத்திரம், திருப்பாற்கடல், கோபிகாதீர்த்தம், ருக்மணித் தீர்த்தம், சங்குத் தீர்த்தம். சக்ரதீர்த்தம். பாம்பணி ஆறு.

ஆங்கிலேயரால் கட்டப்பட்ட பின்லே மேல்நிலை பள்ளி பழமை வாய்ந்ததுங்க. இது நூற்றாண்டு கண்டதுங்க. இன்னும் இரண்டு மேல்நிலை பள்ளியிருக்குங்க. இங்கப் படிச்சவங்க எல்லாம் டெல்லி செங்கோட்டையிலிருந்து சென்னை ஜார்ஜ் கோட்டை வரை ஆட்சி செய்யுறாங்க.

குன்னியூர் பண்ணை, முதலியார் பண்ணை என்று பெரிய குடும்பங்கள் உள்ளன. முதலியார் ஆஸ்டலிலே இலவசமாக படிச்ச எவ்வளவோ பேரு உலகெங்கும் புகழுடன் இருக்கிறாங்க. என் பேரிலே ஒரு மந்திரியே இருந்தாங்க. அவரு காலத்திலே ஒரு அரசுக் கல்லூரியையும், ஒரு உரத் தொழிற்சாலையையும் கொண்டாந்தாருங்க.

என்னடா பெருமையைப் பத்தி அலட்டிக்கிறேன்னு நினைக்கிறீங்களா? குறையும் இருக்குங்க. பல தெருக்களிலே குண்டும், குழியுமாக நிப்பேன். இதெல்லாம் நாட்டிலே சகஜம்தானுங்க. ஆனாலொன்னு, என்னுட்டே இருந்து திருவாரூக்கும், நீடாமங்கலத்துக்கும் பஸ்லே போனீங்க. உடம்பு வலி வந்திரும். அவ்வளவு ஒடிச வளைசலான சாலையுங்க.

கோட்டூர் ரெங்கசாமி முதலியார் நூலகம்னு பெரிய தொன்மை வாய்ந்த நூலகம் இருக்கு. பழைய நூல்கள் எல்லாம் கிடைக்கும். எழுத்தாளர்களின் சொர்க்கம் பூமி இதுங்க.

பெரிய கோயிலு ஆறு சதுர ஏக்கரிலே இருக்குங்க. இதுலே 7 பிரகாரங்களும், 16 கோபுரங்களும், 7 மண்டபங்களும், 24 சந்நிதிகளும், 18 விமானங்களும் இருக்குது. 154 அடி உயரமுடைய கோபுரம், ராஜ கம்பீரத்துடன் நிக்குதுங்க. கோயிலுக்கு எதிரில் 54 அடி உயரமுள்ள ஒற்றைக்கல் கெருட ஸ்தம்பம் பாக்க கம்பீரமாக நிக்குது. பங்குனித் திருவிழா 18 நாளிலும், நான் களை கட்டி விடுவேன். திருப்பதி திருமலை மாதிரி அலங்காரத்தோடு இருப்பேன். இது என் வசந்த காலமாகும்.

என்னமோ என் சொந்தக்கதையை ஒரிஜினல் கதையை அப்படியேச் சொல்லிவிட்டேன். நான் வாழ்ந்த, வாழும் கதையைக் கேட்டீங்க. எனக்கு ஒரு பெரிய குறைங்க. பேரும், புகழும் பெற்ற என் உடம்பில் உள்ள குண்டு குழிகள், துர்நாற்ற சாக்கடைகளில், ராட்சஸ கொசுக்கள் கேட்பாரற்று வசிக்கும், அம்பாரமாய் போட்ட கப்பிக்கல், ஜல்லி, மணல்கள், செங்கல், கல்யாண மண்டப குப்பை மேடுகள். துர்கந்த கழிவுநீர். சமூக விரோதிகளுக்கு அடைக்கலம் தரும் பாழடைந்த கட்டிடங்களில் சாராய வியாபாரம்.

அடிக்கடி வெளிச்சத்தை மறந்து போகும் மின் கம்பங்கள். தெருதெருவாக மேயும் பன்றியின் உலாக்கள். நாய்கள், கோழிகள் தவிர பெயர்கள் தெரியாத ஜீவிகளின் ஆர்ப்பாட்டங்கள். சகட்டு மேனிக்கு திறந்திருக்கும் கசாப்பு கடைகள். வாழ்ந்து முடிச்சவங்களின் உடல்களை அடக்கம் செய்யும் சுடுகாடு பாதைகளைக் கூட ஆக்ரமிச்சுள்ள கொடுமை. இவற்றையெல்லாம் ஒழுங்கு படுத்தி அப்புறப்படுத்தி என்னை கொஞ்சம் ஆரோக்கியப்படுத்துனுங்க.

வரவர காற்று என்னைக் கஷ்டப்படுத்துகிறது? பிராண வாயுவைப் பிரித்தெடுக்க நாசிக்குச் சக்தியில்லை. பெட்ரோல் டீசல் கலந்த காற்று மூக்கை அடைக்கிறது. பல மரங்களை வெட்டிடறது தான் காரணம். இன்னும் கொஞ்சம் என் மேல் மரங்கள் நட்டா தேவலை. யாராவது இதைப் படிச்சவங்க, சம்பந்தப்பட்ட யார் கிட்டயாவது சொல்லி, சரி செய்யுவாங்கன்னு எனக்கு நம்பிக்கையுண்டுங்க.

நம்பிக்கை தானே வாழ்க்கை!
நம்பிக்கை தானே உலகம்!

# 5. "மூத்தப் பிள்ளை"

**தொ**லைபேசி மணி அடித்தது.

சரவணன் ரீசிவரை எடுத்தான்.

"ஹலோ வணக்கம்"

"நான் தாங்க பேசுறேன்" மனைவி ஊரில் இருந்து பேசினாள்.

"மகா மகம் தான் முடிந்து விட்டதே, எப்ப ஊருக்கு வருகிறாய்?"

"சீக்கிரம் வந்திடுறேங்க, ஒரு பிராப்ளம்"

"என்ன?"

"உங்க தங்கையைப் பார்த்தேன். முகம் எல்லாம் சோகை படிந்திருக்கு, வயிறு மிகவும் பெரிதாக இருக்கு. ஒரு வருடமா வயிறு வீங்கியிருக்காம். மாமியார் வீட்டில் கவனிக்கவில்லையாம். டாக்டரிடம் காண்பித்து விட்டு இரண்டு நாள் கழித்து வரட்டுமா?"

"கல்யாணம் பண்ணிக் கொடுத்து இருபது வருடமாகிறது. அவ புருஷன் பாத்துக்கிறார். இந்த வேலையெல்லாம் உனக்கு வேண்டியதில்லை, இங்கே நானும் குழந்தைகளும் நான்கு நாட்களாக ஓட்டலில் சாப்பிட்டு கஷ்டப்படுகிறோம்."

"இல்லங்க நம்ம வீட்டில பொறந்த பொண்ணு. நல்லா இருக்கணும்ங்க. அவங்க நல்லா இருந்தால் தான்

நாம் நல்லா இருப்போம். ஸ்கேன் எடுத்துப் பார்த்துட்டு வரேன்"

"சரி சரி டாக்டரிடம் காண்பித்து விட்டு சீக்கிரம் ஊருக்கு வர வழியைப் பாரு" வெறுப்புடன் போனை கீழே வைத்தான் சரவணன்.

இந்தச் சந்திராவுக்கு இதே வேலையாய் போச்சு. போனமா வந்தமா என்றில்லை. கட்டினப் புருஷன் கல்லு மாதிரி இருக்கிறான். கூடப்பிறந்த மூன்று தம்பிகளும் உள்ளூரிலேயே இருக்கிறார்கள். நாம் மட்டும் ஏன் சென்னையிலிருந்து போய் இவர்களை கவனிக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் அலுவலகம் புறப்பட்டான் சரவணன்.

மகாமகத்திற்கு வரும்படி குடந்தையிலிருந்து அம்மா கடிதம் எழுதியிருந்ததற்காக மனைவியை அனுப்பி வைத்தது தப்பு என நினைத்தான் சரவணன்.

இரண்டு தினங்கள் கழித்து மனைவியிடம் இருந்து மீண்டும் போன்.

"என்னங்க, ரொம்ப அவசரம்"

"என்னவாம்?"

"உங்க தங்கச்சிக்கு ஸ்கேன் எடுத்துப் பார்த்தோம். வயிற்றில் பெரிய கட்டி, அளவுக்கு மீறி இருக்கிறதாம். உடனடியாக ஆபரேஷன் செய்ய வேண்டும் என்கிறார் டாக்டர். உடனடியாக இருபத்து ஐந்தாயிரம் பணம் எடுத்துக்கிட்டு வாங்க."

"ஏன் அங்கே இருக்கிற தம்பிகள் எல்லாம் பார்த்துக்கிறாங்க, நீ ஏன் அலட்டிக்கிறே!"

"ஏங்க நான் சொல்றதைக் கேளுங்க"

"குடும்பத்தில் எனக்கு மட்டும்தான் பொறுப்பா? என்னைப் போலத்தான் தம்பிகளும் தந்தையின் கடமையைச் செய்யனுமிலே"

"இல்லேங்கே, நீங்கள் தான் வீட்டுக்கு மூத்தப்பிள்ளை, தந்தை இல்லாத நம் குடும்பத்துக்கு நம் கடமையைச் செய்யனுமில்லேங்கே"

"சரி பணத்துக்கு எங்கே போறது?"

"ஏதாவது நகையை அடகு வைச்சு பணத்தை எடுத்துகிட்டு உடனே வாங்க" என்று அழாத குறையாகச் சொன்னாள் மனைவி.

சொல்லவும் முடியலை, மெல்லவும் முடியலை, தட்டவும் முடியலை.

போனமாதம் தான் அக்கா மகளின் சடங்குக்கு இருபதினாயிரம் செலவு செய்தோம் என்ற விரக்தியுடன் சரவணன் உடனடியாக நடவடிக்கையில் இறங்கினான்.

இருபத்தைந்தாயிரம் பணத்தைப் புரட்டினான். கல்லூரி படிக்கும் மகளுக்கும், மகனுக்கும் துணைக்காக எதிர் வீட்டு மாமியை வைத்துவிட்டு சென்னையிலிருந்து கிளம்பினான்.

அண்ணன் எப்போது வருவான் என்று மூன்று தம்பிகளும், தங்கையும், அக்காவும், அம்மாவும் வழிமேல் விழிவைத்து காத்து இருந்தார்கள்.

சரவணன் வந்ததும் தங்கையைத் தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

மருத்துவமனையைச் சுற்றியிருந்த பூவரசு மரங்களின் மஞ்சள் பூக்கள் சிரித்துக் கொண்டிருந்தன. அரச மரத்தடி மேடையில் இருந்த பிள்ளையாரைக் கடக்கும் போது, கொண்டு போன பணத்தை மனைவியிடம் கொடுத்தான் சரவணன்.

மறுநாள் காலை ஆபரேஷன்.

ஆபரேஷனுக்கு மருத்துவமனையில் பணம் கட்ட வேண்டும்.சந்திராவே பணம் கட்டினாள்.

தன்னைப்போல் வேலையிலிருந்தும், தன்னைவிட வசதியாக இருந்தும், தம்பிகளும், தங்கையின் கணவரும், சும்மா நிற்பதைப் பார்த்து வருத்தமடைந்தான் சரவணன்.

தங்களுடைய மச்சினர்களுக்கும், மச்சினச்சி களுக்கும் போட்டிப் போட்டுக்கொண்டு உதவி செய்யும் தம்பிகளுக்கு, சொந்தத் தங்கைக்கு உதவ எண்ணம் வரவில்லையே என்று தனக்குள் புழுங்கிக் கொண்டான்.

மூத்த பிள்ளையாய் பிறந்ததற்கு இந்தத் தண்டனையா? நமக்கு இரண்டு குழந்தைகள் இருக்கே வளர்க்க, என்ற சிந்தனையில் இருந்தான்.

தங்கையை ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் சென்றார்கள்.

அப்பா இறந்த பிறகு, தம்பிகள் படித்துக் கொண்டிருந்த சூழ்நிலையில் வாங்கக்கூடாத இடத்தில் எல்லாம் அதிக வட்டிக்கு கடன் வாங்கி சீரும் சிறப்புமாகத் தங்கையைத் திருமணம் செய்துகொடுத்தான் சரவணன்.

தன் தங்கையின் நகைகளை விற்று மாப்பிள்ளையின் தங்கைக்குத் திருமணம் செய்து வைத்தனர் சம்மந்தி வீட்டில். கபடுசுவடு தெரியாத தங்கை ஒரு குழந்தையுடனும் தாலி கயிறுடனும் மூன்று வேளை சோற்றுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறாள்.

அந்தக் குடும்பத்தில் அவளுக்கு வேறு எந்த சுகமும் கிடையாது. நினைக்க நினைக்க சரவணன் கண்களில் நீர் வழிந்தது.

நாற்பது வயதாகியும் சூதுவாது தெரியாத கள்ளம் கபடமற்ற தங்கை, உடன் பிறந்தவர்களைப் பார்த்து கண் கலங்கியபடியே ஆபரேஷன் தியேட்டருக்குச் சென்றாள்.

அடுத்து மூன்று மணி நேரம் தியேட்டரில் பரபரப்பு.

தங்கையின் கணவரும், தங்கையின் மகளும் சம்மந்தம் இல்லாதவர்கள் போல் உட்கார்ந்திருந்தார்கள்.

நர்சுகள் மாறி மாறி வெளியே வந்து போனார்கள்.

திடீரென பெரிய டாக்டர் ஒருவருக்கு போன் செய்து வரவழைத்தார்கள். அவரும் ஓடோடி வந்தார். ஸ்பெஷல் டாக்டர் என ஒவ்வொருவராக வருவதும் போவதுமாக இருந்தனர்.

என் மனைவியின் பிரசவ நேரங்களில் கூட நான் அப்படி காத்திருந்து கலங்கியதில்லை.

ஒரு வழியாக ஆபரேஷன் நல்ல விதமாக முடிந்தது என்ற நல்ல செய்தி வந்தது.

சற்று நேரத்தில் பெரிய பேஷனில் அறுவை சிகிச்சை செய்து எடுத்த ஒரு நாலரை கிலோ கட்டியை

பெரிய பாத்திரத்தில் எடுத்து வந்து உறவினர்களுக்குக் காண்பித்தார் வார்டு பாய்.

ஆஸ்பத்திரியே வியந்து போனது. திகைப்பிலும் ஆச்சரியத்திலும் தன்னை மறந்து நின்றிருந்த சரவணனை டாக்டர் அழைத்தார்.

"மிஸ்டர் சரவணன், ஒரு வருடமாக நாலரை கிலோ கட்டி வயிற்றில் இருந்துள்ளது. இன்னும் சில தினங்களோ, மணிகளோ தாமதிருந்தாலும் வயிறு வெடித்து நோயாளி இறந்து போயிருப்பார். நல்ல நேரத்தில் சிகிச்சைக்கு அழைத்து வந்தீர்கள்" என்று பாராட்டினார் டாக்டர்.

பாராட்டுக்கு உரிமையுள்ள, அருகில் நின்றிருந்த தன் மனைவியை பார்த்து தனது நன்றியினைத் தெரிவித்தான் சரவணன்.

பெண்ணின் கஷ்டம் பெண்ணுக்குத்தானே தெரியும்?



# 6. வேப்ப மரம்

பிரம்ம முகூர்த்த நேரம் தெரியுமா?

அதாங்க அதிகாலை நாலிலிருந்து ஆறுமணி வரை.

அந்த நேரத்திலே திருப்பதியிலே பெருமாளை விசுவரூப தரிசனம் சேவிப்பது போல், வாசலின் வெளியிலிருந்து என் தந்தையின் விசுவரூபத்தைத் தினமும் தரிசிப்பேன்.

என்ன யோசிக்கிறீங்க? குளத்தங்கரை அரச மரத்துக் கதையைக் கேட்டிருங்கீங்க. இப்ப என் (வேப்ப மரத்து) கதையைக் கேளுங்க.

எனக்கு இப்ப வயது முப்பது. எங்கப்பாவுக்கு மூத்தது பொண்ணு. அடுத்தது பிள்ளை. மூன்றாவது நான். பெண்ணிற்கும் பையனுக்கும் திருமணம் செய்து வெளியூரிலேயே செட்டில் ஆயிட்டாங்க. இப்ப என் தந்தைக்கும், அம்மாவுக்கும் அவர் வீட்டுக்கும் நான்தான் காவலுங்க. நான் கடைசி பிள்ளை. செல்லப் பிள்ளைங்க.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் அப்பாவும் அவரது பையனும் இருபது நாள் குழந்தையாக நர்சரியில் இருந்தபோது என்னை பணம் கொடுத்து வாங்கியாந்தாங்க.

ஸ்கூட்டரை அப்பா ஓட்ட அண்ணன் என்னை தன் மடியில் வைத்திருக்கப் பயணித்தேன்.

என்னை மூன்றாவது பிள்ளையாகத் தத்தெடுத்த தந்தைக்கு என்னை வீட்டிற்குள்ளயே வளர்க்க ஆசைதான். இடமில்லை. வாசலின் பக்கத்தில் சாலையின் ஓரத்தில் வீட்டுக்குக் காவலாக இருக்கும்படி என்னை குடிவைத்தார்கள்.

குடி வைத்தவுடன் சிறிய வீடு ஒன்று கட்டியும் முடித்தார்கள்.

இடமும் சூழலும் புதிதாக இருந்ததால் பத்துநாட்கள் நான் யாருடனும் பேசவில்லை. வாடிப் போனேன். இலையெல்லாம் உதிர்ந்து போயின.

ஆனால் தன் பிள்ளைகளுக்கு உணவிடுவது போல் தினமும் நீருட்டி என்னைப் பாதுகாத்தார். ஆட்டு எரு, செம்மண், மக்கிய தழைகள் எல்லாம் போட்டு ஊட்டச்சத்து ஊட்டினார்.

நாள்தோறும் 'வாழ்க வளமுடன், வாழ்க வளமுடன்' என்று வாழ்த்துவார்.

பத்து நாட்களுக்குப் பிறகு தான் துளிர்விட்டு என் பாசத்தைக் காட்டினேன். இந்த பத்து நாட்களும் நான் உயிர்பெற வேண்டும் என்று அம்மாவும், அப்பாவும், அக்காளும், அண்ணனும் வேண்டாத தெய்வங்கள் இல்லை. வேகமாக வளர ஆரம்பித்தேன். அப்பா வெளியே போகும் முன்பும் வந்த பின்பும் என்னைப் பார்த்து பேசாமல் இருக்க மாட்டார்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தேன்.

தந்தையைப் பொறுத்தவரையில் நான் ஆறறிவுள்ள உயிர். வேப்பமரம் அல்ல. அவரது குழந்தை. அவரது ஸ்கூட்டர் சத்தம் கேட்டால் சில்லென்று சிரித்து சிநேகம் காட்டுவேன். அதிகாலையில் அவருக்கு இலைகளை அசைத்து வணக்கம் சொல்லுவேன். அவரது சோகங் களையும் இன்பங்களையும் என்னிடம் பகிர்ந்து கொள்வதில் அவருக்குத் தனி ஈடுபாடு.

எல்லோரும் இரவு வீட்டில் உறங்கியவுடன் நான் ஆக்சிஜனை இழுத்து கரியமில வாயுவை வெளியிட்டுக் கொண்டிருப்பேன். இரவு நேரங்களில் நான் படும் கஷ்டங்களை கடமைகளை கண்ட அவர் மறுநாள் என்னிடம் வந்து தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்துவார்.

தந்தை கூடத்தில் அமர்ந்திருந்தால் கரம் காட்டுவேன். மாடி ஜன்னல் வழியே முகம் காட்டுவேன். மொட்டை மாடியில் தலை காட்டுவேன். என்னை அவர் பார்க்காமல் இருக்கமாட்டார். அவரையும் நான் பார்க்காமல் இருக்கமுடியாது. உயிரோடு கலந்த உறவு.

நான் உயரமாக வளரவேண்டும் என்று அடிக்கடி எனக்கு கிராப் வெட்டி விடுவார். வீட்டில் எங்கிருந்தாலும் ஜன்னல் வழியாகப் தந்தையைப் பார்த்துக் கொண்டிருப்பேன். அவருடன் ஐக்கியமாகி விட்டேன்.

தன் வீட்டுக்கு வரும் விருந்தினர்களிடம் என்னை அறிமுகப்படுத்தி என்னை மகிழ்ச்சி அடையச் செய்வார்.

மாலையில் குழந்தைகளுடன் என் நிழலில் கீழே அமர்ந்திருப்பார். என்றாவது அலுவலக வேலையாக

வெளியூர் சென்றுவிட்டால் அவர் வரும் வரை ஏக்கத்துடன் இருந்ததுண்டு. சூரியனைக் கண்ட தாமரை போல் அவர் வந்ததும் எனக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படும். என்னைப் பார்த்தால் அவரது மனசெங்கும் பரவும் அந்த மகிழ்ச்சி.

தந்தை வீட்டிற்குக் காற்றினை வடிகட்டி அனுப்புவேன்.

ஆண்டுக்கு ஒருமுறை உடைமாற்றிக் கொள்ளுவேன். வீட்டுச் சுவரில் தூசு படியாமல் பார்த்துக் கொள்வேன்.

ஞாயிற்றுக் கிழமைகளில் என்னிடம் சில இலைகளை பறித்து தண்ணீரில் கொதிக்க வைத்து சிறிது மஞ்சள் பொடி சேர்த்து குழந்தைகளுக்கு கொடுத்து தானும் குடித்து மகிழ்வார். என்னால் அவர்களது உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க முடிந்தது.

வெயில் காலங்களில் கட்டி வந்தால், என் பட்டைகளை எடுத்து இழைத்து கட்டி மேல் தடவி குணப்படுத்துவார்.

ஒருநாள் அதிகாலை நேரம். ஒருவர் என் மேல் ஏறி நின்று என்னை வம்புக்கிழுத்தார். பல் துலக்க குச்சித்தானே ஒடிக்கிறான் என்று கருதவில்லை. ஓடிவந்து அவனிடம் சத்தம் போட்டார். "குழந்தையிடம் குறும்புசெய்யாதே. வளர்ந்து ஆளான பிறகு உனக்குத் தேவையானதை தரும்" என்று சத்தம் போட்டார். "பல்பொடி வேண்டுமா நான் வாங்கித்தருகிறேன்.

வெள்ளிக் கிழமையில் வீட்டு வாசலுக்கு நாலு கொத்து வேண்டுமா? நான் வாங்கித் தருகிறேன். தயவு செய்து அவனை வளரவிடுங்கள்" என்று சத்தம் போட்டார்.

தெருவில் கூட்டம் கூடியது. பலர் புரிந்து கொண்டனர். சுயநலவாதிகள் என்னைக் கெட்ட எண்ணத்துடன் பார்த்தனர்.

மற்றொரு சமயம், குழந்தையாக இருந்த போது சாலையில் சென்ற சிலர் என்னை ஒடித்தும், சீண்டியும் துன்பம் கொடுத்தார்கள். உடனே முள் சட்டை ஒன்று தைத்து என்மீது போட்டார். அப்புறம் என்னை யாரும் தொந்தரவு செய்யவில்லை.

பௌர்ணமியன்று ஒரு நாள் மொட்டை மாடியில் அமர்ந்து கொண்டு என் அழகை இரசித்தார்.

"டேய்! நீ என்னைவிட உயரமாய் வளர்ந்து விட்டாய். சிறிது கோணலாக வளர்ந்திருந்தாலும் அதுவும் ஒரு அழகுதான்" என்றார்.

"என்ன! நீங்க வேப்ப மரம் பைத்தியமாகி விட்டீர்கள்" என்று அம்மா அப்பாவை கிண்டல் செய்தார்கள்.

எல்லாவற்றையும் நான் இரசித்துக் கொண்டிருந்தேன்.

அப்பா ஓய்வு நேரங்களில் கதை எழுதுவார். ஒருமுறை என்னைப் பற்றி அவர் கதையில் எழுதினார்.

காலையில் கண் விழித்ததும் என் வேப்பமரத்தைக் கட்டாயம் பார்க்க வேண்டும் என்ற வழக்கம் பழக்கமாகி

விட்டது. இனம் புரியாமல் எனக்கும் அதன் மீது ஒரு ஒட்டுதல். என் பிள்ளைகளில் ஒன்றாகப் பாவித்து வளர்க்கிறேன். என் உறவினர்கள், நண்பர்கள் என்னைப் பார்க்க வரும்போது வேப்ப மரத்தைக் காட்டி ஏதாவது சொல்வேன். இது எனக்கு இயற்கை தந்த சீதனம். மரம் இல்லையேல் மனிதன் இல்லை. என் ஆயுளைவிட இவன் ஆயுள் அதிகம்.

என் அறையிலிருந்து பார்க்க என் கண்களின் லென்ஸ் வழியாக மனமெங்கும் வியாபித்திருப்பது அந்த வேப்ப மரம்.

எங்கிருந்து பார்த்தாலும் என் கண்களுக்கு அவன் தெரிவான்.

ஏராளமான கிளைகள். கம்பீரமான மரம். வேப்பமரத்தைப் பார்க்கும்போது எனக்கு ஒரு தன்னம்பிக்கை. அதன் தென்றலில் உறங்கியதுண்டு. மருத்துவக் குணத்தில் சிகிச்சை பெற்றதுண்டு.

நாள்தோறும் உற்சாகத்துடன் என் வேப்ப மரத்தைப் பார்க்கிறேன். அதன் இலைகள் படபடக்கின்றன. என்னைப் பார்த்து அது சலசலக்கின்றன.

வெளியே செல்லும் போது அவன் "டாட்டா" சொல்லி வழி அனுப்புவான். உள்ளேவரும் போது தலையாட்டி அன்பொழுக வரவேற்பான்.

துன்பங்களை இவனிடம் சொல்லி வைத்துள்ளேன். கேலி செய்ய மாட்டான். இன்பங்களை இவனோடு பகிர்ந்துள்ளேன். பொறாமைப்பட மாட்டான்.

மரங்களை நேசிக்காத வாழ்க்கை என்ன வாழ்க்கை?

மரம் ஒரு தெய்வம். மரம் ஒரு ஆலயம்.

மரங்கள் இந்த உலகைச் செழுமையாகவும் பசுமையாகவும் வைத்திருக்கும் சக்தி.

மரமே சக்தியின் அடையாளம். தன்னலம் கருதாதவை மரங்கள். கொடுக்கும் நிழல்கள் தூய்மை உள்ளம் கொண்டவை. நிழலின் அடைக்கலத்தில் எத்தனை கோடி உயிர்கள் இளைப்பாறுகின்றன.

மரங்களை மனிதன் நேசிக்க வேண்டியது அழகுக்காக மட்டுமல்ல. ஆக்ஸிசனுக்காகவும் தான்.

அந்தக் கதையில் என்னைப் பற்றி புகழ்ந்து தள்ளிவிட்டார்.

ஒரு கவிதையில் என் நளினத்தைச் சித்தரித்திருக்கிறார்.

வேப்ப மரத்தை எல்லாக் காலங்களிலும் பார்க்கிறேன். எல்லா நேரங்களிலும் உறவாடுகிறேன். காற்றடிக்கும்போது அதன் இலைகள் சிணுங்குவதில் ஒரு நளினம் இருக்கும். காற்றடித்து முடிந்தபிறகும் ஏதாவது ஒரு முனையில் ஒரு இலை மட்டும் ஊஞ்சலாடுவது போல் தலையாட்டிக் கொண்டிருக்கும்.

எங்களுக்கு பின்னாலும் என் வம்சத்திற்கு வழிகாட்டியாய் இருக்கப் போகிறவன் இவன்தான்.

நான் உதிர்க்கும் சில பழங்களை எடுத்து முளைக்க விட்டு என் வம்சத்தை ஊரெங்கும் இன்றும் விருத்தி செய்கிறார். என்னால் இவ்வளவு நன்மைகளைச்

சமுதாயத்திற்கு தர முடிகிறது. அவர் சொல்லித்தான் தெரிந்து கொண்டேன்.

என்னைப்பற்றி "வேம்பு இந்தியாவின் பொக்கிஷம்" என்ற தலைப்பில் ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதினார்.

மரங்களிலெல்லாம் மருத்துவ குணம் என்னிடம் தான் அதிகமுள்ளது. நான் இயல்பாக கொட்டும் பழங்கள் மூலம் ஏழைகளின் வயிற்றில் பால் வார்க்கிறேன்.

என் இலைகளை ஆடுகளும் மாடுகளும் விரும்பிச் சாப்பிடுகின்றன.

வறண்டுபோன காட்டைக் கூட புணர்வாழ்வு தர என்னால்தான் முடியும்.

இருக்கின்ற மரத்திலே குளிர்ச்சியானது நான் தாங்க. மழையை கொணர்ந்து தருவேன். பொறுப்பற்றவர்கள் பொறுப்பில்லாமல் என்னை நாசக்காடு பண்ணக்கூடாதென "மாரியாத்தா மரம்"னு சொல்லி வைச்சாங்க.

என்னைப் புதிதாக நட்டு பலன் பெறுவதில் எனக்குத்தான் முதலிடம்.

மழை ஒழிந்த வனப் பகுதிகளில் வன வள மீட்புக்கும் நான் பெரும் பங்கு வகித்து வருகிறேன்.

என்னிடம் இயல்பாக நான்கு விதமான சிறப்பு மருந்துகள் கலந்துள்ளன.

1) ஆசாதிரக்டின். 2 முதல் 4 சதம், 2) நிம்பிடின் 2 சதம், 3) சலானின் 1 சதம், 4) மேலியன்ட்ரையேல் 1 சதம்

இன்று தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்றாலும் சரி, நீர் வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்றாலும் சரி. என்னை அதிக அளவில் நட்டு இழந்த வனப்பகுதியை மீட்பதுடன் பல்லுயிர் பெருக்கத்திற்கும் உயிருட்டுகிறார்கள்.

என்னிடம் மொத்தம் நாற்பது வகையான மருந்துப் பொருள்கள் உள்ளன. இவற்றில் நிம்பிடின் மட்டுமே கசப்பு. இதை தனியே எடுத்துப் பிரித்து பூச்சி மருந்தாக மாறி பலன் தந்து கொண்டிருக்கிறேன்.

நான் அலோபதி வைத்தியத்துக்கும் பயன்படுகிறேன். பாக்டீரியா, எதிரி, பூசனத் தடுப்பு, மனிதனுக்கு மருந்து, கால் நடைகளுக்கும் மருந்து - தாவரங்களுக்கும் மருந்து. எதுவும் பின் விளைவுகள் இல்லாமல் குணப்படுத்துகிறேன்.

தேக்கை விட என்னைப் பயிர் செய்தால் பணப் பயிராகவும் பயன் தந்து கொண்டிருக்கிறேன்.

அந்தக் காலத்தில் என் எண்ணையை கருத்தடைக்குப் பயன்படுத்தினார்கள்.

நிம்மிடின் ஆண் விந்துவை நசித்து விடுவதாகத் தற்போது கண்டுபிடித்துள்ளனராம். இதனால் தான் மகிஷாசுரமர்த்தினி அவதாரமெடுத்து ஆண் அசுரனை கொல்ல துர்க்கை அவதாரமெடுத்தாள் என்று பேசுகின்றனர். நிம்மிடின் நீக்கப்பட்ட என் சாரம் பெண் மலடை நீக்கியிருக்கலாம்.

அரசு ஆண் மலடை நீக்கும் என்றும் நான் (வேம்பு) பெண் மலடை நீக்குகிறேன் என்றும் சித்தாந்த அடிப்படையில் எனக்கும் அரச மரத்துக்கும் உழவர்கள்

திருமணம் செய்து இன்றும் சில கிராமங்களில் விழா எடுக்கின்றனர். இது போன்ற விழாக்கள் வளமைப் பெருக்கம் என்றும் கர்ப்பதான சடங்கு என்றும் கோசம்பி என்னும் எழுத்தாளர் எழுதியுள்ளார் என்று தந்தை குறிப்பிட்டுள்ளார்.

பணம் காய்க்கும் மரம் என்று கூட என்னை சொல்கிறார்கள். என் முத்து, என் எண்ணெய் நல்ல வணிகப் பொருள்களாகும். என் எண்ணெய் பெரும்பாலும நீம், மார்க்கோ சோப்புக்கு பயனாகிறது.

நான் இந்திய பராம்பரியச் சொத்து என்று உலக நீதிமன்றத்தில் வாதாடி என் காப்புரிமைமை, இயற்கை ஞானி நம்மாழ்வார் மீட்டுத் தந்துள்ளார் என்று தந்தை ஆராய்ச்சி கட்டுரையில் எழுதியுள்ளார்.

தன் நண்பர் ஒருவரிடமும் அப்பா ஒரு நாள் கூறியதைக் கேட்டு ஆச்சரியமடைந்தேன்.

"நூறு வருட வேப்பமரத்தைத் தேடிப்பிடித்து அதன் பட்டையைக் கொண்டு ஒரு மண்டலம் வேப்பம் பட்டைக் கஷாயம் சாப்பிடுங்கள். உங்கள் ஆயுள் நூறு ஆண்டு உயரும். இது நான் சொல்லலை. சித்தர் பாடலில் உள்ளது" என்றார்.

நண்பர் அசந்து போய்விட்டார்.

மனிதர்கள் என்னிடம் காட்டும் அன்பை விட நான் காட்டும் அன்பு அதிகம்.

நண்பர்கள், விருந்தினர்கள், உறவினர்கள், எல்லோரிடமும் என் மகிமைகளை, பெருமைகளைக் கூறி, எப்படியாவது வீட்டிலோ தெருவிலோ வாசலிலோ அவசியம் ஒரு வேப்பமரம் நடுங்கள் என்று நாள்தோறும் சொல்லி வருகிறார். என் கன்றுகளையும் இலவசமாக வழங்கி வருகிறார். மரம் நடுவது புண்ணியம் என்று எல்லோரையும் ஊக்குவிப்பார். உபநிடத்து பாடலை பாடிக் காண்பிப்பார்.

"பத்து கிணறுகள் ஒரு குளத்திற்கு சமம்
பத்து குளங்கள் ஒரு ஏரிக்குச் சமம்
பத்து ஏரிகள் ஒரு புத்திரனுக்குச் சமம்
பத்து புத்திரர்கள் ஒரு மரத்திற்குச் சமம்"

மரம் வளர்ப்பது பெரிய கலை. மரத்தின் மையத்தில் இருக்கும் சக்தி அற்புதமானவை. ஞானக் கண்கள் கொண்டு பார்த்தால் என் ஆற்றல் புரியும்.

என்னை நடுபவர்கள் தருமத்தின் வடிவமாகி, விண்ணுலகில் சூரியனுடைய இல்லம் செல்வது உண்மையென்றும் அங்கு அவன் நீடுழி வாழ்வான் என்றும் ஆயுர்வேதம் கூறுகிறதாம்.

ஆனால் மண்ணுலகத்திலே என்னை வளர்த்து என் புகழைப் பரப்பி, என் சேவையை தன் சேவையாகச் செய்து வரும் என் தந்தை நீடுழி வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்.

ஒரு நாள் அந்தி மாலைப் பொழுது.

அப்பா தன் பேரப்பிள்ளையிடம் என்னைப் பற்றிய கதையைச் சொன்னார்.

"தாத்தா நானும் ஒரு பாட்டுப் படிக்கவா?"
"பாடு"

**"வீட்டுக்கு முன்னே வேப்பமரம் - கோடை**
**வெப்பக் கொடுமையைப் போக்கும் மரம்**
**வெள்ளி நிறத்திலே பூப்பூக்கும் - மணம்**
**வீதி முழுவதும் கமகமக்கும்.**
**பச்சை நிறத்திலே காய்காய்க்கும் - அதில்**
பாலோடு முத்து பளபளக்கும்
தங்க நிறத்திலே பழம் பழுத்து - அது
தளதளவென்று மின்னி நிற்கும்"
ஆகா! அருமையான பாட்டு! எங்குப் படித்தாய்?
"பாட புத்தகத்தில் இருக்கு தாத்தா"

தாத்தாவின் கண்களில் வழிந்த நீரைப் பேரன் துடைத்துவிட்டான்.

இந்த வயதிலும் என்னோடு சில நிமிடங்களைச் செலவழிப்பது அவரின் அன்றாட நிகழ்ச்சியில் உண்டு.

**"எங்கிருந்தோ வந்தான்**
**மரச்சாதி நானென்றான்**
**இங்கிவனை யான்பெறவே**
**என்ன தவம் செய்திட்டேன்"**

என்ற பாடலை தினமும் என்னிடம் வந்து பாடி என்னை இருகைகளாலும் கட்டித் தழுவுகிறார். நான் செய்த தவம் தான் அவருக்கு பிள்ளையாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.



# 7. செயலே விளைவு

"கௌசல்யா சுப்ரஜா ராம
பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே!
உத்திஸ்ட நரசார் தூல
கர்த்தவ்யம் தைவ மாஹ்நிகம்!"

சுப்ரபாரதம் வீடெங்கும் நிறைந்திருந்தது. எம்.எஸ்.ஸின் தேமதுரத் தேனிசை இன்ப ஊற்றாய் செவிகளில் ஒலிக்க புரண்டு புரண்டு தலையணையை அனைத்துக் கொண்டிருந்தான் அருண்.

பாத்ரூமில் தண்ணீர் சத்தம் வந்தால் அதிகாலை ஐந்து மணி. சுப்ரபாதம் இசைத்தால் ஐந்து முப்பது. காபி வாசனை நுகர்ந்தால் ஆறு மணி. சாருமதியின் அதிகாலை நடவடிக்கைகள் அருணுக்கு அலாரம் இல்லாத கடிகாரம்.

உற்சாகத்தின் ஊற்றாக விளங்கும் மனைவி சாருமதியைக் கைப்பிடித்ததிலிருந்து, தனக்கு வந்த பெருமை அவனைப் பூரிக்கச் செய்திருந்தது. காலை ஏழு மணிக்கு அம்மா எழுப்பியும், எழுந்திராத அருண். எட்டு மணி வரை தூங்கும் தம்பி முத்து. ஆமைபோல் நகர்ந்து வேலை செய்து கொண்டிருந்த அம்மா. எல்லா சோம்பேறித்தனமும் சாருமதி புகுந்தபின் ஓடி மறைந்தன.

சாருமதி வந்து நின்றால் மாலை வேளையில் பத்தாயிரம் வால்ட் பல்பு ஒளிவிடுவது போன்று, அந்த இடமே பளிச்சென்று ஆகிவிடும். படிப்பு, அழகு, அறிவு இவற்றுடன் அவளுடைய சுறுசுறுப்பும் சேர்ந்து, வீடே மங்களகரமாக மாறியது குறித்த சந்தோஷக் கனவுகள்,

அதிகாலை உறக்கத்தில் அருண் மனதில் பொங்கிக் கொண்டிருந்தன. அம்மா மட்டும் சாருவை எரிந்து விழுவதையும், அசைப்போட்டுக் கொண்டிருந்தான்.

"அருண் எழுந்துருங்க, காபி ரெடி"

"இன்னும் பத்து நிமிஷம் பொறேன்"

"இப்பவே ஆறு பத்து ஆயிட்டு, எழுந்திரிங்க"

"அசதியா இருக்கு"

"ஆமா! லேட்டா எழுந்திரிச்சி, காபி, பாத்ரூம், பேப்பர் இதுக்கே நேரத்தைத் தொலைச்சி, எக்ஸர்சைசுக்கும், தியானத்திற்கும் தினமும் டாட்டா கொடுத்துக்கிட்டே இருங்க."

முனகிக் கொண்டே எழுந்தான் அருண்.

"அத்தை இந்தாங்க காபி"

"உம் உம்" அதிகாரத் தோரணையில் பேப்பரைப் படித்துக்கொண்டிருந்த யசோதா அம்மாள் அலட்சியமாகக் காபியைக் கையிலெடுத்தாள்.

முத்துவையும் எழுப்பிவிட்டு, தன் வேலைகளில் மூழ்கினாள் சாருமதி. காலை நேரங்களில் இந்த இல்லத் தலைவிகள் ஜெட் வேகத்தில் பறக்கும் காலமிது. கணவன், குழந்தைகளை ஆபிசுக்கும், ஸ்கூலுக்கும் அனுப்பிவிட்டு அப்பாடா என்று பத்து மணிக்குத்தான் ஜெட் வேகம் குறைந்து, ரயில் வேகத்துக்கு வரமுடியும். பரபரப்பான இன்றைய காலகட்டத்தில் இதுதான் யதார்த்தம்.

மருமகள் என்றால் இன்னொரு வீட்டில் பிறந்து நம் குடும்பத்துக்கு தியாகம் செய்ய, மருவி வந்தவள்தான் மருமகள். மகள் நம் வீட்டிலே பிறந்து இன்னொரு வீட்டிற்கு மருவி மரு... மகளாகப் போகிறவள். இந்த உண்மை நம் நாட்டில் எத்தனை மாமியார்களுக்குப் புரிகிறது.

மகள் வேறு மருமகள் வேறு... மகள் என்றால் பாசம்... மருமகள் என்றால் ஏதோ நம் வீட்டிற்கு வந்த வேலையாள்... என்று கருதும் மாமியார்கள் நிறைந்த உலகம். இந்த மாமியார் உலகத்தில் யசோதா அம்மாளும் விலக்கல்ல.

"பங்கஜம் இந்த அக்கிரமத்தைப் பார்த்தாயா?"

"என்ன யசோதாக்கா என்ன சொல்ல வர்றே?"

"எங்க வீட்டுக்கு வந்தப் பிசாசு (மருமகளின் செல்லப்பெயர்) காலையிலேயே எந்திரிச்சோன்னே பாத்ரூமிலே போய் முதலில் அடைச்சுக்குது. வரவர இந்த வீட்டிலே எல்லாம் அவ வைச்சதுதான் சட்டமாயிருக்கு."

"ஏன் இப்படி நினைக்கிறே! உன் மருமகள் வந்தபின்புதான் நீ உட்கார்ந்து ரெஸ்ட் எடுத்துக்கிறே. மருமகள் வருவதற்கு முன் நீ லோ லோன்னு எவ்வளவு வேலை செய்தாய்? பாவம். நல்ல பொண்ணு. காலேஜ் படிச்சிருந்தும் உனக்கு துணி துவைச்சுப் போடுறதிலேயிருந்து உன் குடும்பத்துக்கு மாடாய் உழைக்குது. அவளை உன் மகளாய் நினைச்சிட்டுப் போயேன்" என்றாள் பங்கஜம்.

"வேலம்மா, என் மருமகள் சாருமதி இருக்காளே. அவ பண்ற அட்டகாசம் தெரியுமா உனக்கு."

"சொல்லு அக்கா! அதுக்குத்தானே நானிருக்கிறேன்."

"மகன் சம்பளத்தை இவ சாப்பிட்டே தீர்த்து விடுவாள் போலிருக்கிறது. தட்டு தட்டா சாப்பிடுறா. அவ வீட்டு விருந்தாளி வந்தாச்சுன்னா போதும் ஒரேயடியா உபசரிக்கிறாள். அப்படி என்னதான் தலையணை மந்திரம் போடுகிறாளோ மாயக்காரி. பெண்ணை வளர்க்கத் தெரியாம வளர்த்திருக்கா அம்மாக்காரி.

சூரியன் உதித்தால் போதும். தனது வக்கிர எண்ணங்களும் யசோதாம்மாவுக்கு உதித்து, மருமகளிடமும் பாயும். தன் மருமகளைப் பற்றி எவரிடமாவது குறை சொல்லவில்லை என்றால், அந்த நாள் அவளுக்கு வீணாண நாளாகும்.

கல்யாணமாகி பத்து நாள் தான் மருமகளிடம் சந்தோஷமாக இருந்தாள். ஒரு கொடியில் இரண்டு புடவையைக் காயப்போட்டால், ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொள்ளுமாம். அந்த வழக்கப்படி மாமியார் புடவை, மருமகள் புடவையை பத்தாவது நாளிலிருந்து காயவிடவில்லை.

ஒருநாள் மருமகள் வாந்தியெடுப்பதைப் பார்த்த யசோதா அம்மா, வழக்கம் போல் எதிர்வீட்டு வேலம்மாளிடம் சென்றாள். "பார்த்தியா இந்த அக்கிரமத்தை! நாமெல்லாம் புள்ளை பெக்கலை. கல்யாணமாகி மூணாவது மாசத்திலியே வாந்தி எடுக்கிறா? சரி எடுக்கட்டும்னா போவுது. அவபண்ற

அட்டகாசத்தைப் பார்த்தா எனக்குச் சகிக்கலை. மயக்கம் வருதாம். வாந்தி வருதாம். குடலைப் புரட்டுதாம். இன்னும் என்ன- வெல்லாமோ சொல்றா? நமக்கு இதெல்லாம் புதுசா?

இந்த அருண் பய வேறே ஓடி ஓடிப் போய் அவளைத் தாங்குகிறான். வேலையெல்லாம் செய்யக் கூடாது என்று சொல்கிறான். நான் என்ன இளிச்சவாயா? முழுகாம இருந்தாலும் அவதான் வீட்டு வேலைகளைச் செய்யணும். அந்தக் காலத்துலே நாம செய்யலை. இரண்டாவது பய முத்துவும் அண்ணி, அண்ணி என்று குழைகிறான்."

"புருஷனுக்கு எடுத்து வைத்தது போக, மீதியைச் சாப்பிடும் இந்தப் பயல் வேறே அண்ணியிடம் பாசமழைக் கொட்டுகிறான். அருண் வேலை முடிச்சு, இராத்திரி வரட்டும். ஒரு கை பாத்துக்கிறேன்" என்று தனது ஆதங்கத்தை சொல்லி, அன்றைய ஆத்திரத்தைக் கொட்டி வைத்தாள்.

அன்று இரவு மாமியாருக்கும், கொழுந்தனுக்கும் சாப்பாடு பரிமாறிக் கொண்டிருந்தாள் சாருமதி.

"அண்ணி இன்னும் கொஞ்சம் சாம்பார் போடுங்களேன்."

"சாம்பார் கொஞ்சம்தான் இருக்கு தம்பி! ரசம் போட்டுக்குங்க. அண்ணனுக்கு மட்டும் தான் இருக்கிறது".

இந்த அருமையான சந்தர்ப்பத்தை, வக்ரபுத்தியுடைய யசோதா அம்மாள் நழுவவிடுவாளா?

"ஏண்டி! உங்கள் அப்பன் வீட்டுச் சொத்து என்னடி குறைஞ்சுப் போச்சு. முத்துக்கு அந்த சாம்பாரை ஊற்று" என்று சொல்லிக்கொண்டே சட்டியில் இருந்த ஒரு கரண்டி சாம்பாரையும் சிறிய மகனின் தட்டில் கொட்டி விட்டு, அந்த சட்டியால் முதுகில் ஒரு இடி இடித்தாள். அந்த இடியில் சாருமதி கீழே சாய்ந்துவிட்டாள்.

அந்த நேரத்தில் அங்கு வந்தான் மூத்த மகன் அருண்.

"சாருமதிக்கு என்ன? ஏன் அப்படி படுத்துக் கிடக்கு" என்று அம்மாவை விசாரித்தான்.

"அது என்னத்துக்கோ?" என்று அலட்சியமாய் சொல்லி விட்டுச் சென்றாள்.

"என்னாச்சு சாருமதி" என்று மனைவியை விசாரித்தான் அருண்.

"ஒன்றுமில்லை. தம்பிக்குச் சாப்பாடு போட்டுக்கிட்டே இருந்தேன். தலை சுற்றியது. கொஞ்சம் படுத்துக்கிட்டேன்."

எப்பொழுதும் இப்படித்தான். தன்மீது மோதும் மாமியார் ஏவுகணைகளை தன் கணவனிடம் ஒன்றுமே சொல்லமாட்டாள்.

"அம்மா! நீதான் தம்பிக்குச் சாப்பாடு போடக்கூடாதா?"

"போடுவேண்டா! போடுவேன், ஏன் உன் பொண்டாட்டி ஒய்யாரமா புத்தகம் படிச்சுகிட்டு,

சோபாவில் உட்கார வைச்சிட்டு, நான் வேலை செய்யறேன்."

அருண் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான். அவனை அச்சூழலிலிருந்து மாற்ற, "சாப்பிட வாருங்கள்" என்றழைத்தாள் சாருமதி. சாப்பிட அமர்ந்தான் அருண்.

"என்ன சாம்பாரும் இல்லை, ரசத்துக்கு தொட்டுக்க ஏதாவது வை"

உள்ளே போய் பார்த்தாள். ஒன்றும் இல்லை. மாமியார் கபளீகரம் செய்திருந்தாள். கேட்டால், மருமகள் மீதே பழியைப் போடுவார்கள். கேட்காமல் இருப்பதே நல்லது என்று முடிவு செய்து, ஊறுகாயை மட்டும் எடுத்து வந்தாள் சாருமதி.

"என்ன சாரு, கறி கூட்டு இல்லையா?"

"இருந்தது, சாயந்திரம் பசிச்சது, நான் சாப்பிட்டு விட்டேன்" என்று மாமியாரைப் பார்த்தாள்.

மருமகளின் கண்களின் தீட்சண்யத்தைக் காண, யசோதா அம்மாள் கண்கள் கூசின.

"இல்லை அண்ணா" உனக்கு வச்சிருந்ததை எல்லாம் நானும், அம்மாவும் காலி பண்ணிட்டோம்" என்று தமாசாகச் சொன்னான் தம்பி முத்து.

"பரவாயில்லை, யாராவது சாப்பிட்டால் சரிதான்" என்று பெருந்தன்மையுடன் சொன்னான் அருண்.

முத்துக்குப் பெண் பார்க்க வரச் சொல்லி, பெண் வீட்டிலிருந்து வந்த கடிதத்தை அருணிடம் கொடுத்தாள் அம்மா. கடிதத்தைப் படித்துப் பார்த்து வீட்டு, அம்மாவை நிமிர்ந்துப் பார்த்தான் அருண்.

"ஞாயிற்றுக்கிழமை பெண் பார்க்கப் போவோம். வேண்டிய ஏற்பாடுகளைச் செய்" என்று கட்டளையிட்டாள் அம்மா.

"அம்மா, இந்த ஞாயிற்றுக்கிழமை ஆடிட் விஷயமா வெளியூர் செல்லனும். அடுத்த ஞாயிற்றுக்கிழமை போகலாம்."

"அப்படியா? உன் கொழுந்தியாளுக்கு மாப்பிள்ளை பார்க்க வராங்க என்று மாமியார் சொன்னதும் விழுந்தடிச்சி ஓடினியே. அந்தப் பாசம் இங்கே எப்படி வரும்? எல்லாம் அவள் வேலை" என்று மருமகளைக் கரித்துக் கொட்டினாள்.

அம்மாவின் குற்றச்சாட்டுகளில், வெட்கிப் போனான் அருண்.

"சரி, ஆடிட்டுக்கு வேற யாரையாவது போகச் சொல்லிவிட்டு நான் வரேம்மா"

"எல்லாத்தையும் என் தலையிலே கட்டிட்டு அந்த மனுஷன் நிம்மதியாய் போயிட்டாரு. அவர் இருந்தால் உன்னை ஏன் எதிர்பார்க்கிறேன்" என்று தன் இறந்து போன கணவரையும், யசோதா அம்மாள் விட்டு வைக்கவில்லை.

அன்று ஞாயிற்றுக்கிழமை. இதுவரை கல்யாணச் சந்தையில் எட்டு பெண் பார்த்த யசோதா அம்மாள், ஒன்பதாவது பெண்ணைப் பார்க்கக் குடும்பத்துடன் பயணித்துக் கொண்டிருந்தார்.

இந்தப் பெண்ணையாவது அம்மா ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று, வழியில் வரும் கோயில் சாமிகளை யெல்லாம் வேண்டிக் கொண்டே வந்தான் முத்து. இந்தப் பெண்ணை அம்மா ஏற்றுக் கொண்டால், பிள்ளையார், முருகன், மாரியம்மா எல்லோருக்கும் ரெட்டைத் தேங்காய் உடைப்பேன் என்று மனதில் வேண்டி வந்தான்.

"அம்மா, வழக்கம்போல் பெண்ணைப் பார்த்து, பேசி, டிபன் சாப்பிட்டுவிட்டு, பிறகு வேண்டாம் என்று சொல்லி வருவதெல்லாம் நல்லதல்ல"

"பெண்ணை மாட்டுச்சந்தையில் விலை பேசுகிறது போல பேசாதே" என்றான் கண்டிப்புடன் அருண்.

"உங்களுக்கெல்லாம் ஒன்றும் தெரியாது நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள் யசோதா அம்மாள்.

ஆனால் ஆச்சரியம்! பெண் தங்கக் கிளி போல அழகாக இருந்ததுடன் சிவப்பாகவும் இருந்தாள். போதாக்குறைக்கு மூத்த மருமகளுக்குப் பெற்ற வரதட்சணையை விட, அதிகமாகச் செய்வதாக பெண்ணின் தந்தை ஒப்புக் கொண்டார்.

தன் மூத்த மருமகளை விட அழகாகவும், வசதியாகவும் பார்த்துச் சின்னவனுக்கு மணம் முடிக்க வேண்டும் என்ற தனது எண்ணத்தில், யசோதா அம்மாள்

வெற்றி பெற்றாள். ஆனால் கணக்குத்தான் தப்பாகிப் போவதை அவள் விதி மட்டும் அறிந்திருந்தது. அவள் அறியவில்லை.

திருமண அழைப்பிதழ் எல்லாம் அச்சடிக்கப்பட்டு, திருமண ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. எதிர்வீட்டு வேலம்மாள், பக்கத்து வீட்டு பங்கஜம் ஆகியோரிடம் தன் புது மருமகளின் அழகையும், அந்தஸ்தையும் அளவுக்கு மீறி புகழ்ந்து தள்ளிக் கொண்டிருந்தாள், யசோதம்மாள்.

"அம்மா எனக்கு சென்னைக்கு மாற்றியுள்ளார்கள்" என்று கூறிக் கொண்டே வந்தான் அருண்.

"என்னடா! கல்யாணத்துக்கு ஒரு வாரம் இருக்குது. கல்யாணமானதும் பொண்ணு மாப்பிள்ளையைச் சீராட்ட வேண்டும். நீ பாட்டுக்கு மாற்றி விட்டார்கள் என்கிறாயே? எல்லாம் அந்த மாயக்காரியின் வேலையா?"

"அம்மா எனக்கு பதவி உயர்வு கொடுத்து மாற்றி உள்ளார்கள். வழக்கமான நடைமுறைதான். போய்த்தான் ஆகணும். தம்பியின் திருமணத்தை முடித்துவிட்டுத் தான் சென்னை போகிறேன்" என்று அருண் கூறியதும் ஓரளவு திருப்தியானாள் யசோதா அம்மாள்.

முத்துவின் திருமணம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. சாருமதியைவிட வரதட்சணை, சீர்கள் எல்லாம் இரண்டு மடங்காக வந்தது குறித்து சந்தோஷக் கடலில் மூழ்கித்தான் போனார் மாமியார்.

திருமணம் முடிந்ததும், மூட்டை முடிச்சுகளோட சென்னை செல்லத் தயாரானாரர்கள் அருணும் சாருமதியும்.

"அம்மா நீயும் வாயேன் சென்னைக்கு" அழைத்தான் அருண்.

"எப்படியப்பா வர்றது, சின்ன சிறுசுங்களை விட்டு விட்டு"

"அத்தை உடம்பைப் பார்த்துக்குங்க" என்றாள் சாருமதி.

"எனக்கென்ன, இனி புது மருமகள் லதா பார்த்துக்கொள்வாள்"

"அத்தையை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்" என்று முத்துவிற்கும், லதாவுக்கும் அறிவுரை கூறி, சென்னை சென்றார்கள்.

புது மருமகள் லதா கொண்டு வந்த சீர்களில் மயங்கிப் போன யசோதா அம்மாள் தன் மூத்த மருமகளைக் கரிச்சுக்கொட்டியும், இளைய மருமகளைப் புகழ்ந்தும் அவ்வப்போது அளந்து கொண்டிருந்தாள். ஆனால், இது லதாவுக்குப் பிடிக்கவில்லை.

"அத்தை, நீங்க அக்காவைப் பற்றி கேவலமாகப் பேசுவதை நிறுத்திக் கொள்ளுங்கள்" என்று முதல் முறையாக தனது செல்வச் செருக்கைக் காட்டினாள் லதா. அதிர்ந்துபோன யசோதா அம்மாள் பேச வாயில்லாமல் மௌனமானாள்.

"அத்தை இந்த வேலையைச் செய்யுங்கள்" என்று மாமியாரை வேலை வாங்க ஆரம்பித்தாள். தொடக்கத்தில் இளைய மருமகள் மீது இருந்த மோகத்தினால் தலையாட்டிய யசோதா இப்பொழுதெல்லாம் வேலை செய்தால் தான் சாப்பாடு என்ற நிலைமைக்கு வந்துவிட்டாள். சாருமதி போன்ற அமைதிப் பெண் அல்ல லதா. புரட்சிப் பெண்; புதுமைப்பெண்; பணக்காரப் பெண்; விடுவாளா?

ஒருநாள் யசோதா அம்மாள் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். மருமகள் லதாவைப் பார்த்து, "இன்னும் கொஞ்சம் சாம்பார் போடு" என்று கேட்டாள்.

"சாம்பார், அத்தானுக்கு வேணும், வச்சதை சாப்பிட்டு சமர்த்தா எந்திருங்க" அதட்டினாள் லதா. வாயடைத்து போனாள் அத்தை. எல்லாவற்றையும், மாமியார் கண் எதிரிலே முத்துக்குப் பரிமாறினாள்.

சாப்பிட்டுவிட்டு அம்மாவை "சாப்பிட்டாயா?" என்று முத்து கேட்டான். "வயறு நிறைய சாப்பிட்டேன்" என்றாள் தனது இயலாமையைக் காட்டிக் கொள்ளாத யசோதா அம்மாள்.

"அம்மா, சொல்ல மறந்திட்டேனே. நாளைக்கு மாமா, அத்தை எல்லாம் வர்றாங்க. காலையிலே ஒரு லிட்டர் பால் அதிகமாக வாங்கிவந்து விடு. டிரைவருக்கும் சேர்த்து அவர்கள் இருக்கும்வரை வகைவகையாய் சமைத்து வை. எனக்கும் லதாவுக்கும் நிறைய வேலை இருக்கு. மாமாவுடனும் அத்தையுடனும் வெளியேப் போகனும்"

ஒருநாள் சாருமதி அம்மா அப்பா வந்து தங்கியதற்கு, என்ன பாடு படுத்தினோம். எல்லாம் வட்டியும் முதலுமாக வந்து வதைக்கிறதே என்று கண்ணயர்ந்தாள் யசோதா.

மறுநாள் லதாவின் பெற்றோர்கள் வந்து பத்து நாட்கள் தங்கி விட்டுப் போனார்கள். பத்து நாளும் வேலைக்காரியாய் மருமகளுக்கும், சம்பந்திக்கும் பணிவிடை செய்தார் யசோதா அம்மாள்.

பக்கத்து வீட்டு பங்கஜம், எதிர்வீட்டு வேலம்மாளோடு பேசக்கூடாது என்று ஏற்கெனவே 144 தடை உத்திரவை அமல்படுத்தி இருந்தாள் லதா. வீட்டு வேலையும் ஓய்வு கொடுக்க வில்லை. சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் இருந்த யசோதா அம்மாளுக்கு, அன்று பொழுது மிகவும் கெட்டப் பொழுதாகவே விடிந்தது.

"அத்தை, பாத்திரங்களைக் கழுவியவுடன் பாலைக் காய்ச்சி காப்பி போடுங்க. எனக்கு வெந்நீர் போடுங்க" என்று லதா காலை செய்தித் தாளைப் பார்த்துக்கொண்டு, வழக்கம்போல் உத்தரவுகளை வழங்கிக் கொண்டிருந்தாள்.

"அம்மா லதா, இன்னிக்கு உடம்பு முடியல. இன்று மட்டும் நீ வேலை செய்".

லதாவுக்கு கண்கள் சிவந்தன. கோபம் பீறிட்டது. அத்தையைத் திரும்பிப் பார்த்தாள்.

"இது என்ன சந்தை மடமா, நீங்க பாட்டுக்கு சும்மா உட்கார்ந்து சாப்பிட, வேலை செய்தால்தான் சோறு" என்று அதட்டினாள்.

"என் புள்ள சம்பாதித்து தானே சோறு போடுகிறான்! சந்தைமடம் என்கிறாயே?"

"எதிர்த்தா பேசுறீங்க, நான் ஒன்றும் சாருமதி இல்லை. ஒழுங்கா வேலையைப் பாரு" நீங்க என்ற மரியாதை நீ என்று குறைந்து போனது.

"வார்த்தையை அளந்து பேசடி லதா"

"என்ன திமிர் உனக்கு, சின்ன பிள்ளையாட்டம் சீவி சிங்காரிச்சு அடுத்த வீட்டுக்காரி, எதிர் வீட்டுக்காரியோட பேச முடியலைன்னு நினைக்கிறாயா? ஒழுங்கா வேலைச் செய்தோமா, சாப்பிட்டோமா என்று வேலையைப் பாரு" சத்தம் கேட்டு முத்து வந்தான். அம்மாவின் போக்குச் சரியில்லை என்று குற்றம் சுமத்தினாள் லதா.

"அம்மா, லதா சொல்றபடி கேளுங்க. அதுதான் உங்களுக்கு நல்லது" என்றான் முத்து.

யசோதா அம்மாளின் கண்களில் தாரை தாரையாக கண்ணீர் வடிந்தது.

ஹாலில் மாட்டியிருந்த தன் கணவன் படத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"யசோதா" என்றழைத்த குரல் கேட்டு நிமிர்ந்தாள். வேறு யாருமில்லை. படத்தில் இருந்த தன் கணவன்தான் பேசினார். "ஏண்டி, அமைதியும், பொறுமையும் கொண்ட சாருமதியை என்ன பாடுபடுத்தினாய்? உன்னை ராணி மாதிரி கருதி, அத்தை, அத்தை என்று உனக்கு சேவகம் செய்தாளே. அவளை நீ என்ன பாடுபடுத்தினாய்? சாருமதியின் பொறுமை, உனக்கு லதா வடிவில் செயல்

விளைவாய் எதிர்த்திசையில் வருகிறது. எங்கோ பிறந்து வளர்ந்து பற்றற்றத் துறவிகளாக தியாக சீடர்களாகத் தொண்டாற்றும் மருமகள்களை, ஏன் இப்படி வதைக்கிறீர்கள். பெண்ணே! பெண்ணினப் பெருமையை உணர்ந்து கொள்" மனசாட்சியின் சொற்கள் கணவன் பெயரில் ஈட்டியாய் நெஞ்சைக் குத்தின.

"அம்மா சொல்ல மறந்துட்டேனே! காலையில் சென்னையிலிருந்து போன் வந்தது. அண்ணிக்கு பெண் குழந்தை பிறந்திருக்கிறதாம்" யசோதா அம்மாளிடம் சற்று முன் புகுந்திருந்த சோகம் வெளியேறி சந்தோஷம் புகுந்து கொண்டது. சாருமதியையும், பேத்தியையும் நினைத்து மகிழ்ச்சியடைந்தாள். துன்பமும், இன்பமும் மாறி மாறி வருவது இயல்புதானே?

சென்னையில் உள்ள சாருமதிக்கு பெண் குழந்தை பிறந்ததைக் கேட்டு சென்னை போகத் துடித்தார் யசோதா. ஏதோ சாமாதானம் கூறி, அதனையும் தடுத்துவிட்டாள் லதா. சில நாட்கள் கழித்து, அருணே நேரடியாக வந்து அம்மாவை சென்னைக்கு அழைத்துப் போனான். சாருவையும், பேத்தியையும் கண்ட யசோதா அம்மாள் ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். தாயும் சேயுமாக இருக்கும் சாருமதி, அத்தையைப் புன்முறுவலுடன் வரவேற்றாள்.

"அத்தை எப்படியிருக்கீங்க?"

"நல்லா இருக்கேம்மா"

"தம்பி முத்து, லதா எப்படியிருக்காங்க"

"அவர்களுக்கென்ன, ரொம்ப ரொம்ப சௌகரியமாக இருக்காங்க"

"சரி அத்தை, வெந்நீர் போட்டிருக்கேன். பயணக் களைப்புத் தீர குளித்து வாருங்கள். சாப்பிடலாம்" என்றாள் சாருமதி.

"பிள்ளை பெத்த உடம்பு. நீ ஏன் சும்மா வேலை செய்யற. இனிமேல் வீட்டு வேலைகளை எல்லாம் பார்த்துக்கிறேனம்மா"

"என்ன அத்தை? வயசான உங்களை உட்கார வைச்சு கவனிக்கிறதுதான் என் கடமை. உங்க பிள்ளைகளை வளர்க்க நீங்க பட்ட கஷ்டங்களெல்லாம் போதாதா? பேத்தியுடன் கொஞ்சி மகிழ்ந்து சந்தோஷமாக இங்கேயே மகாராணி போல இருங்கள். உங்களுக்கு எல்லா உதவிகளையும் நானே செய்கிறேன்" என்றாள் சாருமதி. இளைய மருமகளிடம் தான் பட்ட கஷ்டங்களைச் சொல்ல ஆரம்பித்தாள் யசோதா.

"அத்தை எனக்கு எல்லாம் தெரியும்"

இந்த காலத்து பொண்ணுங்க சிலர் இப்படித்தான் இருப்பாங்க.

லதாவுக்கு இப்பத்தான் கடிதம் எழுதி முடித்தேன். பாருங்க என கடிதத்தைக் கொடுத்தாள். கடிதத்தைப் படித்தார் யசோதா அம்மாள்.

அன்புள்ள லதாவுக்கு,

தாயை மகன் நேசிப்பது போல், நீயும் அத்தையை நேசிக்க வேண்டும்.

தாய் தான் வேர். மகன் மரம். அந்த மரக்கிளையில் வந்தமரும் பறவையே மனைவி. தன்மீது விளையாட அந்தப் பறவைக்கு மரம் இடம் கொடுத்தால் மரத்தின் வேரை அது கொத்திச் சாப்பிட முடியாது.

மருமகள் என்பவள் வீட்டின் ராணி அல்ல. தாய் என்ற ராணியின் தோழிதான் மருமகள்.

கணவன் தன்னிடம் பெறும் சுகங்களுக்காக அவனது தாயை அவள் விலையாகக் கேட்பது நியாயமாகாது.

எவள் இல்லையென்றால் இந்த பூமியில் அவன் பிறந்திருக்க முடியாதோ, அவளே தான் எல்லோரையும் விட உயர்ந்தவள். அந்தத் தாயின் அந்தஸ்தை ஒப்புக் கொண்ட மருமகள் தான், தனக்கு வரப்போகும் மருமகளிடம் அந்த அந்தஸ்தை எதிர்பார்க் முடியும். மருமகளும் ஒரு நாள் மாமியார் ஆவார். ஆகவே, குடும்பக் கோயிலின் கோபுரம் 'அன்னையே' புரிந்து கொள்வாய் என்று நம்புகிறேன்.

அன்புடன்
சாருமதி

கடிதத்தைப் படித்து சிலைபோல் இருந்தாள் யசோதா அம்மாள்.

தான் செய்த செயல்களில் விளைவுகளை அனுபவித்த யசோதா அம்மாள் கண்களில் நீர் மல்கியது.

தன் குற்ற உணர்வு உறுத்த தேம்பி தேம்பி அழுதார். மருமகள் சாருமதியைக் கட்டிப்பிடித்துக் கொண்டு உணர்ச்சி பிரவாகம் தொண்டையை அடைக்க அனைத்து முத்தமிட்டார்.

"நீ என் மருமகள் அல்ல. என் மகள் அம்மா. ஆம்! சாருமதி நான் பெற்ற பெண் என்று ஆனந்தக் கண்ணீர் வடித்தாள் யசோதா அம்மாள்".

இறையருள் நமது எல்லாச் செயல்களிலும் கலந்து, சரியான பலனைத் தந்து கொண்டே தான் இருக்கிறது.

"செயலிலே விளைவாக
தெய்வ ஒழுங்கமைப் பிருக்க
பயனென் தவறிழைத்துப்
பரமனைப் பின் வேண்டுவதால்?"



# 8. குடும்பம்

"என்னது? இட்லிக்கு எப்போதும் மிளகாய்ப் பொடிதானா! சட்னி இல்லையா" அவனவன் தினமும் ஒரு வெரைட்டி சாப்பிடுகிறான். இனி தினமும் மிளகாய் பொடியை வைக்காதே. போர் அடிக்கிறது. உனக்கு இன்னும் ரசனை போதவில்லை." கணவன் கார்த்திக் புறப்பட்டு வேலைக்குப் போய்விட்டான்.

"என்னம்மா சப்பாதிக்கு கீரை சாலடு வைக்கிறே. சப்பாத்திக்கு குருமா கொடும்மா. லஞ்ச் டைமிலே என் பிரண்ட்ஸ் எல்லாம் வெரைட்டி வெரைட்டியாக சூப்பர் காம்பினேஷனில் டிபன் கொண்டு வரங்கம்மா. நீ என்ன அந்த காலத்து ஆளாகவே இருக்கிறே. இனி உனக்கு எது எதுக்கு காம்பினேஷன் என்று லிஸ்ட் போட்டுத் தர்றேன்" என்று சொல்லி டிபன் பாக்சை எடுத்து கல்லூரி சென்றாள் மகள் வித்யா.

அம்மா, எனக்குக் காலையிலே சாதம், சாம்பார், கூட்டு, கறி எல்லாம் இன்னும் ருசியா வையும்மா. பிளஸ்டு படிக்கும் மகன் விவேக் அட்வைஸ் செய்து கிளம்பினான்.

ரம்யா கிச்சனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இதற்குப் பேர் கல்யாணம்? எல்லோரையும் திருப்திப்படுத்த ஒரு சமையல்காரிக்குப் போட்ட முடிச்சா தாலி?

சே! என்ன வாழ்க்கை?

சோக மேகங்கள் அவள் அடிவயிற்றை அழுத்துவதை உணர்ந்தாள்.

சொந்த விருப்பு வெறுப்புகளை தொலைத்து விட்டு, மன்னன் ஆசைகளை நிறைவேற்றும் மந்திரியாக, வேலை பார்க்கும் அடிமை.

ஒரு மைத்ரேயியாக, ஒரு அம்ருதா ப்ரீதமாக ஒரு கார்க்கியாக மலர்ந்திருக்க வேண்டியவள், ஒரு சராசரி பெண்ணாகப் பிள்ளை பெறும் இயந்திரமாக, சமையற் காரியாக, வேலைக்காரியாக, சலவைக்காரியாகப் போனாள்.

கணவன், மகள், மகன் மூவரும் சாப்பாட்டை வாழ்த்தி இரசிக்காவிட்டாலும் பரவாயில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு சொல்லை, இராட்சச முள்ளை எடுத்து அவள் மீது குரூரமாக வீசியதாக உணர்ந்தாள்.

நெஞ்சுக்குள் அனல் மிதந்தது. கனவுகளையும் அபிலாஷைகளையும் தனக்குள்ளே புதைத்து இல்லறத்துக்கு எருவாவதைத்தவிர வேறு வழியே இல்லை என்ற பெருமூச்சு விட்டாள். ஓய்வில்லை, ஒழிச்சலில்லை. ரம்யாவின் கண்களில் கண்ணீர் வடிந்தது. சிந்தித்துக் கொண்டே இருக்கும் மனசு அவ்வப்போது கிடைக்கும் சின்னச் சின்ன இடை வெளிகளில் ஓய்வுக்குப் படுக்க ஆசைப்படுகிறது. அமைதி இழந்தவளாய் படுக்கையில் சாய்ந்தாள். வானொலியின் பாட்டு சலிப்பை ஊக்கப்படுத்தியது.

“பெற்றவள் உடல் சலித்தாள்
பேதை நான் கால்சலித்தேன்
படைத்தவன் கை சலித்து ஓய்ந்தானம்மா...
அம்மா......... அம்மம்மா...... மீண்டும் ஒரு
தாய் வயிற்றில் பிறவேனம்மா.....”

காலிங் பெல் அழைத்தது. புடவையைச் சரிசெய்து கொண்டாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். கதவைத் திறந்தாள்.

“ஏய் ரம்யா எப்படியிருக்கே” ரம்யாவுக்கு பிரேமாவை பார்த்ததும் ஆச்சரியம் தாங்கவில்லை.

“என்ன பிரேமா சர்பரைஸ் விசிட் பண்ணி அசத்திட்டே.”

“போடி. துறுதுறுவென பள்ளி நாட்களில் சுறுசுறுப்பாய் இருக்கும் உன் முகம் ஏன் சோர்ந்துள்ளது?”

“இல்லையடி, காலை நேர அவசரம். குழந்தை களையும், கணவனையும் அனுப்பிவிட்டு அலுப்புத் தீர படுத்திருந்தேன்.”

இரண்டு நாள் மருத்துவர்கள் கருத்தரங்குக்காக சென்னை வந்தேன். கருத்தரங்கு முடிந்துவிட்டது. உன்னைப்பார்க்க ஆசை ஏற்பட்டது. அதான் வந்தேன்.

டாக்டர் பிரேமாவின் சுதந்திரம், வசீகரம், ரம்யாவை வியக்க வைத்தது.

பள்ளி நாட்களில் இரண்டே சுரிதார்கள். இரண்டு கிலோ மீட்டர் நடந்து வந்து படித்தது. கழுத்தில் கறுப்பு

மணி அணிந்த ஏழ்மை பிரேமா எங்கே? இன்று பளபளக்கும் முகம், வைரக் கம்பல், உயர் ரக ஷிபான் புடவை, மணக்கும் செண்ட், சீருடை டிரைவர், நுனிநாக்கு ஆங்கிலம், கழுத்தில் செல்போன் ஒலிக்க கலக்கும் பிரேமா எங்கே?

என்ன சாப்பிடறே பிரேமா?

உன் கையால் எதைக் கொடுத்தாலும் சாப்பிடறேன்.

வா, சாப்பிடலாம்.

இருவரும் அமர்ந்து சாப்பிட்டார்கள். பழைய பள்ளி நாட்களை நினைவு கூர்ந்தார்கள்.

வழக்கமான குசலங்கள், குதூகலங்கள். பிரேமா தன் மனக் குமுறல்களைச் சொல்லத்தான் தன்னை தேடி வந்துள்ளாள் என்று உணர்ந்தாள் ரம்யா.

"ரம்யா, கஷ்டப்பட்டு எம்.பி.பி.எஸ். படித்தேன். ஸ்காலர்ஷிப்பில் எம்.டி. படித்தேன். அரசு மருத்துவமனையில் இன்று நான் தான் தலைமை மருத்துவ அதிகாரி."

"மாலையில் கிளினிக்கில் கூட்டம். காலை 5 மணிக்கு எழுந்து இரவு 11 மணிக்கு படுக்கும் வரை வேலை, பணம், செல்வாக்கு எல்லாம் கிடைக்கிறது."

"தம்பி, தங்கைகளுக்கு எல்லாம் திருமணம் செய்து கொடுத்தேன். வசதியாக வாழ்கிறார்கள்."

"அவர்கள் குழந்தை எல்லாம் அத்தை என்றும் பெரியம்மா என்றும் அன்பைப் பொழிகிறார்கள்."

"இருந்தும் என் அம்மா என் பணத்தைத்தான் விரும்புகிறார்களே தவிர, எனக்கு ஒரு திருமண வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை பாத்தியா?"

"இந்த உடலும் உழைப்பும் பணமும் இருக்கிற வரைக்கும் சொந்தங்கள் கொண்டாடும்."

"உன்னைப்போல் எனக்கும், கணவர், குழந்தைகள் இருந்தால் நானும் குடும்ப வாழ்க்கையை இரசித்திருப்பேன் அல்லவா!"

"சரி! காலம் கடந்துவிட்டது, நாற்பது வயதில் நினைத்து என்ன செய்வது?"

"என் மனச் சுமைகளை கொட்ட உன்னை விட்டால் எனக்கு வேறு யாருமில்லை ரம்யா."

"ரம்யா வாயடைத்துப் போனாள். நிதானித்து பிரேமாவை கட்டிப்பிடித்து ஆறுதல் கூறினாள்."

"கடவுள் இன்னாருக்கு இன்ன வேலை என்று ஏற்கனவே எழுதி வைத்திருக்கிறான். அதை நாம் எப்படி மாற்ற முடியும்? உன் குடும்பத்திற்கு ஏணியாக, கற்பூரத் தீபமாக இருந்து உடன் பிறப்புகளைக் காப்பாற்றியுள்ள உன் சேவையால் மனித சமுதாயம் பயனடைகிறது. என் சேவையில் ஒரு குடும்பம் பயனடைகிறது."

பிரேமா விடை பெற்றாள்.

ரம்யாவும் காலை நேர கவலைக்கு விடை கொடுத்தாள்.

கணப்பொழுதில் ரம்யாவின் கஷ்டங்கள் அனைத்தும் கற்பூரமாய் கரைய பெருமையால் மிளிர்ந்தது அவள் முகம்.

# 9. வீட்டைக் கட்டிப்பார்

இப்படி ஒரு வீட்டை எப்படி என்னால் கட்டி முடிக்க முடிந்தது.

இப்போது நினைத்தால் கூட மனசில் ஒரு மலைப்பும் பிரமிப்பும் தோன்றத்தான் செய்கிறது.

கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்தான் எனக்கு லோன் கொடுத்தது. கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் இல்லாவிடில் என்னைப் போன்ற நடுத்தர மக்கள் வீடு கட்டுவதையே எண்ணிப் பார்க்க முடியாது.

"வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் செய்துப்பார் -" அனுபவித்துச் சொன்னது. அனுபவிக்கிறவர்கள் புரிந்து கொள்ளட்டும்.

இரண்டு வருடமாகப் பார்த்துப் பார்த்து வியர்வை சிந்தி கட்டிய வீடு. இன்னும் பெயிண்ட், சுண்ணாம்பு அடிக்கவில்லை. காம்பவுண்ட் சுவர் கட்டவில்லை. இதற்கெல்லாம் என் கையில் காசில்லை. ஆழ்ந்த சிந்தனையில் இருந்தேன்.

இந்திராவின் முகத்தைப் பார்த்தேன். திருமணமாகி இதுவரை நல்ல புடவையோ, நகையோ வாங்கிக் கொடுக்கவில்லை.

இருக்கிற நகைகளையும் கழட்டி கொடுத்து விட்டாள்.

மனைவி, மூத்தப் பெண், இளைய மகன், மூவரும் வீடே சுவர்க்கமாக வாழ்ந்து வருவதை எண்ணி வியப்புற்றேன். வீட்டைக் கட்டும் நோக்கத்தால்

இதுவரை ஊர் பயணமோ, விடுமுறை உல்லாசமோ கிடையாது.

“இந்த வீட்டைக் கட்டி முடித்த பின்னரும் இவர்கள் எவ்வளவு தியாகம் செய்ய வேண்டுமோ?” ஆழ்ந்த சிந்தனையிலிருந்தேன்.

திருமணமான உடனே மூத்த மருமகளாகக் குடும்ப பொறுப்புகளை என்னோடு பகிர்ந்து கொண்டாள்.

மாமனார் இல்லை. மாமியார் சாதுவாக இருந்தாலும், எப்போதாவது சொல்லும் கடுஞ்சொல். அம்மாவிடம் எதையோச் சொல்லி குடும்பத்தில் குழப்பத்தை உண்டு பண்ணும் பெரிய நாத்தனார்.

ஏழைக் குடும்பத்தில் உள்ள சின்ன நாத்தனாருக்கு, தாய் போல் இருந்து பிரசவம் பார்த்து செய்யும் பணிவிடை.

ஒப்புக்குக்கூட மாதாமாதம் பணம் கொடுக்காத மச்சினன். கல்லூரிக்குப் போகும் கடைக்குட்டி மச்சினனுக்கும், அலுவலகம் போகும் கணவனுக்கும் நாள்தோறும் சாப்பாடு கட்டி அனுப்பும் அன்றாட வாழ்க்கை.

நடு மச்சினன் வெளிநாட்டில் இருந்து வருவதற்குள் பெண் பார்த்துத் திருமணம் நடத்தி வைத்த சம்பவம்.

இரண்டாவது மருமகளுடன் மாமியாரும், மச்சினர்களும் மூன்றாவது நாளே கூட்டு சேர்ந்து கணவனையும், தன்னையும் அவமதித்த சம்பவங்கள்.

என்னைவிட இந்திராவுக்கு சகிப்புத் தன்மை அதிகம். என் சம்பளத்தையும் இதர வருமானத்தையும் அட்டையாக உடன்பிறப்புகள் உறிஞ்சினார்கள்.

நான் பத்து வருடங்கள் பட்ட சிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. என்னால் வளர்க்கப் பட்டவர்கள், வளர்ந்துவிட்ட காரணத்தினால் கூட்டமாக ரகசியமாகத் தீர்மானம் போட்டார்கள். அம்மாவை துணைக்குக் கொண்டார்கள்.

ஆம்! தம்பிக்குத் திருமணமாகி ஐந்து நாட்கள் தான் ஆகிறது. இரண்டாவது அழைப்புக்குச் சொன்னபடி மாமியார் வீட்டுக்குப் பதில் ஒன்றுவிட்ட சகலை வீட்டுக்குத்தான் போக வேண்டும் என்று புதிய மருமகள் அடம்பிடித்தாள்.

நானோ, ஏதோ ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் காப்பதாக எண்ணி இதற்கு மறுத்தேன்.

"உனக்கு என்ன? அவர்கள் எங்கு போனால் உன் வேலையைப் பார்" அம்மா முதன்முறையாக அதட்டல் போட்டார்கள், சொன்னது தாய். மகனுக்கு ஒரு துணை வந்ததும், மருமகள் மீது கொண்ட வெறுப்பால், மகனின் மேல் இருக்கும் பாசத்தை துறக்கும் தாய்மார்கள். உலகம் எப்படிப்பட்டது. சொந்தபந்தம் புனிதமானது, தொப்புளே கொடியைச் சபித்தால் எப்படி?

புதிய சம்பந்தி, தம்பிகள், மருமகள் அனைவரின் முன்பு முதன்முறையாக அவமதிக்கப்பட்டேன்.

உடனடியாக குடும்ப நண்பரை அழைத்து வர ஏற்பாடு செய்தேன். அடுத்த பத்து நிமிடத்தில் அவர் வந்தார்.

சூழ்நிலைகளை யூகித்துக் கொண்டார். அம்மாவைத்தான் முதலில் கண்டித்தார்.

"இவ்வளவு, குழப்பத்திற்கும் நீங்க தான் காரணம்"

என்னை நோக்கி "இனி அவர்களாக வெளியேற்று வதற்குள் நீங்களே வீட்டைக் காலி பண்ணுங்கள்" என்றார்.

தம்பிகளைப் பார்த்து, "இனி அவரவர்கள் வேலையைப் பாருங்கள்" தீர்ப்பை வழங்கி விட்டுச் சென்று விட்டார்.

நீர் வழிந்த கண்ணீரோடு கைக்குழந்தையுடனும் எல்.கே.ஜி. படிக்கும் மகளுடன் இந்திராவை அழைத்துக் கொண்டு அவரச அவசரமாக உள்ளூரிலேயே வாடகைக்கு வீடு பிடித்தேன்.

பிறந்த இடம், பிறந்த மண், சொந்த ஊரிலேயே வாடகை வீட்டில் குடியிருக்கும் வேதனை. அப்பா வாங்கிய கடனால் மூழ்கிப் போன வீட்டை காப்பாற்றிய எனக்கு அந்த வீட்டில் இடமில்லை.

ஆறு மாதம் தனிமையில் சிந்தனை. குழந்தை களாக உடன் பிறப்புகளை வளர்ந்தேன். வளர்ந்ததும் பங்காளிகளாக வாட்டுகின்றனர். எப்படியோ சென்னைக்கு மாறுதல் வாங்கி வந்தேன்.

சிறு வயதிலேயே ஓட்டு விட்டில் பிறந்த எனக்கு, ஒட்டுக் கட்டிடத்தில் வாழ ஆசை. பக்கத்து தெருவில் இருக்கும் ஒன்றுவிட்ட சகோதரரிடம் மனை வாங்க ஆலோசனைக் கேட்டேன். குதர்க்கமாகப் பதில் சொன்னார். நானே முயற்சித்து மனை தேடினேன். வீட்டுப் புரோக்கரைக் கூப்பிட்டு "அவனுக்கு உதவி செய்யாதே" என்று எச்சரிக்கை வேறு விடுத்தார். காசு வாங்கும்

புரோக்கர் அவர் பேச்சை எப்படிக் கேட்பார்? அழகான மனை வாங்கிக் கொடுத்தார். இது மட்டுமல்ல!

வீடு கட்டுவதைப் பலவகையிலும் தடுக்கப் பார்த்தார். ஒவ்வொரு கல்லாக உயரும் வீடு கண்டு அவர் பட்ட பொறாமைக்கு அளவே இல்லை. உறவுகளுக்கு உள்ளே சண்டை சச்சரவு வரத்தான் செய்யும். அதுக்காகப் பொறாமையையும் வஞ்சத்தையும் பகையாகச் சேத்து வச்சுக்க கூடாதப்பா. அவர்களது பொச்சரிப்புகளை, தடைகற்களைப் படிக்கற்களாக மாற்றினேன். நெருங்கிய பந்துக்களின் லட்சணம் வெட்ட வெளிச்சமாகியது.

வீடு கட்டும் போது பட்ட சிரமங்கள், வேதனைகளை, துன்பங்கள், நோய்கள், அப்பப்பா... சொல்ல வார்த்தைகள் கிடையாது. கடைசியில் பணப் பற்றாக்குறை.

சரி, நண்பருக்கும், மச்சினர்களுக்கும் வீடு கட்டும் போது தானாக முன்வந்து கடன் கொடுத்தோமே! ஏதாவது வாயளவில் கேட்பார்கள் என்று கருதினேன். ஏமாற்றம்தான். வீட்டின் எஞ்சிய வேலையை முடிக்க யாரிடம் கடன் கேட்பது. யோசித்தேன்.

சிறு வயதில் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டேன். எந்த உறவுகளிடமும் எதுவும் கேட்டதில்லை. முதன் முறையாக மாமனாரிடம் கடன் கேட்டேன். அவர்களது மகள் வசிக்கப் போகும் வீட்டிற்குக் கடனாகத்தான் கேட்டேன். அப்போது மாமனாரிடமும் பணம் இருந்தது.

தனது ஒரே மகள் மீதும் மருமகன் மீதும் அன்பு கொண்டவர் தான் மாமனாரும். எங்கே மகளுக்கு, இருக்கின்ற பணத்தை கொடுத்து விடுவாரோ என்று பயந்தனர் மச்சினர்கள். ஒரு மைத்துனர் தன்னிடம் இருந்த பிளாட்டை அப்பாவுக்கே விற்று பணத்தை வாங்கிக் கொண்டார். அவ்வளவு பாசம் சகோதரியின் மீது. இன்று இந்த பிளாட்டிலே மாமனார் வசிக்கவும் முடியலை. திரும்ப விற்கவும் முடியலை.

என் மனசெல்லாம் மழையில் நினைஞ்ச காகிதமாய் நைந்து போய் சோகத்தில் வெந்து போனது. அவமானமும் வருத்தமும் உயிரைப் பிடுங்கித் தின்றது.

அப்பாவிடம் பிள்ளைகள் பணத்தைப் பங்கு போட்டுக் கொள்கிறார்கள். இதில் நான் ஏன் தலையிட வேண்டும்? சரியான புத்திக் கொள்முதலை அறுவடை செய்தேன். அவமானத்தால் துடித்துப் போனேன். என்ன செய்வது? ஞானம் பெறுவது என்றால் சும்மாவா கிடைக்கும். பட்டால் தான் கிடைக்கும். எதிர்பார்ப்புகள் ஏமாற்றம் தான் தரும். பட்டறிவு.

சொந்த வாழ்வை.... ரத்த பந்தங்கள் உறவுகள் சூறையாடிய கொடூரத்தினால் உருவான குடைச்சல்.

விரக்திக்குள் விழுந்த மனசு நைந்து துவண்டு போய் விட்டது.

வீடு கட்டும் போது தான் உறவுகளின் இயல்புகளையும், நண்பர்களின் குணங்களையும் தெரிந்து கொள்ளும் அனுபவம் கிடைக்கும்.

நமது உறவுகள் எல்லாம் பொருளாதார உறவுகள் தானே!

சரி காம்பவுண்டு இல்லையென்றால் என்ன? சுண்ணாம்பும், பெயிண்டும் பிறகு அடித்துக் கொள்ளலாம் என்ற நிலையில் குடிபுகு விழாவுக்குக் கடிதம் எழுதத் தொடங்கினேன்.

உறவுக்காரர்கள் அலுவலக நண்பர்கள் என்று கடிதம் எழுதினேன்.

என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பட்டியலில் இடம் பெறாதது கண்டு இந்திரா என்னிடம் கோபம் கொண்டாள்.

"என் மனசிலே பட்டதைச் சொல்கிறேன். அவர்கள் நம்மை அவமானபடுத்தினாலும், அவர்களைக் கூப்பிடுவது நமது கடமை. ஏன் என்றால் அவர்கள் உங்களைப் பெத்தவங்க. கூடப் பிறந்தவங்க. அவர்கள் வயிற்றெறிச்சல் நமக்கெதற்கு" என்று மந்திரியாய் இடித்துரைத்தாள். குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை போலும்.

"எனக்கு அவர்களைப் பார்ப்பதற்கே பிடிக்க வில்லை இந்திரா, நன்றி கெட்டவர்கள்."

"சரி, நீங்கள் போக வேண்டாம், நானே போய் அழைத்து வருகிறேன். வந்தால் வரட்டும், வராவிட்டால் போகட்டும். அழைக்காமல் இருக்கக்கூடாது."

இந்திராவின் ஆலோசனையைக் கேட்டு பக்கத்துத் தெருவில் இருக்கும், கெடுதல் செய்த உறவினரையும்

அழைத்தேன். கெட்ட எண்ணம் கொண்ட அவரால் வர முடியவில்லை.

முற்றுப் பெறாத புது வீட்டில் கூட்டம் அலைமோதியது. சொந்த பந்தங்களைக் காட்டிலும் நண்பர்கள் எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருந்தனர்.

வந்தவர்கள் வாழ்த்திவிட்டு வெளியே சென்று கொண்டிருந்தார்கள். அம்மாவும், அக்காவும், உடன் பிறப்புகளும் வந்திருந்தனர். இந்திரா சொன்னதால் உடன் பிறப்புகளை அழைத்தேன். வீட்டை விட்டு வெளியே போகச் சொன்ன வார்த்தைகள், அம்மாவைப் பார்க்கும் போது முள்ளாய் குத்திக் கொண்டே இருந்தது. குடும்பத்திற்காக உழைத்த என்னை அவமானப்படுத்தி விட்டாள்.

இந்திரா எதையும் மனதில் வைத்துக் கொள்ளாமல் எல்லோரிடமும் சகஜமாகப் பழகினாள். அதுவும் அம்மாவையும் உடன் பிறப்புகளையும் விழுந்து விழுந்து உபசரித்தாள்.

வந்தவர்களுக்கு விடை கொடுத்து வாசலில் வழி அனுப்பிக் கொண்டிருந்தேன்.

ஓர் ஓரமா இருந்த அம்மா, ஆசி வழங்க வந்த குருமார் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"அம்மா உங்க மூத்த பையனும் மருமகளும் ஆன்மீக வழியில் சிறப்பாகக் குடும்பம் நடத்தி வருகிறார்கள். அழகான வீடு கட்டியிருக்கிறார்கள். இந்த

வீட்டில் வளமுடன் வாழ்வார்கள்" என்று குருஜி அம்மாவிடம் சொன்னார்கள்.


"நான் வீட்டை விட்டு வெளியே துரத்தாவிட்டால் இந்தக் குட்டையிலேயே இருந்து கிணற்றுத் தவளையாக இருந்திருப்பான். இன்று பலரும் புகழும் வண்ணம் முன்னேறியிருப்பது என் செய்கையினால்தான்" என்று அம்மா குருஜியிடம் சொன்னார்கள்.

"அம்மா! கடவுள் சிலரை உய்வதற்கு, வெற்றியடைவதற்கு அன்பாகத் தட்டிக் கொடுப்பார். சிலரை வெறுப்புடன் அடித்து விரட்டுவார். உங்கள் வாயால் கடவுள் அவரை வெளியேற்றி நன்மைகள் செய்துள்ளார்"

அம்மாவும் குருஜியும் பேசிக்கொண்டே இருந்தனர்.

அருகிலிருந்த இந்திராவைப் பார்த்தேன். இரண்டு பேரின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர்.

"நம்பினார் கெடுவதில்லை
நான்குமறை தீர்ப்பு
நல்லார்க்கும் ஏழையர்க்கும்
ஆண்டவனே காப்பு."



# 10. பியூன் பரமசிவம்

கடிதத்தைப் படித்ததும் அதிர்ச்சியில் ஆழ்ந்தார் இஸ்மாயில். மனம் ஒரு நொடியில் ஸ்தம்பித்தது. அன்றலர்ந்த தாமரையாய் காலையில் தனது சீட்டில் கம்பிரமாக உட்கார்ந்து வேலையினைத் துவங்கும் இஸ்மாயிலுக்கு, அன்றைய முதல் கடிதமே சவாலாக அமைந்தது.

ஆடாது தவத்தில் ஆழ்ந்திருக்கும் ரிஷிபோல் உட்கார்ந்திருந்தார் சிறிது நேரம்.

மாவட்ட கல்வி அதிகாரிக்கு அப்படி என்ன சிக்கல்? அவர் மீதான புகார் குறித்து, நேரடி விசாரணை செய்யும் பொருட்டு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து வந்திருந்த சம்மனைப் பார்த்ததும் முதலில் தன் இருதயமே சற்று நேரம் நின்றதை உணர்ந்தார். தலையின் உள்ளே மின்னல் கம்பிகள் கூர்வாளாய் இறங்கின.

கண்டிப்பும் நேர்மையும் உள்ள அதிகாரி இஸ்மாயில். தன்னுடைய பதினாறு வருட சர்வீசில் இது போன்ற ஒரு விசாரணையை எதிர் கொண்டதில்லை. தனிமனித வாழ்வில் ஒழுக்கத்தையும், பண்புகளையும் உறைவிடமாகக் கொண்டவர். அலுவலகப் பணியில் சட்டத்திற்கு முதலிடமும் மனிதாபிமானத்திற்கு முன்னுரிமையும் அளிப்பவர்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்தான் கடலூரிலிருந்து மாறுதலாகி திருச்சி வந்தார். ஐந்து

மாதங்கள் மாவட்டம் முழுவதும் பம்பரமாகச் சுழன்று தனது துறையில் நிர்வாகச் சீர்த்திருத்தம் செய்தார். இவரது நிர்வாகத்தில் பரவசப்பட்ட மாவட்ட கலெக்டரே, இஸ்மாயில் நிர்வாகத்தை பாராட்டி அடிக்கடி மகிழ்வார். "இஸ்மாயில் போன்று முன்னோடியாக எல்லா துறையிலும் அதிகாரிகள் இருக்க வேண்டும்" என்று மற்ற துறை அலுவலர்களுக்கு ஒவ்வொரு ஆய்வுக் கூட்டத்திலும் கலெக்டர் ஆலோசனை சொல்வார்.

இவர் வந்ததும், மாவட்டத்தில் உள்ள பள்ளிக் கூடங்களில் காலை ஒன்பதுக்கு மணி அடித்தால், எட்டு ஐம்பதுக்கே ஆசிரியர்கள் ஆஜராயிருப்பார்கள். இதுவரை நேரத்திற்கு ஆசிரியர்கள் வந்ததையே பொது ஜனங்கள் பார்த்ததில்லை. இவ்வளவுக்கும் தனது கண்டிப்பான அணுகுமுறையிலேயே எல்லோரையும் நேரந் தவறாமல் பணிபுரிய வைத்திருப்பவர் இஸ்மாயில். இதுவரை எந்த ஒரு பணியர்ளரையும் தண்டித்தது இல்லை. சீறுவார், கடிக்க மாட்டார்.

தனது உபயோகத்திற்காக அரசுச் சலுகை எதையும் துய்க்க தன் குடும்பத்திற்கு கூட அனுமதி தரமட்டார் அரசு ஜீப்பை வீட்டிற்கு வரச் சொல்வதோ, அலுவலக தொலைப்பேசியில் தன் சொந்த விஷயங்களைப் பேசுவதோ கிடையாது. அலுவலகத்தில் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பணிகள், குறிப்பிட்ட காலத்தில் கட்டாயம் முடிக்க வேண்டும் என்பதில் கண்டிப்பும் உள்ளவர். கடமை உணர்ச்சி. நேரத்தவறாமை, சகமனுஷங்களோட பழகுற முறை, சட்டத்தையும் விதியையும் பின்பற்றும் முறை இவையெல்லாம் இவரது

இரத்தத்தில் ஊறியவை. செய்யும் தொழிலையே தெய்வமாக வணங்குவார். மசூதிக்குக்கூட இவர் செல்வதில்லை. தான் மேற்கொண்ட பணியை தொண்டே தொழுகையாக செய்து வருபவர். மற்றவர்கள் தனக்கு சூட்டும் புகழ் மாலைகளைக் சுழற்றி விடுவார். விமர்சனங்களை அணைத்துக் கொள்வார்.

சென்னை கல்வி இயக்குநரது அலுவலகத்தில் இஸ்மாயில் குறித்த புகார்கள் கடந்த ஒரு வாரமாக போய்கொண்டு இருப்பதை தெரிந்துதான் வைத்து இருந்தார் இஸ்மாயில். சுகத்தையும், சோம்பேறித் தனத்தையும் வளர்த்துக் கொண்டிருந்த ஒரு சில புல்லுருவிகள் போடும் பெட்டிஷன்கள் எல்லாம் இவரது நேர்மை என்ற நெருப்பில் கருகிப் போய்விடும், புஷ்வாணமாகி விடும்.

மொட்டை பெட்டிஷன்களை பாராட்டு பத்திரங்களாக ஏற்றுக் கொள்வார் இஸ்மாயில். ஆனால் இன்று இந்த மொட்டை பெட்டிஷன்களை வைத்து விசாரணைக்கு அழைத்திருப்பதை எண்ணி, கலங்காத அவர் மனம் ஒரு சில வினாடிகள் ஏனோ கலங்கியது.

காலிங் பெல்லை அழுத்தினார்.

நேர்முக உதவியாளர் வந்தார்.

அவரிடம் அந்தக் கடிதத்தைத் தந்தார். படித்துப் பார்த்த உதவியாளரது முகம் பேயறைந்தது போல் மாறியது. உறைந்து நின்றார்.

சுற்றிலும் தனது பார்வையை சுழலவிட்ட பின், மெதுவாக அதிகாரியின் காதில் ரகசியம் சொன்னார் உதவியாளர்.

"சார், இது எல்லாம் அவன் வேலை சார்"

"யார் அவன்?"

"அதுதான் சார் பியூன் பரமசிவம்"

"அவனுக்கு நாம் ஒன்றும் தீமை செய்ய வில்லையே!"

"சார், அவன் சிபாரிசு செய்த ஒன்று இரண்டு டிரான்ஸ்பரை நீங்கள் போட்டிருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது சார்"

"அட போங்க, இதுக்கெல்லாம் பயப்படுவதா? அரசு உத்யோகத்தில் நேர்மை இருக்கணும், நியாயம் இருக்கணும், மக்கள் வரிப் பணத்தில் சம்பளம் வாங்குகிறோம் அல்லவா?"

மக்களுக்கு துரோகம் செய்யலாமா? முறையற்ற வகையில் சட்டத்திற்கும், வரம்பிற்கும்மீறி ஒரு செயலும் செய்யக் கூடாதுங்க!

"நீங்க அனாவசியமாக மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க. நாம் படிச்சவங்க. சுயமா சிந்திக்கிறவங்க.... தன்னம்பிக்கை உடைய மனசு உடையவங்க. பிரச்சனைகளை நம்மால் சந்திக்க முடியும். அதற்கான தைரியமும், துணிவும் நம்மகிட்ட இருக்கு."

இந்த மாதிரி சின்ன இடைஞ்சல்களும், கசப்புகளும் வரத்தான் செய்யும். அதைத் தாங்கித்தான் ஆகணும். இந்த இழப்புகளுக் கெல்லாம் பயந்து, கவலைப்பட்டு, வழிமாறி ஊழல் பண்ணுனா.... வாழ்க்கையிலே தூய்மை, நேர்மை, மனசாட்சிங்கிறதெல்லாம் அடிபட்டு போகுமே!

"சார் மன்னிச்சுக்கனும், உங்களிடம் உள்ள விசுவாசத்தினாலும், அன்பினாலும் சொல்லி விட்டேன், அப்புறம் உங்கள் இஷ்டம்"

"அதெல்லாம் நான் பார்த்துக்கறேன்" சம்மனில் குறிப்பிட்ட பைல்களை எல்லாம் எடுத்துரெடி பண்ணுங்க, அடுத்த வாரம் விசாரணைக்குப் போவனும்."

இப்போது இஸ்மாயில் முகத்தில் தன்னம்பிக்கை மிதக்கும் இறுமாப்பு தெரிந்தது. நிச்சயமான தாக்குதலை எதிர்நோக்கும் போர்வீரனாக மாறினார்.

சுவரில் மாட்டியிருந்த கீதையின் வாசகத்தில் இஸ்மாயிலின் பார்வை இலயித்தது. "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே".

ஜீப் டிரைவரை அழைத்தார். வழக்கம் போல் கேம்ப் கிளம்பினார்.

"பொழைக்கத் தெரியாத மனுஷன், அவரும் பொழைக்க மாட்டேங்கிறார். எங்களையும் நாலு காசு சம்பாதிக்க விடமாட்டேங்கிறார்" அலுவலக சிப்பந்திகளில் மனக்குமுறல்களும் உண்டு. ஜீப் டிரைவரும் ஓசையில்லாமல் திட்டினான் தன் அதிகாரியை.

இஸ்மாயில் அன்று இரவு தன் சிந்தனையை ஓட விட்டார். ஏதோ பெரிய ஊழல் செய்தது போன்று விசாரணைக்கு ஏன் உத்தரவிடப்பட்டுள்ளது?

காரணம் தெரியாமல் இருந்த அவருக்கு, பியூன் பரமசிவம் பற்றி அரைகுறையாக தான் கேள்விப்பட்ட செய்திகள் எல்லாம் மின்னலாக மனதில் பளிச்சிட்டன.

தனது கண்டிப்புக்கு பயந்து போய் இப்போது பரமசிவம் லீவில் தான் இருக்கிறான். அவனது வேலைதான் என்பதை புரிந்து கொண்டார்.

"மனசே நிதானமாக சிந்தி... சமாளி... புத்தியை பயன்படுத்து... முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும்... நிதானமாக சாந்தமாக யோசி..." உள்ளுக்குள் கனமாய் ஓடுகிற நினைவுகள்... சகலத்தையும் தழுவி இழுத்துச் செல்கின்ற காற்றாக நினைவுகள்.

பியூன் பரமசிவம் கறுப்பு நிறம். ஆறடி உயரம், கொடுவாள் மீசை, யாரை ஏமாற்றலாம் என்று பார்க்கும் கண்கள். வயது ஐம்பது, எட்டாவது வரை படித்தவன். அந்த காலத்தில் எப்படியோ அரசு உத்தியோகத்தில் சேர்ந்துவிட்டான்.

மாவட்ட கல்வி அலுவலகத்தின் பியூனாக வேலை பார்க்கிறான். 25 வருட அனுபவம்.

மாவட்டத்தின் தலைநகரில் இருந்து கொண்டு, மாவட்டத்தில் உள்ள கல்வி அலுவலகங்களையும், பள்ளிக்கூட ஆசிரியர்களையும் தன் கைப்பிடிக்குள் வைத்திருப்பவன்.

படிப்பு இல்லாவிட்டாலும் சாமர்த்தியமாக உரக்கப் பேசத் தெரிந்தவன். அவ்வப்போது மாறிவரும் ஆளுங்கட்சி எம்.எல்.ஏவையும் மாவட்ட மந்திரியையும் கைக்குள் போட்டுக் கொள்வான். குறுக்குவழியில் காரியங்களை சாதிச்சிக்கிட்டு தானும் முன்னேறுவான்.

மாவட்ட கல்வி அதிகாரியிலிருந்து தலைமை ஆசிரியர் வரை இவனை அணுகினால் கேட்கிற பதவியை வாங்கித் தந்துவிடுவான். அவனையும் மீறி அவனது ஏரியாவுக்கும் வேலைக்கு வந்துவிட்டால், அவன் சொல்படி கேட்கனும். பேச்சைக் கேட்கவில்லை என்றால் முதலில் பெட்டிஷன் போடுவான். சம்பந்தப்பட்டவரே பயந்து கொண்டு வழிக்கு வந்துவிடுவார்கள். முடியவில்லை என்றால் மந்திரியிடம் சொல்லி மாற்றிவிடுவான். இப்படியோர் கேரக்டர் அவன்.

கல்வித்துறையின் பியூனிலிருந்து மாவட்ட அதிகாரி வரை டிரான்ஸ்பர், பதவி உயர்வு போன்ற உதவிகளைக் கேட்டு இவனிடம் எப்போதும் ஒரு கூட்டம் இருக்கும். சில்லரையை கொடுத்தால் கச்சிதமாய் வேலையை முடித்துக் கொடுப்பான். அப்படித்தான் டிரான்ஸ்பர் கேட்டு வந்த பெண் டீச்சரை இரண்டாவது திருமணம் செய்துகொண்டான்.

இரண்டு குடும்பங்களையும் தனித்தனியாக வைத்து பராமரிக்கிறான். இருவருக்கும் தனித்தனியே வீடுகள். போய்வர சொந்த கார். அடிக்கடி சென்னை சென்று மந்திரியைப் பார்த்து வருவான். குறுக்கு வழியில் சம்பாத்தியம் பண்ணத் தெரிந்த சாமர்த்தியன்.

மாவட்ட கல்வித்துறையில் உள்ள கூட்டுறவு கடன் சங்கத்தில் இவன் தான் தலைவன். இவனை எதிர்த்து போட்டியிட்டு ஓடியவர்கள் சிலர். கூட்டுறவு சங்கத்தை கையில் வைத்துக் கொண்டு பல மோசடிகள் செய்துள்ளான். ஆனால் இதனை கண்டுபிடிக்க வேண்டிய தணிக்கையாளரோ, அதிகாரியோ அவனால் அப்பதவிக்கு வந்தவர்களாகவே இருப்பார்கள்.

இரண்டு குடும்பத்திலும் இவனுக்கு எட்டு ஆண் புள்ளைங்க. பெண் குழந்தையே கிடையாது. ஆனால் ஒன்றுகூட பள்ளியிறுதி வகுப்பு வரை படிக்கவில்லை. தன்னைப்போல தன் புதல்வர்களையும் அரசாங்கத்தில் பியூன் வேலையில் சேர்க்க முயற்சித்தான். கிடைக்க வில்லை. ஆனால் எல்லா பிள்ளைகளையும், தனது செல்வாக்கில் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் பியூனாக சேர்த்து விட்டான். இங்குதான் எம்பிளாய்மெண்ட் கிடையாது. வகுப்பு வாரி பிரதித்துவம் கிடையாது. ஒரு விதியும் பின்பற்றுவதில்லை. பரமசிவத்திற்கு வசதியாகப் போச்சு.

கல்வி அலுவலகத்தின் மாடியில் உள்ள கூட்டுறவு கடன் சங்கத்தையே தனது தாதா ஆட்சி செலுத்தும் மையமாக வைத்திருப்பான். சங்கத்தின் தலைவர் பதவி அரசு அதிகாரிக்கு மாறினாலும் இவனது ஆட்சியே அங்கு நடக்கும். சங்கத்தின் சாவி இவனது இடுப்பிலே இருக்கும். சாவி இவனது உயிர். எதை இழந்தாலும் இழப்பான் சங்கத்தின் சாவியை இழக்கமாட்டான். அக்கிரமங்கள் ஆட்சி செய்வதை இறையாற்றல் பார்த்துக்கொண்டே தான் இருக்கிறது. காலமும், நேரமும் வரும்போது தக்க பலனை கொடுத்து விடும்.

கடிகாரம் தன் கடமையை செய்தது. பதினொரு முறை ஒலித்தது. கல்வி அதிகாரி இஸ்மாயிலை உள்ளே அழைத்தார் மாநில லஞ்ச ஒழிப்பு எஸ்.பி. இரண்டு மணி நேரம் விசாரணை நடைபெற்றது. புகார்களை படித்த எவரும் நம்பும் வண்ணம் வார்த்தை ஜாலங்களால்

ஜோடிக்கப்பட்டிருந்தன குற்றச்சாட்டுக்கள். எஸ்.பி. கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் உரிய பதிலை மிடுக்குடன் சொன்னார். கொண்டு சென்ற பைல்களையும் காட்டினார்.

மூதாதையர் வழியில் வந்த ஒரு வீட்டை தவிர தனக்கு வேறு சொத்து ஏதுமில்லை என்பதை ஆதாரத்துடன் நிரூபித்தார். மடியில் கனம் இருந்தால் தானே வழியில் பயமிருக்கும்.. தான் ஒருவனே அனைத்துக் குற்றச்சாட்டுக்களுக்கும் உதவியாளரின்றி விரல் நுனியில் பதில்களையும், விவரங்களையும் டக்... டக்... என்ற பதிலளித்த இஸ்மாயிலைக் கண்டு எஸ்.பி.யே ஆச்சரியப்பட்டார்.

இஸ்மாயிலை கூர்ந்து கவனித்தார் எஸ்.பி. எக்ஸ்-ரே படத்தில் உள்ள தெரிகிற படம் மாதிரி, அவரது வார்த்தைகளில் வழியே அவரது மனம், நேர்மை, கண்ணியம், பண்பாடு, தைரியம் எல்லாமே தெரிந்தது.

“என்ன மிஸ்டர் இஸ்மாயில், உங்கள் மீதுள்ள புகாரில் ஏதும் உண்மை இல்லை என்பதை நிரூபித்திருக்கிறீர்கள். அப்புறம் ஏன் உங்கள் மீது இவ்வளவு கடுமையான புகார்கள் வருகின்றன” எஸ்.பி. கேட்டார்.

“மனுசத்தன்மை செத்துப்போன மனுசங்க உள்ள உலகத்தில் தானே வாழறோம்”

மனுசங்களில் சிலர் பதுங்கி இருந்து படம் எடுத்து விஷம் கக்கிற பாம்புங்க. பொய், பித்தலாட்டம்,

புனைசுருட்டு, சூது, லஞ்சகம் இதுகளை வயித்திலே சுமந்துகிட்டு திரியறாங்க."

"இதுபோன்ற புகார்களில் நாம்தான் ஜாக்கிரதையாக இருக்கணும். சரி, பார்த்துக் கொள்ளுங்கள். பியூன் பரமசிவம் தொடர்பான புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுங்கள்" என்று ஒரு பைலை கொடுத்து விடை கொடுத்தார் எஸ்.பி.

"மாவட்ட கல்வி அதிகாரி இஸ்மாயில் இத்துடன் தொலைந்தார்" என்று, கூட்டுறவு கடன் சங்கத்தில் பரமசிவம் தலைமையில் ஜால்ரா போடும் அதிகாரிகள் விழா கொண்டாடிக் கொண்டிருந்தனர். பாட்டில்களும், பிரியாணிப் பொட்டலங்களும் காலியாகிக் கொண்டே இருந்தன. அறையெங்கும் சிகரெட் புகை சூழ்ந்திருந்தது.

இரவு மணி ஒன்பது. தன் நிலை மறந்து இருந்த அதிகாரிகளும், பரமசிவமும் திடீரென போதையிலும் பரபரத்தனர். எதிரே, மாவட்ட ஆட்சியர் தலைமையில் காவலர்கள் புடைசூழ இஸ்மாயில் துணையுடன் கட்டிடத்தை சூழ்ந்தனர்.

அரசு அலுவலகத்தில் உள்ள சங்கத்தில் முறையின்றி நடந்து கொண்டதாக அனைவரும் கைது செய்யப்பட்டனர். சங்கம் பூட்டி சீல் வைக்கப்பட்டது.

மறு நாள், அதிகாலையிலிருந்து பரமசிவம் தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் தூசித் தட்டப்பட்டன.

கடன் சங்கக் கணக்குகள் மீண்டும் தணிக்கை செய்யப்பட்டன. கல்வி அலுவலகத்திலும் முறையின்றி பணிமாற்றம் பெற்ற பல கோப்புகள் ஆராயப்பட்டன.

முறையான விசாரண தொடங்கியது. நாள்தோறும் அமைச்சரிடமிருந்தும், ஆளுங்கட்சி எம்.எல். ஏக்களிடமிருந்தும் விசாரணையை நிறுத்த சிபாரிசுகள் வந்தவண்ணம் இருந்தன. எல்லாவற்றையும் அலட்சியப் படுத்தினார் இஸ்மாயில்.

ஜாமீனில் வந்த பரமசிவம் அடிப்பட்ட பாம்பாக சுற்றித் திரிந்துக்கொண்டிருந்தான். பலவகையிலும் வீசாரணைக்கு இடையூறு தந்தான். நீதிமன்றத்தில் ஸ்டே வாங்க முயற்சித்தான். முடியவில்லை. அவனது மூளை சாணக்கியத்தனமாக சாமர்த்தியத்துடன் இஸ்மாயிலை விரட்ட சிந்தித்துக் கொண்டே இருந்தது. ஜால்ரா கூட்டங்கள் தலைமறைவாயின.

விசாரணையில் முக்கிய கட்டம் நெருங்கி கொண்டிருந்தது. முப்பது நாட்களாக இரவும் பகலுமாக இஸ்மாயிலும் மற்ற அதிகாரிகளும் கணக்குகளையும், பைல்களையும் தோண்டி கிளறினார். சங்கத்தில் பல இலட்சங்கள் பொய்யாக கணக்கு எழுதி சுருட்டப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

முறையற்ற விதத்தில் விதிகளுக்கு புறம்பாக பணிமாற்றம் பெற்றது கண்டுபிடிக்கப்பட்டது. பரமசிவத்தின் சிபாரிசால் டிரான்ஸ்பர் வாங்கிய பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன.

ஒரு வழியாக சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் புலனாய்வு செய்யப்பட்டு விட்டன. ஊழலின் கண்டுபிடிப்புகளுக்கு மொத்த வடிவம் கொடுக்கப்பட்டது. பல நாட்கள் ஓய்வின்றி உழைத்த இஸ்மாயில் 99 சதவீத பணிகளை முடித்த திருப்தியில் வீடு திரும்பினார்.

"பொழுது விடிந்ததும், முதற்காரியமாக விசாரணை அறிக்கையை ஆதாரங்களுடன் போலிசில் புகார் தந்து பதிவு செய்யணும். முதல் தகவல் அறிக்கை போட வைத்து நகலினை பெற வேண்டும். ஒரு இரவு எப்படித் தள்ளப் போகிறோம்? பூமியின் சுழற்சி நாளை காலை வரை வேகமாய் இருக்கக் கூடாதோ?" என்று எண்ணி கண்ணயர்ந்தார் இஸ்மாயில்.

நகரம் துயில் கலைந்துவிட்டது. பால்காரர்களின் மணி ஓசை குடும்பப் பெண்களின் சுறுசுறுப்பை கிளறிவிட்டன. இருளின் சாம்ராஜ்யம் கலைந்தது. இளஞ்சூரியன் கதிர்களை நீட்டினான்.

வீட்டு காலிங்பெல் அடித்தது.

"சார் தந்தி" போஸ்ட் மேன் நின்றார்.

கையெழுத்து போட்டு தந்தியை வாங்கி பிரித்து படித்தார் இஸ்மாயில்.

"திருச்சி மாவட்ட கல்வி அதிகாரியாகிய நீர், உடனடியாக இந்த பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுகிறீர். கன்னியாகுமரி மாவட்ட கல்வி

அதிகாரியாக உடன் பொறுப்பேற்கவும்" தலைமை அலுவலகத்திலிருந்து உத்தரவு பறந்து வந்திருந்தது.

இஸ்மாயிலின் அமைதியைக் குலைப்பது போல போன் கிணுகிணுத்தது.

தனது இடத்தில் புதிய கல்வி அதிகாரி பணி ஏற்றதாக போனில் உதவியாளர் சொன்னார்.

கன்னியாகுமரிக்கு சென்று தனது பணிகளைத் தொடர ஆயத்தமானார் அரசு அதிகாரி இஸ்மாயில்.

வாழ்வில் மாறுதல்கள் தவிர்க்க முடியாதவை.

வளர்ச்சிக்கு அவசியமானதுங் கூட

உலகத்திற்கு வெளிச்சம் தரும் சூரியனை அடுப்புக்கு நெருப்பாக்கியது போல, சந்திரனை வீட்டுக்கு விளக்காக்கியது போல, நேர்மையான இஸ்மாயிலை ஆக்கிவிட்டது இச்சமுதாயம்.



# 11. ஊருக்கு உபதேசம்

"தாத்தா உன் புத்தகத்தில் என் போட்டோ வந்திருக்கு" பத்து வயது பேரன் சொன்னான்.

"ஆமாண்டா கண்ணு குழந்தைகள் வளர்ப்பு கட்டுரையில் உன் போட்டோ தான் போட்டிருக்கிறேன்."

"ஸ்கூலுக்கு எடுத்துட்டுப்போய் டீச்சருக்குக் கொடுக்கட்டுமா தாத்தா"

"நீ கொடுப்பதற்கு முன் டீச்சரே புத்தகம் படிச்சுருப்பாங்கடா"

"உம் - உம் நீ கொடு"

சரி எடுத்துக்கோ.

"பேரக் குழந்தைகளிடம் விளையாடியது போதும் பத்திரிக்கை ஆபிசுக்கு கிளம்புங்க" வயதான மனைவி காலத்தை உணர்த்தினார்.

"டிரைவரை கூப்பிடு"

"கண்ணுசாமி கண்ணுசாமி" ஓடிவந்தான் டிரைவர்.

"அய்யா கிளம்பிட்டாங்க காரை எடு"

பளீரென்ற வெள்ளை வேஷ்டி - முழுக்கை சட்டை, கண்ணாடி - நீண்ட முகம் - மாநிறம் - சராசரி உயரம். எழுத்தாளர் ராமசாமி காரில் பயணித்தார். "ஏப்பா கண்ணுசாமி, நேற்று பியூன் மூர்த்தி வீட்டுக்குப் போனப்ப பொடி டப்பாவை மறந்து வைச்சுட்டேன். வழியில் புது பொடி டப்பா வாங்கிட்டு போகலாம்."

சரி அய்யா.

வழியில் காரை நிறுத்தி பொடி டப்பா வாங்கினார். பெட்டிக்கடையில் பெண் மாத இதழ் பத்திரிக்கை நிறையத் தொங்கிக் கொண்டிருந்தன. இந்த வாரம் ஏன் நமது பத்திரிக்கை சரியாக போணியாகவில்லை என்ற கடுப்புடனே தனது பத்திரிக்கை அலுவலகத்தில் நுழைந்தார்.

எழுத்தாளர் உலகில் ஜாம்பவான் ராமசாமி. தமிழகமே தெரிந்து வைத்திருக்கும் இவர் எழுதாத பத்திரிக்கைகளே கிடையாது. “பெண்” என்ற மாத இதழைத் தனியே நடத்தி வருகிறார். மாதப்பத்திரிக்கை சர்குலேஷனில் ஏழாவது இடம் வகிக்கும் பத்திரிக்கை.

எழுபது வயதிலும் எழுத்தில் உரம் பெற்ற வார்த்தைகளை உலாவிடும் ஆற்றல் பெற்றவர். சாகித்ய அகாடமி விருது பெற்றவருக்கு மனைவி, மூன்று பிள்ளைகள், எட்டு பேரக் குழந்தைகள்.

டெலிபோன் சிணுங்கியது.

ரிசீவரை எடுத்தார் ராமசாமி.

“வணக்கம். சௌக்கரியமா? எங்களை மறந்துட்டீங்க போலும்”

“வணக்கம். உங்களை எப்படி மறப்பேன். பத்திரிக்கையுலகில் பிரபலமான பத்திரிக்கை உரிமையாளராச்சே.”

“இல்லை மறந்துட்டிங்க. தனியாகப் பத்திரிக்கை தொடங்கியதிலிருந்து எங்களுக்குக் கதை தருவதில்லையே”

"நேரம் கிடைக்கவில்லை"

"மாதம் ஒன்றாவது அனுப்பக் கூடாதா"

"சரி முயற்சி செய்கிறேன்"

"நன்றி அய்யா"

"இவங்க தொந்தரவு தாங்கலையப்பா" தனியாகப் பத்திரிக்கை நடத்தி ஏகப்பட்ட செல்வம் சேர்த்த ராமசாமிக்கு மற்ற பத்திரிக்கைகளுக்கு எழுதுவதை குறைத்துக் கொண்டார். இயல்பு தானே? வளருவதற்கு ஏணிப்படிகள் தேவை. வளர்ந்தபின் தேவையில்லையே என்று கருதும் ராமசாமி வாழும் உலகமில்லையா இது.

ராமசாமியின் அந்தரங்கங்கள் அவரது மனைவிக்கோ, குடும்பத்திற்கோ, பேரப்பிள்ளை களுக்கோ தெரியாது. டிரைவர் கண்ணுசாமிக்கும், பியூன் மூர்த்திக்கும் அத்துப்படி.

ராமசாமியின் தேவைகளை இருவரும் உணர்ந்தவர்கள். பத்திரிக்கை உலக ஜாம்பவானின் இரகசியங்கள் இருவருக்கு மட்டுமே தெரியும். ஆனால் இந்த இருவரும் இரகசியம் காக்கும் சீடர்கள்.

"என்ன எடிட்டரே, புத்தக விற்பனையில் சரிவு ஏன் வந்தது?" கோபமாகக் கேட்டார் ராமசாமி. "ஐயா, நீங்க கதை எழுதும் மாதம் சர்குலேசன் நார்மலாக இருக்குது. உங்கள் கட்டுரைகள், கதைகள் மாதர் சங்கங்களைக் கவர்ந்திழுக்கின்றன. பெண் வாகர்களையும் கவர்ந்து இழுக்கின்றன. இனி உங்கள் பக்கங்களை அதிகமாகத் தொடர்ந்து வெளியிட வேண்டும் அய்யா."

"அப்படியா?" சரி அடுத்த மாதம் கற்பு சிறப்பிதழை வெளியிடுவோம்.

"சரி அய்யா"

விடைபெற்றுக் கொண்டார் எடிட்டர்.

பெல்லை அழுத்தினார் ராமசாமி.

"ஐயா" - மூர்த்தி பணிந்து நின்றான்.

"சர்க்குலேசன் மேனேஜரை கூப்பிடு"

சிறிது நேரத்தில் சர்க்குலேசன் மேனேஜர் வந்தார்.

"குட்மார்னிங் சார்"

"யெஸ்"

"இந்த மாத சர்குலேசனில் மற்ற பத்திரிக்கைகள் எவ்வாறு உள்ளன?"

"தெரியாது சார்".

"புண்ணாக்கு"

"உலக அறிவே கிடையாது உனக்கு."

மன்னிக்கணும் சார், நமது பத்திரிக்கையின் சர்குலேசனிலேயே முழுக்கவனமும் செலுத்துவதால் சூழ்நிலைகளைக் கவனிப்பதில்லை சார்.

"சரி உலகிலேயே புத்தகம் வெளியிட்ட வாரத்திலே முப்பது லட்சம் புத்தகம் விற்பனை செய்த பத்திரிக்கை எது தெரியுமா?"

தெரியாது சார்.

"நீயெல்லாம் சர்க்குலேசன் மேனேஜர்? ஜகூவை வளர்த்துக் கொள்".

"சரி"

"ஹேரிபாட்டர் ஆண்ட் தி காப் லெப் ஆப்லைஃப் என்ற அறுநூற்று நாற்பது பக்கங்களுடன் வெளிவந்த நாவல் அக்டோபர் இரண்டாயிரத்தில் வெளியான முதல் வாரமே முப்பது லட்சம் புத்தகங்கள் விற்பனை ஆகியது."

"அப்படியா சார்"

"இதனை எழுதியவர் யார் தெரியுமா?"

"தெரியாது சார்"

"பிரிட்டனைச் சேர்ந்த ஜே.கே. ரோலிக் என்ற விதவை எழுத்தாளர். கோடீஸ்வரி. இவர் உருவாக்கிய "ஹேரிபாட்டர்" என்ற கதாபாத்திரம் ஒரு பையன். இதுவரை எழுபாகம் வெளிவந்துள்ளது. தமிழகத்திலும் விற்பனை பிச்சு உதறுதய்யா?"

"பெல்லை அழுத்தினார்"

மூர்த்தி ஒடி வந்தான்.

"போய் சூடா காபி கொண்டா"

காபியை குடித்தவுடன் ஊக்கமெனும் உற்சாகத்தை ஜே.கே. ரோலிக் வடிவில் ஏற்றிக் கொண்டார். அழகான கதை ஒன்றை வடிவமைத்தார். "கற்பு" என்ற பெயரிட்டார்.

கற்பு என்ற தலைப்பில் கற்பெனப்படுவது ஒரு மன ஒழுக்கம் என்று தொடங்கிய உன்னதமான ஒருகதையை அடுத்த இதழுக்காக அமைத்தார் ராமசாமி.

கிராமத்தின் எழில் நிறைந்த நந்தவனமாய் காட்சிதரும் பாரம்பரியமிக்க மடம். மடத்தில் எழுபதாவது குருமார் ஆட்சி செய்து வருகிறார். நாடெங்கும் பரந்து விரிந்த மடத்தின் அதிபதிக்கு எல்லா வசதிகளும் வாய்ப்புகளுமுண்டு. ஒவ்வொரு நாளும் மாலையில் மடாபதி ஊர்மக்களுக்கு உபதேசம் செய்வார். உபதேசம் பெறும் அன்பர்களில் மெய்யப்பனும் ஒருவன். மடாதிபதியைக் குருவாக வணங்கி மகிழ்வான்.

உபதேசம் இல்லாத நேரங்களிலும் மடாதிபதியான குருவுக்கு சேவை செய்வது புண்ணியம் என்று சேவகம் புரிந்தான். ஒருநாள் சேவகம் செய்யும் போது தனது மனைவி பத்மினியை அழைத்து வந்தான்.

பத்மினியை பார்த்த மடாதிபதி அவளது அழகில் மனதைப் பறிகொடுத்தார். சிஷ்யனிடம் குரு காணிக்கையாக அவன் மனைவியை ஓர் இரவு விருந்தாக கேட்டார்.

குரு சொல்மிக்க மந்திரமில்லை என்று கருதும் மெய்யப்பன் மனைவியை அந்த இரவு அழைத்துப்போய் விட்டு வந்தான். யாருமில்லா இரவில் பத்மினி அழகில் காமக் களியாட்டம் ஆட நினைத்த மடாதிபதியின் ஆசைக்கு, அன்று கடைசிநாள்.

பத்தினித் தெய்வம் கண்களால் சுட்டெரித்தாள். வார்த்தையால் சாட்டையடிக் கொடுத்தாள். வீறு கொண்டெழுந்த கற்புத் தெய்வத்திடம் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டான் மடாதிபதி. மறுநாள் காலை மடாதிபதி இன்றி மடம் வெறிச்சோடியிருந்தது.

அதே பத்திரிக்கையில் கற்பு குறித்து சிறப்புக் கட்டுரை ஒன்றையும் தானே எழுதி வெளியிட்டார்.

"கற்பு நெறியென்று சொல்ல வந்தால் இருகட்சிக்கும் அஃதை பொதுவில் வைப்போம்" பாரதி சொன்னதை வைத்து கட்டுரையைத் தொடங்கினார். ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவனாகவும் வாழும் வாழ்க்கை உன்னதமானது, உயர்வானது, அற்புதமானது என்று நமது கலாச்சாரத்தைத் தூக்கி உயர்த்தினார்.

தனி மனித ஒழுக்கத்தினையும் சமூக ஒழுக்கத்தையும் வலியுறுத்தியிருந்தார். பெண்களின் உடல் உறுப்புக்களை உறவுகளை அசிங்கப்படுத்தும் பத்திரிக்கைகளைச் சாடியிருந்தார். பொதுவாழ்வுக்கு வந்த பெண்களை ஏன் விமர்சிக்கிறீர்கள்? உங்கள் மனைவி, சகோதரி மகள்களாக இருந்தால் விமர்சிப்பீர்களா?

எழுத்துக் கசடர்களையும் யோக்கியமாக வேஷமிட்டு அலையும் வக்ரப் புத்தியுடைய எழுத்தாளர்களுக்கும் சாட்டை அடி கொடுத்தார். எழுத்துக்களை விலை பேசும் எழுத்தாளர்களையும் வியாபாரிகளையும், தனது கட்டுரையில் சாடியிருந்தார். சினிமா வியாபாரிகள் பெண்களின் சதையைக் காட்டி பணம் பண்ணுகிறார்கள். அப்பாவி இளசுகளையும் பெரிசுகளையும் சதையில் மயக்கி வியாபாரம் பண்ணும் சினிமாக்காரர்களையும் ஒரு பிடி பிடித்திருந்தார்.

சமுதாயத்தில் எந்த விழாவாகட்டும் விளக்கேற்றுவது ஒரு சதை, பூங்கொத்து தருவதும் ஒரு சதை, சர்டிபிகட் மெடல் தருவது ஒரு சதை, காம்பியர் பண்ணுபவரும் ஒரு சதை, எப்.எம்.ரேடியோவை ஆண் செய்தால் அங்கும் ஒரு சதை காம்பியரின் மழலை மொழி. எங்குப்

பார்த்தாலும் ஏன் சதைப்பிண்டகளாக பெண்களை வியாபாரம் செய்கிறீர்கள்? என்று பெண்களின் அவலநிலையை அதில் சாடியிருந்தார்.

கற்பு என்பது இருபாலருக்கும் உரிய மன ஒழுக்கம் என்று கட்டுரையை நிறைவு செய்திருந்தார்.

கற்பு பற்றிய தலையங்கத்தில், ஆசிரியர் இந்திய பெண்கள் பற்றிய கற்பின் பெருமையைத் தனது அனுபவத்துடன் எழுதினார். ஒரு சமயம் டில்லியில் நடைபெற்ற எழுத்தார்கள் மாநாட்டில் அமெரிக்கப் பெண் எழுத்தாளரிடம் உரையாடியது தன் நெஞ்சை நெகிழ வைத்தது குறித்து குறிப்பிட்டிருந்தார்.

"தமிழ் எழுத்தாளர் ராம் அவர்களே, வணக்கம்."

"வணக்கம்"

"உங்கள் நாட்டில் எப்படி அய்யா, ஒரு பெண்ணுடனேயே கடைசி வரைக்கும் வாழ்கிறீர்கள். அலுப்பு தட்டவில்லையா?"

"இல்லை, எங்கள் நாட்டின் கற்பு விலை மதிக்க முடியாதது"

"கற்பு என்றால் என்ன?"

"ஒரு ஆடவன் ஒரு பெண்ணுடனேயே இறுதி வரை வாழ்வது"

"அம்மா, நம் தலையில் வேர்வை ஒன்றோடொன்று சேருவது பேன்களாகவும் ஈராகவும் மாறுகிறது.

படுக்கையில் இரண்டு பேருடைய வியர்வை மூட்டைப் பூச்சியாகிறது."

"ஒரு கருப்பையில் இரண்டு ஆணின் விந்து விழுந்தால் எய்டஸ் மட்டுமல்ல, என்னென்னவோ வரும். அதனால் தான் எங்கள் நாட்டில் கற்பு நெறியை கலாச்சாரமாக மதிக்கிறோம்."

இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த அமெரிக்க எழுத்தாளர் பெண்மணி, இவ்வளவு விஷயங்கள் எங்களுக்குத் தெரியவில்லை அய்யா, "எனக்கு அடுத்த பிறவி ஒன்று இருந்தால் உங்கள் நாட்டில் அதுவும் தமிழ்நாட்டுப் பெண்ணாகப் பிறக்க வேண்டும்" என்று கண்ணீர் மல்கக் கூறினாராம்.

நம் நாட்டு கற்பு, கலாச்சாரத்திலும் உடல் ஆரோக்கியத்துடனும் பிணைக்கப்பட்டுள்ளதாகும். கற்பு தெய்வாம்சம் பொருந்தியதாகும் என்று அந்த மாத தலையங்கத்தை முடித்தார்.

"கற்பு" என்ற தலைப்பில் தலையங்கம், கதை, துணுக்கு என்ற அந்த மாத இதழ் களை கட்டிவிட்டது. சர்க்குலேஷன் மானேஜருக்கு சந்தோஷம் பிடிபட வில்லை. பல வியாபாரிகளும் புத்தகங்கள் போதவில்லை என்று தொடர்ந்த போன் கால்கள் - நெகட்டிவை எடுத்து லட்சம் காபி கூடுதலாகப் போட்டு அனுப்ப வேண்டியதாயிற்று.

ராமசாமியின் படைப்புக்குத் தொடர்ந்து மாதர்சங்கங்கள் பாராட்டுகள் குவிந்தன. எத்தனையோ விருதுகளும்,

பாராட்டும் பார்த்த நம் ராமசாமிக்கு இப்போதெல்லாம் பாராட்டுகள் அலுத்துப் போய்விட்டது. பணமும், பதவியும் தான் அவரைத் திருப்திப்படுத்தின. பணமும் பதவியும் வரவர தன் ஆசைகளும் வேறு திசையில் சென்றன.

வயதான மனைவி, சலிச்சுப்போன சாப்பாடு, கற்பாவது கத்தரிக்காயவது. மாற்றான் தோட்டத்து மல்லிகையின் மணம் நுகர்பவர். அன்று சனிக்கிழமை. பெல்லை அழுத்தினார். மூர்த்தி ஓடி வந்தான். "என்ன சாப்பிட போகலாமா?" மூர்த்தி தலையசைத்தான்.

மூர்த்தி, ராமசாமியின் பிரதான வேலையாள், ஆபிஸ் பியூன், இருபது வருடமாக ராமசாமியின் நிழலாக அவருக்கு பணிவிடை செய்பவன். மூன்று குழந்தைகள். - மனைவி -குறைந்த சம்பளம். தாம்பரத்தின் ஒதுக்குப் புறத்தில் தனக்கேற்ற தனிவீட்டில் குடியிருக்கிறான். மாதச் சம்பளம் சாப்பாட்டுக்கே போதவில்லை. மூத்தவள் பத்தாவது படிக்கிறாள், இரண்டாவது பெண் எட்டாவது வகுப்பு, கடைசி பையன் ஏழாவது படிக்கிறான்.

வறுமையில் வாழும் குடும்பம். வறுமை இருக்கும் இடத்தில் அழகு குடிகொண்டிருக்கும். மூர்த்தின் மனைவி வனிதா மூப்பத்தைந்து வயதிலும் என்றும் இளமை - சிவந்த மேனி, சிரிச்ச முகம் - வறுமையைக் காட்டும் கண்கள்.

"டிபன் பாக்சை மறக்காமல் பையில் எடுத்துக்குங்கள்" மூர்த்தியின் மனைவி வனிதா.

"அப்பா எனக்கு நோட்டு வாங்கி வாங்க" மூத்த பெண்.

"அப்பா புத்தகம் வாங்க காசு வேணும்பா" இரண்டாவது பெண்.

"அப்பா எனக்குச் செருப்பு வாங்கி வாப்பா" கடைசி குட்டி.

"மறக்காமல் வரும்போது அரிசியும், மளிகைச் சாமான்களும் வாங்கி வாங்க" மனைவி.

எல்லாக் கோரிக்கைகளையும் மனதில் சுமந்து, சாப்பாட்டு டப்பாவுடன் மாதப் பத்திரிக்கையின் சில பிரதிகளையும் பையில் எடுத்துக்கொண்டு தாம்பரம் வரை சைக்கிளிலும் மாம்பலம் வரை மின்சார ரயிலிலும் தினமும் பயணிக்கும் பியூன் மூர்த்தி சுறுசுறுப்பானவன். தன் முதலாளி ராமசாமி மேல் அளவு கடந்த பற்றும், மரியாதையும் வைத்திருப்பவன். தாம்பரத்தை அடுத்து ஒதுக்குப்புறமான நகரில் எப்படித்தான் வீடுகள் அடுக்கடுக்காய் தோன்றியதோ தெரியவில்லை.

காலை ஏழு மணிக்கு கிளம்பினால் இரவு ஒன்பது மணிக்குத்தான் பறவைகள் வீடு சேருவது போல் மூர்த்தி வீட்டிற்கு வருவான். பத்திரிக்கை ஆபிசில் பியூனாகவும், பைண்டராகவும், அச்சு மிஷினிலும் என்று பலவகைப் பணிகளிலும் ஈடுபட்டு உழைப்பான். ராமசாமியின் நிழலாக இருப்பான்.

டிரைவரைக் கூப்பிடு.

"கண்ணுசாமி, மணி என்ன?"

“பதினொன்று முப்பதுங்க”

“சரி இன்றுமதியம் சாப்பாட்டுக்கு மூர்த்தி வீட்டுக்கு போகலாம்”

“தாத்தா வந்தால்தான் எல்லாம் வாங்கி வருவார். அப்பா வாங்கி வரமாட்டார்” என்பது மூர்த்தியின் குழந்தைகளுக்குத் தெரியும், வனிதாவுக்கும் தெரியும்.

தாத்தா வந்தால் குடும்ப சுமையில், வறுமையின் ஒரு பகுதி குறைந்த திருப்தி மூர்த்திக்கு.

தாத்தா வந்தால் குழந்தைகளுக்கு குஷி. ஏன் வனிதாவுக்கும் குஷிதான்.

மாதம் மூன்று அல்லது நான்கு முறை சனிக் கிழமைகளில் மூர்த்தி வீட்டுக்கு வருவது ராமசாமியின் வழக்கம். அரைநாள் ஓய்வெடுத்துக் கொள்வது வாடிக்கை. தாத்தாவின் விஜயம் மூர்த்தி குடும்பத்திற்கு வசந்த நேரமாகும்.

காரில் எழுத்தாளரும், மூர்த்தியும், டிரைவரும் பயணித்துக் கொண்டிருந்தார்கள். ஒதுக்குப்புறமாக காரை நிறுத்தினார்கள். ராமசாமி மூர்த்தியின் வீட்டினுள்ளே சென்றார்.

வழக்கம் போல் மூர்த்தியும் மூன்று குழந்தைகளை, அரைநாள் பிக்னிக்காக கடற்கரை நோக்கி ராமசாமியின் காரில் பயணித்துக் கொண்டிருந்தார்கள்.

“அப்பா! தாத்தா வந்தால் தானே எங்களை காரில் அழைத்துப் போகிறாய்? தாத்தா வந்தால்தானே ஐஸ்கீரிம்


வாங்கித் தருகிறே? தாத்தா வந்தால்தானே ஹோட்டலில் டிபன் வாங்கித் தருகிறே?" என்றாள் மூத்தப் பெண்.

"ஆமாண்டா கண்ணு. தாத்தா தான் கார் வைத்திருக்கிறார். தாத்தா தான் நமக்கு பணம் தருகிறார். சாப்பாடு போடுகிறார். ஐஸ்கீரிம் வாங்கித் தருகிறார்".

ராமசாமி வாரந்தோறும் உடற்பசியைத் தீர்த்துக் கொள்கிறார். வறுமையுற்ற மூர்த்தியின் குடும்பம் குடல் பசியைப் போக்கி கொள்கிறார்கள்.

எழுத்தாளரின் எழுத்துக்கள் ஊருக்குத்தான் உபதேசமா?

பாயும் புலியின் கொடுமையை இறைவன்
பார்வையில் வைத்தானே! - புலியின்
பார்வையில் வைத்தானே! - இந்தப்
பாழும் மனிதன் குணங்களை மட்டும்
போர்வையில் மறைத்தானே! - இதயப்
போர்வையில் மறைத்தானே!



# 12. அந்த நாட்கள்

புது தில்லி,
25.10.2004.

என் இனிய நண்பன் பார்த்தசாரதிக்கு,

பிரியமுள்ள உன் நரேந்திரன் எழுதியது. இங்கு நான், மனைவி, குழந்தைகள், அம்மா அனைவரும் நலம். உன் வீட்டில் எல்லோரும் நலந்தானா?

உன் கடிதம் கிடைத்து, ஒரு மாதமாகியும் இன்று தான் கடிதம் எழுத நேரம் கிடைத்தது. தொலை தொடர்பு சாதனங்கள் வந்த பின்பு. போனும் செல்லும், ஈமெயிலும், கடிதம் எழுதுவதை ஓரங்கட்டி வருகிறது.

காலையில் ஐந்து மணிக்கு எழுகிறேன். நான்கு மணிக்கே மனைவி இயந்திரமாகிறாள். நாட்டின் இருதயமான டில்லி செக்ரட்டிரியேட்டுக்கு எப்போது வாழ்க்கைப்பட்டேனோ, அன்றிலிருந்து இன்று வரை இயந்திரமாக இயங்குகிறேன்.

பாராளுமன்றக் கூட்டம், பட்ஜெட், மாநிலங்களின் பிரச்சினை என்று ஒவ்வொன்றாக மாறிமாறி வரும் பிரச்சனைகள். ஒரு சந்தோஷம். செகரட்ரிகளில் தமிழ்நாடு ஜாம்பவான்கள் தான் இங்கு பிரகாசிக்கிறோம். ஆனால், ஓய்வு உலைச்சல் இல்லை.

இன்னைக்கு காலையிலே எழுந்து கடமைகளை முடித்தேன். ஆறு மணிக்கே ஸ்டெனோகிராபர் வீட்டுக்கு வந்துட்டார். இன்றைய முதல்வரின் மாநாட்டில் முக்கிய

கோப்புகளை டிக்டேட் செய்தேன். எட்டு மணிக்கு சாப்பிட்டேன். ஒன்பதுக்கெல்லாம் வந்துட்டேன். பதினொரு மணிக்கு பிரதமர் தலைமையில் கூட்டம். அருகில் இருந்து அனைத்து காரியங்களையும் பம்பரமாய் செய்தேன். ஒரு மணிக்கு லஞ்ச். அப்பாடா! என்று ரூமில் சிறிது ஓய்வெடுத்தேன். இந்த நேரத்தில் உனக்கு கடிதம் எழுதுகிறேன்.

டில்லியில் பனி தாங்கல. வயசாயிருச்சோ இல்லை. நேற்று இராத்திரி நடு இரவு இரண்டு மணிக்கு பனியுடன் மழைத்தூறல். பால்கனியில் வந்து நின்றேன். வராண்டாவில் கார் நினைவதையும், மரங்களின் கூட்டத்தையும், சாலை விளக்கின் வெளிச்சத்தில், கம்பி மத்தாப்பூ பொறி போலச் சிதறும் மழைத்தூறலை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு பள்ளிக்கூட நாட்களில் ஸ்கவுட் கேம்ப் போனது ஞாபகத்துக்கு வந்தது. உனக்கு நினைவிருக்கிறதா?

மன்னார்குடி பக்கத்தில் என்ன ஊர் அது? நீடாமங்கலம் தானே? காவிரி ஆறு ஓடுமே? அதுதானே? பி.இ.டி. மாஸ்டர் தலைமையில் பத்து பேர் சென்று, அந்த ஊர் பள்ளிக்கூடத்தில் தங்கி, சமூகப் பணிகள் செய்தோமே?

அந்த ஐந்து நாட்களையும் இன்றைக்கு என்னால் மறக்கவே முடியலை சாரதி. அர்த்தமுள்ள நாட்கள் என்றும் மனதில் நிழலாடுகின்றன. காவேரி ஓடிய அந்த கிராமம். வெள்ளை மனசு மக்கள். வீடவீடாய் சென்று சிறுசேமிப்பு பற்றியும், சுத்தம் பற்றியும், குடும்பக்

கட்டுப்பாடு பற்றியும், வயதை மீறிய போதனைகளை அள்ளித் தெளித்தோமே?

அவர்கள் தந்த நாவற்பழங்களையும், வெள்ளரிப் பிஞ்சுகளையும், எலந்தப் பழங்களையும் நினைத்தால், நாக்கில் நீர் ஊறுகிறது. காவிரியில் குளித்து கும்மாளமிட்ட நாட்கள். அந்தப் பசுமையும், வரப்புகள் வகிடெடுத்த வயல் வெளியும்.

கிராமத்து மக்களைப் போலவே, எதையும் எதிர்பாராமல் வீசிவிட்டுப் போகும் தென்றலும், ஊர்மக்களின் விருந்தோம்பலும், பாமரத் தன்மையும், குயிலின் சத்தமும், காவிரித் தண்ணீரின் சலசலப்பும், இன்றும் பசுமையாகத் தெரிகின்றது.

நாம் நட்ட மரங்கள் எல்லாம் இப்போது பலன் தந்து கொண்டிருக்குமில்லையா? நீ சொல்லிதான் அந்த மகப்பேறு நிலையம் கட்ட மத்திய அரசு உதவிக்கு ஏற்பாடு செய்திருந்தேன். இன்று பெரிய கட்டிடத்தில் குழந்தைகள் பிறந்து கொண்டிருக்குமில்லையா?

மாஸ்டருடன் சேர்ந்து டூரிங் தியேட்டரில் ஒரு படம் பார்த்தோம் தெரியுமா? என்ன படம் அது? பச்சை விளக்கு. பாதியிலே கரண்டு நின்று பச்சையும் இல்லை. விளக்கும் இல்லை. சிகரெட்டு புகையும், சாராய நாத்தமும் காற்றில் வந்ததே. பாதிப் படத்தோடு திரும்பினோமே?

இந்த இடத்தில் மீண்டும் ஒரு முறை தங்க ஆசை. சரி, நம்மூர் பெருமாள் கோயிலில் புரட்டாசி மாதம் பதினெட்டு நாள் திருவிழா பார்த்து எத்தனை வருடமாச்சு. கருட சேவைக்கும் வெண்ணெய்தாழிக்கும்

வீடு நிறைய விருந்தாளிகள். நானும், நீயும் ஒவ்வொரு நாளும் பெருமாளுக்கு என்ன வாகனம்? என்ன அலங்காரம்? என்று பேசிப் பேசியே கூட்டத்தில் கரைந்திருப்போம்.

வானவேடிக்கையின் போது, சுகுமார் வீட்டு மாடியில் முன்னதாகப் போய் இடம் பிடிப்போம். உற்சவப் பெருமாள் போனதும், பின்னால் வேதமந்திரங்கள் ஓதும் கூட்டத்தில், நம் கணேசனின் அப்பாவும் மந்திரங்கள் ஓதிப் போவாரே? அவர் இப்போது இருக்கிறாரா?

ஹரித்திரா நதி தெப்பக் குளத்தில் பச்சை நிற தண்ணீர் இருக்கிறதா? ஒருமுறை குளத்தில் தண்ணீர் இல்லையென்று தெப்பத்தையே நிறுத்தியது உனக்கு ஞாபகமிருக்கா? கோயிலைச் சுற்றி திருவிழாக் கடைகள் இருக்குமே? சுடச் சுட பஜ்ஜி, பிளாஸ்டிக் பூ, விளையாட்டு சாமான்கள், வறுத்தக் கடலை, ஒட்டு மீசை, ரப்பர் பந்து, பூதக் கண்ணாடி போன்ற நூறு வியாபாரம் நடக்குமே! பாம்பு உடல், மனித தலை காட்டி, கிணறுக்குள் மோட்டார் சைக்கிள் ஓட்டும் லேடி. இதெல்லாம் இப்போதும் நடக்குதா?

ஒத்தைத் தெரு பிள்ளையார் எப்படி இருக்கிறார்? அவரைத் தரிசிக்காமல் நாம் ஸ்கூல் சென்றதில்லை. பரிட்சையின் போது. கூடுதலாக மூன்று தடவை சுற்றுவோம். தோப்புக்கரணமும் அதிகமாய் போடுவோமே? பிள்ளையாருக்கு இந்த பூ போட்டிருந்தால் பரீட்சை எளிமை. இந்த பூ போட்டிருந்தால், பரீட்சை கடினம். இதெல்லாம் நம் நம்பிக்கை. இப்ப நினைச்சா சிரிப்பா வருது.

அடிக்கடி நம்ப பள்ளிக்கூடத்தை நினைச்சுக் கிறேன். அந்தக் கிறிஸ்டியன் ஸ்கூலிலே கத்துக்கிட்ட ஒழுங்கும், படிப்பும்தான், நாம் புகழேணியில் இருக்க ஏணியாய் இருந்தது. நம்ம வாத்தியார்கள் டேனியல், தாமஸ், சண்முகசுந்தரம், சாமுவேல் எல்லோரும் இப்ப உயிரோடு இருக்காங்களா? நம்மோட படிச்ச ஜேம்ஸ்தான் இப்ப பள்ளிக்கூட ஹெட்மாஸ்டர்னு கேள்விப்பட்டேன். டேனியல் வாத்தியார் என்னமாய் இங்கிலீஷ் கிராமர் எடுப்பார். சண்முக சுந்தரம் வாத்தியார் கணக்கு கிளாஸ் பிரமாதமாக இருக்குமே?

எட்டாவது வகுப்பில், செவ்வகத்திற்கு அவர் சொன்ன மைசூர்பாகு உதாரணம் இன்னும் நினைவில் ஊஞ்சலாடுகின்றது. இப்பெல்லாம் டியூசன், டியூசன் என்று அலையுறாங்க. நம்ம காலத்திலே அமலதாசன் பிரின்ஸிபால் நடந்து வந்தார்னா, வாத்தியாரெல்லாம் பயப்படுவாங்க. பள்ளியிறுதி வகுப்பில் அத்தனை பேரும் 100% தேர்ச்சி. என்ன தரமான கல்வி. கண்ணுலே தண்ணியே வருது.

இத்தனை வருட இடைவெளிக்குப் பிறகு, நம்மூரில் வந்து பத்து நாள் தங்கனும்னு ஆசை. நாம இரண்டு பேரும் சின்ன வயசிலே சுத்தனது மாதிரி எல்லா இடத்துக்கும் போகனும். ஆசை இருக்கு. ஆனால் இங்கு இயந்திர வாழ்க்கையை விட முடியவில்லையே?

ஓய்வு பெற்ற பின்னாவது வந்து இருக்காமலா காலம் போய்விடும்? சௌத் பிளாக்கில் செல்வாக்கு மிக்க

அதிகாரியாக புகழுடன் இருந்தாலும், ஓய்வு இல்லை. அமைதி இல்லை. வறுமை இல்லை. ஆனால், நிறைவில்லை. டில்லி பிடித்திருக்கிறது. முற்றிலும் அல்ல.

என்னதான் இருந்தாலும், நம்மூர் பசுமை. கோயில், குளம், அமைதி, திருவிழா இதெல்லாம் எனக்கு மீண்டும் கிடைக்குமா? என்னுடைய கற்பனை எல்லாம் வெட்டப்பட்டு விட்டனவா? வாழ்க்கையின் அர்த்தம் நாட்டுக்கு உழைப்பது மட்டும் தானே? அதற்கு மேலே ஏதோ ஒன்று இருக்கிறது. என் வேதனையும், வெறுமையும், வலியும் ஏதோ ஒருநாள் போய்விடும். இது எனக்கு மட்டும் வருகிறதா? எல்லோருக்குமே வருகிறதா? தெரியலை. வாழ்க்கையின் அர்த்தமே இன்னும் விளங்கலை. இயந்திர கதி மாறனுமில்லே?

இன்னும் நிறைய எழுதனும். நேரம் கிடைக்கும் போது எழுதுகிறேன். குடும்பத்தினரையும், நண்பர் களையும் கேட்டதாகச் சொல்லவும்.

அன்புடன்,
நரேந்திரன்.



# திரு பானுகுமார் எழுதிய நூல்கள்

| | ரூ. பை |
|---|---|
| எங்கே போகிறோம்? | 10.00 |
| சிம்லாவில் ஐந்து நாட்கள் | 10.00 |
| ஏழு ஆலயங்கள் | 15.00 |
| உடம்பின் உன்னதங்கள் | 15.00 |
| அறிவறிந்த மக்கட்பேறு | 20.00 |
| நினைவாற்றல் கலை | 15.00 |
| காலமே உன் உயிர் | 75.00 |
| டென்சனை வெல்வது எப்படி? | 50.00 |
| மாவீரன் நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் | 50.00 |
| புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் | 50.00 |
| ஓய்வுகால வாழ்க்கை | 25.00 |
| தவம் [சிறுகதைத் தொகுதி] | |
| செயலே விளைவு [சிறுகதைத் தொகுதி] | 40.00 |
| அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள் | 70.00 |
| தன்னம்பிக்கை மலர்கள் [நாளொரு நற்சிந்தனை] | 50.00 |
| தியானம் பழக 100 தியான சிந்தனைகள் | - |
| நபிகள் நாயகம் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் | - |
| போதிமரங்கள் [சிறுகதைத் தொகுதி] | - |
| அவசரப்பட்டு விட்டேன் [நாவல்] | - |
| மனதை மீட்டும் எண்ணங்கள் [கவிதைத் தொகுப்பு] | - |
| StressManagement | - |
| Brilliant Generations | - |
| Seven Temples | - |
| **ஒலி நாடாக்கள்** | |
| தன்னம்பிக்கை மலர்கள் | 50.00 |
| நினைவாற்றல் கலை | 50.00 |
| ஏழு ஆலயங்கள் | 50.00 |

## வாழ்த்துப் பூக்கள்

இவருடைய புத்தகங்கள் மனித குலத்திற்கு ஒரு கலங்கரை விளக்காகவும், நல்வழி காட்டியாகவும் அமைந்து ஒளி செய்யும் தன்மை கொண்டவை.

பொள்ளாச்சி. புலவர். க. தியாகராஜன்

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற முதுமொழியில் நெறிநின்று, இந்நூல் வடிவம் தந்து உலகுக்கு வழங்கிய திரு. பானுகுமார் அவர்களின் மனித நேயச் செயலை கம்பனின் சொற்களில் மானுடம் வென்றதம்மா என்று கூறி அவரை வாயார, நெஞ்சார வாழ்த்திடத் தோன்றுகிறது.

தலைமைச் செயலகம், திரு. கு. பாலசுப்பிரமணியம்,<br>
சென்னை துணை இயக்குநர், (ஓய்வு)

பல நூல்களைப் படித்து உண்மை விபரங்களை சேகரித்து ஒழுங்குபடுத்தி ஒரு அழகிய நூலாக உருவாக்கி இருக்கிறார்.

சென்னை. தென்கச்சி கோ. சுவாமிநாதன்.

பன்னூலாசிரியராகிய நண்பர் திரு. பானுகுமார், எளிமையாக இளையோர் படித்து உள்ளங்கொள்ளும்படி எழிலுற எழுதியுள்ளார். நூலாசிரியர் பானுகுமாருக்கு என் வாழ்த்துக்கள்.

முன்னாள் அரசுச் செயலர் டாக்டர்.ஔவை நடராஜன்,<br>
முன்னாள் துணைவேந்தர் எம்.ஏ.எம்.லிட்.பி.எச்.டி.

இந்நூலைப் படிப்போரின் வாழ்வினை நல்வழிப்படுத்தும் என்பதிலும் சம மனிதர்களிடத்திலும், இறைவனிடத்திலும் மெய் அன்பை வளர்க்குமென்பதிலும், இறையாட்சிக்கு தங்களை தகுதிப்படுத்தும் என்பதிலும் சந்தேகமில்லை.

தூர்தர்ஷன், டி.வி.பி. நோப்ளின்,<br>
சென்னை. தயாரிப்பு உதவியாளர்

வளரும் தலைமுறைக்கும் சாதிக்க நினைப்போருக்கும் நல்லதோர் காட்டு, துடிப்பு மிக்க சொல்லாற்றல் வளப்படுத்தும் உங்களின் சமூகத் தொண்டு வளர்க.

திருச்சி பழனியப்பன்.

என்றும் பயன் தரும்
இந்த இனிய,
நூலை பரிசாக
வழங்குவதில்
பெரு மகிழ்வுகொள்ளும்-
தங்கள்
அன்புள்ள,

.......................... 

## ஒழுக்கம்

எண்ணம், சொல், செயல், இவைகளின் விளைவாக தனக்கோ, பிறர்க்கோ, இன்றோ, பின்னோ, உடலுக்கோ, அறிவிற்கோ துன்பம் தோன்றாது இருக்கும் வகையில் ஆற்றும் செயல்முறை ஒழுக்கம் எனப்படும்.

## பண்பாடு

நான் எனது வாழ்நாளில் யாருடைய உடலுக்கும் மனதுக்கும் துன்பம் தரமாட்டேன்.

துன்பப்படும் உயிர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.

**வ. கோமதி.**
துணை வணிகவரிஅலுவலர்.

11A கீழ அக்ரஹாரம்,
நன்னிலம்.

சிறுகதை என்றால் என்ன? ஓர் அனுபவம், ஒரு நிகழ்ச்சி, ஓர் உணர்ச்சி எது வேண்டுமானாலும் ஒரு சிறுகதையை உருவாக்கிட முடியும். தான் பார்த்தது, கேட்டது கற்பனையுடன் இலக்கிய ரீதியாகக் காட்டும்போது ஒரு கதை உருவாகிறது.

இக்கதைத் தொகுப்பில் ஆசிரியர் மிகச் சிறந்த சிறுகதைகளைப் படைத்துள்ளார். ஒவ்வொரு கதையின் களனும், காலமும், ஒவ்வொரு வகையில் முதன்மை பெறுகிறது. கதை கூறும் திறன், கதையுத்திகள், ஆசிரியரின் அனுபவம் வாசகர்களை ஈர்ப்பதாக உள்ளன.

ஆசிரியர் கதைகளை நடத்திச் செல்லும் பாங்கும் அவர் தம் கதைகளுக்கு வலிவும், பொலிவும் அளிக்கின்றன. கதைகளைப் படித்து முடித்த பின்னர். கலை உலகில் சஞ்சரிக்கும் மன நிலை வாசகர்களுக்கு ஏற்படுகிறது. பொழுதுபோக்கு கதைகளாக அமையாமல் அறிவுக்கு விருந்தாக அமைந்த நல்ல கதைகளைப் படைத்த பானுகுமாருக்கு வாழ்த்துக்கள்.

**வ. கோமதி.**